# செங்கை ஆழியான்



# மாமன்னன் சங்கிலியன்

கமலம் பதிப்பகம்

# மாமன்னன் சங்கிலியன்

சாகித்ய ரத்னா செங்கை ஆழியான்

**கலாநிதி க. குணராசா**

**கமலம் பதிப்பகம்**

75/10 A, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| **நூல்** | : | **மாமன்னன் சங்கிலியன்** |
| | | (நாவல்) |
| முதலாம் பதிப்பு | : | டிசம்பர் 2012 |
| ஆசிரியர் | : | கலாநிதி செங்கை ஆழியான் க. குணராசா |
| உரிமை | : | திருமதி கமலா குணராசா |
| | | 75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம். |
| விலை | : | ரூபா. 225/= |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், |
| | | 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13. |
| | | தொ.பே: 0112330195 |
| ISBN | : | 978-955-1624-18-7 |

| | | |
|---|---|---|
| **Book** | : | **Maamannan Sankiliyan (Fiction)** |
| First Edition | : | December 2012 |
| Author | : | Dr. K. Kunarasa, B. A. Hons. (Cey), MA, PhD(Jaffna) SLAS I |
| Copyright | : | Mrs. Kamala Kunarasa |
| | | 75/10 A, Brown Road, Jaffna. |
| Published | : | Kamalam Pathippakam, Jaffna. |
| Price | : | Rs. 225/= |
| Printed | : | Unie Arts (Pvt) Ltd., |
| | | 48B, Bloemendhal Road, Colombo 13. |
| | | Tel: 0112330195 |
| ISBN | : | 978-955-1624-18-7 |

# முன்னுரை

**யா**ழ்ப்பாண இராச்சியத்தின் புகழ் வாய்ந்த மன்னனான சங்கிலி செகராசசேகரனின் சிறப்பான வரலாற்றை விபரிக்க பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. சங்கிலி மன்னன் அரச கட்டிலேறிய வழி தவறாயினும் யாழ்ப்பாண இராச்சியத்தை இக்கட்டான ஒரு கட்டத்தில் காப்பாற்றியவன் என்பதாலும், நமது நாடு இறுதி வரை அந்நியர் வசப்படாது பாதுகாத்தவன் என்பதாலும் கவனிப்புக்குரியவனாகிறான். அவ்வகையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை சங்கிலி என்றொரு நாடகத்தை வழங்கு தமிழில் எழுதினார் அதனைத் தொடர்ந்து நம் மூத்த படைப்பாளி அமரர் வரதர் 'வாழ்க நீ சங்கிலி மன்ன' என்றொரு குறுநாவலைப் படைத்தார். நம் மூத்த எழுத்தாளர் அமரர் சொக்கன் அவர்கள் 'துரோகம் தந்த பரிசு' என்ற நாடகத்தை சங்கிலி மன்னன் குறித்துத் துணிவாகவும் சரியாகவும் படைத்தார். அவரைத் தொடர்ந்து செங்கை ஆழியான் 'நந்திக்கடல்' என்றொரு நாவலை தன் முதல் நாவலாகச் சிருஷ்டித்தார். ஈழநாடு பத்திரிகை தனது பத்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக நடாத்திய போட்டியில் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் 'சங்கிலியம்' காவியப்போட்டியில் முதற் பரிசைப் பெற்றது. பல யாழ்ப்பாண நாட்டுக் கூத்துக்கலைஞர்கள் சங்கிலியனை நாட்டுக் கூத்தாக்கினர். மெட்றாஸ் மயில் சங்கிலியனை மேடை நாடகமாக்கினார். குறிப்பாக கலாபூஷணம் மு.அருள்பிரகாசம் 'மாவீரன் சங்கிலியன்' என நாட்டுக் கூத்தாக்கியுள்ளார் தென்னிந்திய எழுத்தாளரான கௌதம நீலாம்பரன் 'ஈழவேந்தன் சங்கிலியன்' என்றொரு நாவலை எழுதிப் பார்த்தார். இவை அனைத்தையும் படித்துச் சுவைத்த பின்னர் சொல்லத் தவறியவற்றை மீண்டும் ஒன்றாக்கிப் புனைந்த காவியம் தான் இந்த நாவல்.

– ஆசிரியர்

75/10 A, பிறவுன் வீதி
யாழ்ப்பாணம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| அத்தியாயம் 1 | உறக்கமற்ற நீண்டஇரவு | 5 |
| அத்தியாயம் 2 | யமுனா ஏரியும் அரசகேசரி மண்டபமும் | 11 |
| அத்தியாயம் 3 | மருத்துமாமலைவனத்துக் காதல் | 17 |
| அத்தியாயம் 4 | சங்கிலி அளித்த வாக்குறுதியும் மந்திரிமனை குழப்பமும் | 22 |
| அத்தியாயம் 5 | ஏழூர் அதிபன் பரநிருபசிங்கன் | 27 |
| அத்தியாயம் 6 | அரசமாதேவி | 32 |
| அத்தியாயம் 7 | சேதுகாவலன் | 37 |
| அத்தியாயம் 8 | வன்னியர் வருகை | 43 |
| அத்தியாயம் 9 | வன்னி திக்விஜயம் | 48 |
| அத்தியாயம் 10 | காசி நயினார் | 53 |
| அத்தியாயம் 11 | உப்புமால் மண்டபம் | 58 |
| அத்தியாயம் 12 | போர்த்துக்கேயரின் முதல் படையெடுப்பு | 62 |
| அத்தியாயம் 13 | முத்துச் சலாபம் | 68 |
| அத்தியாயம் 14 | மன்னார் சங்காரம் | 74 |
| அத்தியாயம் 15 | விதிய பண்டாரன் | 79 |
| அத்தியாயம் 16 | பூதவராயர் கோவில் | 84 |
| அத்தியாயம் 19 | கோப்பாய் கோட்டை | 89 |
| அத்தியாயம் 20 | நான் துரோகி | 94 |

## அத்தியாயம் 1



# உறக்கமற்ற நீண்டஇரவு

வானத்தில் நிலவு பவனி வந்துகொண்டிருந்த ஓர் இரவுப்பொழுதில் தூரத்தில் நிழலாகத் தெரிந்த நல்லூர் ஆலயத்தின் இராஜகோபுரக் கலசங்களைத் தன் மாளிகை உத்தரத்திலிருந்து கண்கொட்டாது சங்கிலி செகராசசேகரன் பார்த்தான். நிலவு வெளிச்சத்தில் கோபுரக்கலசங்கள் ஏழும் ஒளிர்ந்தன. இன்று மன்னனின் மன நிலை அமைதியாகவில்லை. இரவு உறக்கத்திற்கு மஞ்சத்தை நாட மனதில்லை. பலதும் மனதில் மோதி உறக்கத்தைக் கலைத்தன. யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிதரித்து முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன. சற்றுமுன் தான் யாழ்ப்பாண இராச்சியத்தின் சேனாதிபதி சம்பகமாதாக்கர் வந்து தான் காவி வந்த செய்தியைக் கூறிச் சென்றார்

“மன்னா, எந்த நேரத்திலும் போர்த்துக்கேயப் பறங்கிகள் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்கலாமென ஒற்றர்கள் கூறுகிறார்கள். உண்ணாட்டில் சதிகாரர்களும் கூடிவிட்டனர்.”

இரண்டு கிழச்சிங்கங்கள் எதிரெதிரே நிற்பது போல அவர்களின் அஜானுபவ மான உடல் தோற்றங்கள் இருந்தன. ஐம்பத்தைந்து கடந்த வயோதிபத்தின்

சின்னங்கள் அவர்களின் இரும்புடல்களில் காணப்பட்டபோதிலும் முறுக்கேறிய கரங்களும் பரந்த மார்பும் சக்தி வாய்ந்த விழிகளும் அவர்கள் வீரத்தில் வயோதிபமில்லையென்றன. தலைமயிர்கள் சிலும்பாதிருக்க வாரி இழுத்து கொண்டையிட்டிருந்தார்கள். அரைகளில் வேட்டியை பஞ்சகச்சமாக கட்டி வயிற்றில் சால்யொன்றினை அரைக்கச்சமாக்கி இருந்தனர். இடைகளில் நீண்டவாள்கள் தொங்கின. இடது பக்க அடி வயிற்றில் மறைவாகச் செருகப்பட்டிருந்த குத்துவாள் தெரியாமலிருக்க வலது தோள்களிலிருந்து உத்தரியம் தொங்கியது. சேனாதிபதி சண்பகமாதாக்கர் மார்பில்கவசமும் முத்துச்சரங்களும் அணிந்திருந்தார். மன்னர் கவசமற்ற மார்பை முத்துச்சரங்களும் தங்க மாலைகளும் அலங்கரித்தன. இருவரது வலது தோள்களிலிருந்து குறுக்காக ஊடுதாமக் கயிறுகள் சென்றன.

“சேனாதிபதி நீர் இப்போதே முன் நடவடிக்கைகள் எடுத்திருப்பீரே?”

“ஆமாம் மன்னா எல்லாப் பிரதேசத் தலைவர்களுக்கும் படைகளுடன் ஆயத்தமாக இருக்கும்படி அறிவித்துள்ளேன். பருத்தித்துறைத் தலைவன் வீரமாணிக்கதேவன் மட்டும் சேனையுடன் புறப்பட்டுவிட்டதாக அறிவித்திருக் கிறான். நம்மிடமுள்ள வீரர்களை பாஷையூரிலிருந்து பண்ணைதுறை வரை நிறுத்தியுள்ளேன். நமது பட்டத்து இளவரசர் புவிமன்னர் தாமாக ஓரணிக்கு தலைமை தாங்கிச் சென்றுள்ளார் நிலைமையை பார்த்தால் தங்களது மற்றைய நான்கு குமாரர்களும் சண்டைக்கு ஆயத்தமாவார்கள் போலவிருக்கு.. ஆகப்புதினம் யாதெனில் தங்களுடன் கூடப்பிறந்த தமையனார் பெரியபிள்ளை இளவரசர் தானும் சண்டைக்கு வாறாராம்...”

மன்னருக்கு சிரிப்பை அடக்கமுடிவில்லை. “பெரியபிள்ளை அண்ணரா?”

மன்னருக்கு முன் பிறந்தவர் பெரியபிள்ளை. அவரை அக்குடும்பத்தில் எல்லாரும் அப்படியே கூப்பிட்டனர். சற்று மூளை குறைந்தவர். முன் வாய்ப்பற்கள் வெளியே துருத்திக் கொண்டிருக்கும். அதனால் அவரை போர்த்துக்கேயப் பறங்கியர் வக்கிரகுறிப்பண்டாரம் என்பர். அரண்மனையில் அவர் சோலி சுரட்டற்ற செல்லப்பிள்ளை அவர் சண்டைக்கு போவதா?

மன்னர் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டார் “எல்லா ஆயத்தங்களும் செய்துள்ளீர் நல்லது...எனக்கு இந்த வீரமாணிக்கதேவனை நினைக்க வியப்பாக இருக்கிறது. அவனது இராஜவிசுவாசம் திகைப்பை தருகிறது. எள் என்னும் முன் எண்ணெயாக நிற்கிறான்.”

“உண்மை அரசே, பருத்தித்துறை பிரசேசத் தலைவர் வீரமாணிக்கரின் இராஜவிசுவாசம் போற்றப் படத்தக்கது தான்..ஆனால் அவரது குமாரர்களின் செயற்பாடுகள் அவ்வாறில்லைல...”

மன்னர் சங்கிலியன் குறுக்கிட்டார்.

“நானறிவேன் சண்பகமாப்பானரே.. வீரமாணிக்கனின் முதல் தார மனைவிக்கு புத்திர பாக்கியமில்லை. அதனால் இரண்டாம் தாரமாக றன்எத்தனா என்ற சிங்களப் பெண்ணை மணந்து கொண்டார். றன்எத்தனா அவர் வீட்டில் வேலைக்கு இருந்தவள். அவர்களுக்கு ஐந்து குமாரர்கள்.. அதில் மூத்த இருவரின் வீரத்தை மெச்சி ஒருவனான காக்கைவன்னியனை ஊர்காவற்றுறையின் பிரதேசத் தலைவனாகவும் மற்றவனை கரப்பிட்டிவன்னிமையாகவும் நியமித்துள்ளீர்கள்...அவர்களின் நடத்தைகள் பற்றி முறைப்பாடுகள் வருகின்றன. காக்கைவன்னியன் தீவுப்பகுதி கால்நடைகளை வள்ளங்களில் ஏற்றி தென்னிலங்கைச் சிங்கள வியாபாரிகளுக்கும் போர்த்துக்கேயருக்கும் விற்று வருகிறானாம். கால் நடை வரி வருவதாகவில்லை...”

”உண்மை தான் அரசே... தகுந்த ஆதாரம் தேடிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எதற்கும் கவலைப்படாதீர்கள்..”

”யுத்தத்தைபற்றி கவலையில்லை. என் பட்டத்து குமாரன் புவிமன்னன் பார்த்துக் கொள்வான். மற்றைய குமாரர்களும் பார்த்துக் கொள்வார்கள்.... போய் வாருங்கள் சேனாதிபதி..”

சண்பகமாதாக்கர் விடைபெற்றபின்னர் மன்னன் சிந்தனையில் ஆழ்ந்தான். சங்கிலி மன்னனுடன் கூடப்பிறந்த ஒரு தமையன் பெரியபிள்ளை .பெரியபிள்ளை மிக அமைதியானவன். அரசியல் விவகாரங்களில் தலையிடமாட்டான். தானும் தன் குடும்பமும் என்றிருப்பான்.. வதவதவென நான்கு ஆண் பிள்ளைகளையும் இரண்டு பெண்பிள்ளைகளையும் பெறத்தெரிந்திருக்கிறது. மூத்தவன் குஞ்சு நயினார். நடுவிலான் எதிர்மன்னசிங்கன். கடைசி மகன் சங்கிலிகுமாரன். இவர்கள் மனதில் மெல்லியதாக யாழ்ப்பாண அரசு தங்கள் தந்தையை தாண்டி சித்தப்பனை அடைந்துவிட்டதென்ற ஆதங்கம் இல்லாமலில்லை.

“இராச்சியத்துக்கு உண்மையில் உரிமையுடையவர் நீங்களல்லர். உயிரோடு இருக்கின்ற பரநிருபசிங்கர் அவரில்லாவிடில் அவருடைய மூத்த

மகன் பரராசசிங்கன். நீங்களல்லர். வீண் ஆசையை வளர்க்க வேண்டாம்” என அவனுடைய தாய் அடிக்கடி கூறுவாள்.

தாய் கூறுவது உண்மைதான். சங்கிலியின் தந்தை பரராசசேகருக்கு மூன்று மனைவியர் மூத்த மனைவி .இராஜலக்குமி அம்மாள் பட்டத்து ராணி. சோழவம்சத்தை சேர்ந்தவள். அவர்களுக்கு சிங்கபாகு. வீரபண்டாரம் என இருமைந்தர்களும் மாணிக்கநாச்சியார், ராஜநாச்சியார் என இரு புதல்விகளும் இருந்தனர். அவர்களில் ஒருத்தியான மாணிக்கநாச்சியார் திருகோணமலை வன்னியனான கோகர்ண வன்னியனைக் கட்டியிருந்தாள். மன்னரின் இரண்டாவது மனைவி வள்ளியம்மைதேவிக்கு பரநிருபசிங்கன் என்றொரு மகனும் வடிவம்மை என்றொரு மகளும் இருந்தனர் வள்ளியம்மைதேவி பாண்டி மழவன் குடும்பத்தை சேர்ந்தவள். மூன்றாவது மனைவி மங்கத்தம்மாள் அரசர் பரராசசேகரரின் காதல் கிழத்தி (வைப்பாட்டி) ஆவார் அவர்களுக்கு பெரியபிள்ளை, சங்கலி, பரவை என மூன்று பிள்ளைகள்,

இந்த சங்கிலியே இன்றைய மன்னன். தான் இந்த முடியைப் பெறுவதற்கு பட்டபாட்டை சங்கிலி எண்ணிக் கொண்டான். அதற்கு அவனது இட்ட நண்பன் கனகராஜன் துணையாக இருந்தான். மாலை நேரங்களில் அவர்கள் பெண்ணைத்துறைக் கடற்கரையில் சந்தித்து கனவு காண்பார்கள். மன்னனுக்கு நினைவு வருகின்றது.

மார்கழி மாதத்துக் குளிர் தேயா நள்ளிரவு. பெண்ணைத் துறை அமைதியின் மடியில் கிடந்தது.கடற்கரை ஓரத்தில். ஆங்காங்கே வளர்ந்திருந்த தென்னை மரங்கள் ஓலைளை நில மகளை நோக்கி வளைந்திருந்தன. தூரத்தில் பசி கிடவா நரியொன்று ஊளையிட்டது. இக்கடற்கரையில் சங்கிலியும் கனகராஜனும் அன்று அமர்ந்திருந்தனர்.

“கடல் உங்களைக் கண்டு ஆரவாரிக்கின்றது இளவரசே.” என்றான் கனகராஜன்.

“என்னைக் கண்டு தான். எதற்குத் தெரியுமா?’

“எதற்கு?”

சங்கிலி தொடர்ந்தான்.

“எதற்கா,கேள் யாழ்ப்பாண அரசை பகை மேகம் மூடியிருக்கிறது. கையாலாகாத இளவரசன் ஒருவன் கடற்கரை மணலில் மணற்கோட்டை

களைக் கட்டி வீணே காலத்தைக் கழிக்கனிக்கிறானே என கேலி செய்கிறது. பொங்கியெழும் அலைகள் என்னைக்கேலிசெய்கின்றன.'

"ஏதாவது தவறுதலாகக் கூறிவிட்டேனா?'

"இல்லை கனகராஜா.." சங்கிலி தொடர்ந்தான்.

"என்னிதயத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் தீயை இந்தக்கடலின் ஆரவாரம் நெய்யாகத் தூண்டுகிறது. கேள் கனகராஜா, ஈழத்தின் வட கோடியில் இருக்கும் இச்சிறிய நாட்டை தந்தை ஆள்கிறார். தெற்கே வன்னியர்கள். அவர்கள் திறைசெலுத்திலும் ஏப்பம் விடக் காத்திருக்கிறார்கள். அதற்கும் அப்பால் சிங்கள மன்னர்கள். தீவைச்சுற்றியுள்ள நாட்டை சமுத்திரத்தில் வியாபாரக்கப்பல்களுடன் மதத்தை பரப்பவும் நாட்டைப் பிடிக்கவும் போர்த்துக்பேயப் பறங்கிகள் திரிகின்றனர். தென்னிலங்கையில் இவர்களது ஆதிக்கம் கொடி கட்டிப்பறக்கிறதாம்' தீவுகளின் கால்நடைகளை வன்னியர் கொள்ளையடிக்கின்றனர். அடக்க முடியவில்லை. வன்னியர்களை அடக்க வேண்டும் என்றோ படைப்பலத்தை அதிகரிக்க வேண்டுமென்றோ தந்தைக்கு நினைவில்லை. பட்டத்து இளவரசர் சிங்கபாகு நஞ்சூட்டப்பட்டுக் கொல்லப்பட்டார். இராசமடப்பள்ளி வன்னியன் தான் செய்ததாக ஒத்துக் கொண்டான். இரண்டாவதுபட்டத்துஇளவரசர்வீரபண்டாரம்கவலையில்லாமல் திரிகிறார் அவருக்கு யாது நடக்குமோ? அண்ணர் பரநிருபசிங்கர் கவலை ஏதுமின்றி கண்டிக்குச் சென்றுள்ளார் கண்டி மன்னர் விக்கிரபாகுவின் மனைவியின் பிணி தீர்க்கச் சென்றுள்ளார். எனது முன்னோர்கள் ஆரியச் சக்கிரவர்த்திகள் போன்று யாழ்ப்பாண இராச்சியத்தை மாற்ற வேண்டும் என நான் கனவு காண்கிறேன். அந்த ஆசைக் கனவுகளோடு நான் குமுறிக்கொண்டிருக்கிறேன்."

இருவரும் தத்தமது குதிரைகளில் ஏறிக்கொண்டனர்.

நல்லூர் நோக்கிச் செல்லும் சாலையில் சிறிது தூரம் தான் சென்றிருப்பார்கள். கனகராஜன் கூறினான்:

"தூரத்தில் சில குதிரைகள் வருகின்றன. ஒரு குதிரை முன்னே வருகிறது ஏனையவை துரத்தி வருகின்றன..."

வீதியின் இருமருங்கும் வானளாவி வளர்ந்திருந்த மரங்களுக்கு இடையே நில வுக்கதிர்கள் தலை நீட்டின. சங்கிலியின் குதிரையும் எதிரே வந்த

குதிரைகளும் ஒன்றையொன்று மோதிக்கொள்ளத் தக்க விதமாக வந்த போது சங்கிலி முன்னால் ஓடிவந்த குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான் பிடித்த வேகத்தில் இரண்டு குதிரைகளும் பின்னம்கால்களில் மேலெழுந்தன. இதனை முற்றிலும் எதர்பார்க்காத துரத்தப்பட்ட குதிரையில் இருந்தவன் படீரென நிலத்தில் சங்கிலியின் குதிரைமுன் விழுந்து அரைபட்டான். நிலம் இரத்தச் சிவப்பாகியது.

பின்னால் வந்த குதிரையிலிருந்து சண்பகமாதாதக்கர் குதித்தார்.

"குற்றவாளியை உயிரோடு பிடிக்க எண்ணினோம்"

' குற்றவாளியா? என்ன நடந்தது?'

"நந்தவனத்தில் உலாவிய தங்கள் தலைமையனார் வீரபண்டாரத்தை குத்தெறிவாளால் கொன்று விட்டான் இளவரசே பிடிக்க துரத்தி வந்தோம்."

சங்கிலி பேச்சு மூச்சற்றவனான் சில கணங்கள்.

"இதுவும் வன்னியர் சதியாகத்தான் இருக்கும். இப்படி நடக்குமென எதிர்பார்த்தேன். கெதியாக நடந்து விட்டது." என்றான் கனகராஜன்.

"கண்டியில் இருந்து இளவரசர் பரநிருபசிங்கர் இன்று மாலையே திரும்பிவிட்டார்." என்றார் சேனாதிபதி சண்பகமாப்பாணர்: 'இளவரசரின் இழப்பினால் அரண்மனை சோகமாகி விட்டது.."

## அத்தியாயம் 2



# யமுனா ஏரியும் அரசகேசரி மண்டபமும்

பெண்ணைத்துறை கடற்கரையில் சங்கிலியும் கனகராஜனும் அமர்ந்து கனவு கண்டு கொண்டிருந்த வேளையில் அரண்மனைக்கு அருகில் ஒதுக்காக கட்டிய யமுனா ஏரிக்கரையில் மன்னர் பரராசசேகரனும் அவரது மனைவியர் இருவரும் அமர்ந்திருந்தனர். நல்லூர் அரண்மனையை அமைத்துக் கொண்டபோது யமுனா ஏரியையும் கட்டுவித்தார் இந்திய யமுனை நதியிலிருந்து கொண்டு வந்த நீரைப் பெய்து இந்த ஏரி பகர வடிவில் கட்டப்பட்டது. யமுனா ஏரியின் பகர வடிவின் இடைவெளியில் குடைந்த தூண்கள் ஆறினைக் கொண்டதாக ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

"இந்த மண்டபம் வள்ளியம்மைதேவியின் தமையன் அரசகேசரிக்காக அமைக்கப்பட்டது. காளிதாசரின் ரகு வம்சத்தை தமிழில் ஆக்க நானும் மருத்துமாமலைவனத்தில் நாகம் தீண்டி காலம் சென்ற என் தம்பி செகராசசேகரனும் விரும்பினோம். அரசகேசரி ஒப்புக் கொண்டார். அமைதியான ஒரு மாளிகையை விரும்பினான். யமுனா ஏரியில் இந்த மண்டபத்தை

அமைத்துக் கொடுத்தோம். ரகுவம்சம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அவர் பணி நிறைவுற்றது. நல்லூரில் தமிழ்ச் சங்கத்தை செகராசசேகரனே நிறுவினான். இன்று அரசகேசரி மண்டபத்தில் யமுனா ஏரியின் ஈரப் பதம் படவேண்டி ஜெயபேரிகைகளையும் அரசமத்தளங்களையும் வைக்கிறார்கள். அரசகேசரி மண்டபம் இப்போது பேரிகை மண்டபமாகிவிட்டது"

மன்னர் அமைதியானார். யமுனா ஏரியின் நிர்சலனமான நீரைப் பார்த்துக் கொண்டிருந்த இல்க்குமிதேவி கேட்டாள்.

"ஏன் யாழ்ப்பாண அரசர்களை ஆரியச் சக்கிரவர்த்திகள் என்கிறார்கள்? நீங்கள் வட இந்திய ஆரியர்கள் இல்லையே?"

"ராமேஸ்வர ஆரியப் பிராமணரோடு கலியாண உறவு கொண்டதால் இப்பெயர் வந்ததா?" என்று குறுக்கிட்டாள் வள்ளியம்மைதேவி

"இரண்டுமில்லை..' என்ற மன்னன் தொடர்ந்தான்:."ஆரியச் சக்கிரவர்த்தி என்ற பாண்டியச் சேனாதிபதி ஒருவன் இலங்கைமீது படையெடுத்தான் ஆரியச் சக்கிரவர்த்தியின் தலைமையில் நடந்தபடையெடுப்பின் விளைவாகச் சிங்களஇராச்சியம் பலவீனமடைந்தது. ஆரியச்சக்கிரவர்த்தி யாழ்ப்பாணத்தில் ஆட்சி நடத்தினான். அவன் பின்னர் ஆட்சி புரிந்தவர்கள் ஆரியச்சக்கிரவர்த்திகள் எனப்பட்டனர். ஒருவர் பின் ஒருவராக ஒன்பது ஆரியச்சக்கிரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை ஆண்டனர். பரராசசேகரனான என் பின்னர் அந்நிலை மாறப் போகின்றது இனிமேல் பரராசசேகரன் செகராசசேகரன் என்ற பெயரையே தம் பெயரோடு சூட்டிக்கொள்வர்."

மன்னர் தொடர்ந்தார்:

"யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆரியச்சக்கிரவர்த்தி விசயகாலிங்க ஆரியச்சக்கிரவர்த்தியாவர். நாட்டின் பிரதிநிதியாக புவனேகவாகு என்பான் இருந்தபோது தென்னிலங்கையிலிருந்து கலிங்கத்து மாகன் வடக்கு நோக்கி துரத்தப்பட்டான். அவனை விசயகாலிங்கன் என்ற பெயரோடு புவனேகவாகு முதலாவது ஆரியச்சக்கிரவர்த்தியாக்கினான். இவனே சிங்கைநகரிலிருந்த யாழ்ப்பாண நல்லூருக்கு மாற்றினான். யாழ்ப்பாண நகரியைக் கட்டுவித்து கந்தவேளுக்குக் கோயிலும் எடுப்பித்தான். இவனை அடுத்து குலசேகர சிங்கை யாரியன் மன்னனானான். இவன் ஆட்சியை சீர்படுத்தியதோடு

சமாதானத்தைப் பேணினான் இவன் மகனான குலோதுங்க சிங்கையாரியன் வயல் நிலங்களைத் திருத்தி வருமானத்தை அதிகரித்தான். இவன் பின்னர் மன்னனான விக்கிரம சிங்கையாரியன் காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் சமயச் சண்டை ஏற்பட்டது.இரு தமிழர் கொல்லப்பட்டனர்' பலர்' காயமுற்றனர். அதனால் மன்னன் சிங்களவர் பதினெட்டுப் பேரை கொல்வித்தான். இவன் மகன் வரோதயச்சிங்கையாரியன் காலத்தில் இவ்விரு சமூகங்களிடையே சமாதானம் நிலவியது. அடுத்து ஆண்ட மார்த்தாண்ட சிங்கையாரியன் காலத்தில் கல்வி சிறப்புற்றது. குணபூஷணசிங்கை யாரியன் காலத்தில்செல்வம் பெருகியது இவனணது மகனான விரோதய சிங்கையாரியன் காலத்தில் சிங்களவராற் கலகமுண்டானது. இக்கலகத்திற்கு வன்னியர் காரணமாயினர் உண்மையறிந்து வன்னியரை அடக்கினான். இவன் பாண்டியனுக்கு படை உதவி செய்துள்ளான். செயவீரசிங்கையாரியன் காலத்தில்முத்துச்சலாபம்குறித்துக்கண்டிஇராசன்புவனேகபாகுவுடன்சண்டை பிடிக்க நேர்ந்தது. வெற்றி கொண்டான். குணவீரசிங்கையாரியன் தகப்பன் போலவே வீரன் தென்னிலங்கை மன்னனை வென்று திறை வாங்கினான். குணவீரசிங்கையாரியனின் மகனே எனது தந்தை கனகசூரிய சிங்கையாரியர். எனது தந்தை காலத்தில் கோட்டை அரசன் பராக்கிரமபாகு என்பானின் படையெடுப்பு நிகழ்ந்தது. ஆரியச் சக்கிரவர்த்திகள் மீது தென்னிலங்கை மன்னர்களுக்கு மாறாத பகைமையிருந்தது. ஆரியச் சக்கிவர்த்திகள் பலவற்றாலும் புகழ் பெற்றவர் எனது கொள்ளுப் பாட்டனார் செயவீர சிங்கையாரியர் ஆவார். அவர் கம்பளை மீது படையெடுத்து கம்பளை மன்னன் புவனேகபாகுவையும் றயிகமத்திலிருந்த மந்திரி அழகக்கோனாரையும் வென்ளு தனது வெற்றியை கம்பளைக்கு அருகேயிருக்கும். கோட்டகமத்தில் கல்வெட்டாக பொழிப்பித்தான். செயவீர ஆரியச் சக்கிரவர்தியின் வெற்றியைப் பொறுக்க முடியாத கோட்டையரசன் பராக்கிரமபாகு என் தந்தை கனகசூரிய சிங்கையாரியன் காலத்தில் தனது வளர்ப்பு மகன் சப்புமல்குமரய தலைமையில் பெரும் படையொன்றினை யாழ்ப்பாணத்தின் மீது அனுப்பினான். அவன் நகரத்தை கைப்பற்றினான். இந்து சைவ ஆலயங்களை அழித்தான். நல்லூர் கந்தசாமி ஆலயத்தை அத்திவாரத்தோடு கிளறுவித்தான். சப்புமல்குமரய என்ற செண்பகப்பெருமாளின் யுத்தத்தை எதிர்கொள்ள முடியாது கனகசூரியரும் நானும்தம்பிசெகராசசேகரனும்முக்கிய அரசகுலத்தவரும்தென்னிந்தியாவிற்கு திருக்கோவிலிற்கு படகேறித் தப்பித்தோம். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசதி படைத்தவர்களும் ஓடினார்கள். அன்றே நான் அறிவித்தேன்..”

“என்னவென்று?” இராஜலக்குமிதேவி கேட்டார்.

"நாங்கள் அரசை கைப்பற்ற படையுடன் திரும்பி வருவோன் இப்போது சிங்களப் படையைக்கண்டு புலம் பெயர்பவர்கள் ஓடட்டும். சமாதானமும் அமைதியும் இந்த நாட்டிற்கு திரும்பிய பின்னர் இவர்கள் தாய் நாடென்று திரும்பி வரக்கூடாது."

"வந்திருக்க மாட்டார்கள் அங்குள்ள சொர்க்க வாழ்வைவிட்டு திரும்புவார்களா.?"

'உண்மை தான் ராணி…திரும்பி கனகசூரியசிங்கையாரியரும் நாங்களும் வந்தோம் அப்போது 14 ஆண்டுகளாக ஆண்ட விஜயபாகு என்பவனை வெற்றி கொண்டோம் அரசைக் கைப்பற்றிக் கொண்டோம். சப்புமல்குமரய யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று ஸ்ரீ சங்கபோதி புவனேகனகபாகு என்ற நாமத்தோடு கோட்டை மன்னனாக முடி புனையும் முன்னர் தான் இடித்த நல்லூர் கந்தன் ஆலயத்தை மீளக்கட்டுவித்தான் அந்த நன்றிக்காக இன்றும் கோயில் கட்டியத்தில் நினைவு கூரப்படுகிறான்."

கனகசூரியசிங்கையாரியர் தனது புத்திரர்களுடனும் சேனைகளுடனும் யாழ்ப்பாணம் மீண்டு அங்கு ஆண்ட விஜயபாகுவை வெற்றிகொண்டார். நல்லூர் தன் பழையசோபையை இழந்திருந்தது. அதனால் அரண்மனையையும் இராச வீதிகளையும் முதலில் திருத்தி அமைத்தான். படைகள் தங்குவதற்கான குதிரைக் கொட்டைகள் . யானைப் பந்திகள் என்பனவற்றை அமைப்பித். தான் கைவினையருக்கான தெருக்கள், வதிவிடங்கள் என்பனவற்றை தனி அக்கறையுடன் அமைத்துக் கொடுத்தான். இராச்சியத்தில் தட்டார்தெரு, தச்சர்தெரு, சாண்டார் தெரு. சேணியர் தெரு, அந்தணர் தெரு, வெள்ளாந் தெரு முதலிய தெருக்களை சாதித்தொழில் அடிப்படையில் அமைத்துக் கொடுத்தான்..கனகசூரிய சிங்கையாரியனுக்குப் பின் அவர் மூத்த மகனான பரராசசேகரன் முடிதரித்தார். பரராசசேகரர் தன் பெயருடன் சிங்கை என்பதைத் தலைப் பெயருடன் சேர்த்துக்கொண்டார். இவர் தன் தந்தையிலும் சிறந்தவராய் நகரத்தின் வட திசையில் சட்டநாதர் திருத்தளியையும், கிழக்குத் திசையில் வெயிலுகந்த பிள்ளையார் கோவிலையும், தென் திசையில் கைலாசநாதர் கோயிலையும், மேற்கு திசையில் வீரமாகாளியம்மன் கோயிலையும் அமைப்பித்தார். அரண்மனைக்கு அருகில் யமுனா ஏரி அமைத்தவர் சிங்கை பரராசசேகரரேயாவர்.

முதலாவது ஆரியச்சக்கிரவர்த்தி காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு தென் இந்தியாவிலிருந்து பதினெண் வேளாண் குடிகளும் அடிமைகுடிமைகளும்

வந்தனர். யாழ்ப்பாண .இராசதானி வலிகாமம். வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி எனும் நான்கு பெரும் பகுதிகளையும் குடாநாட்டின் தீவுகளையும், பெரு நிலப்பரப்பில் வன்னிப் பிரிவுகளையும் மேற்கே கற்பிட்டியையும் கிழக்கே மட்டக்களப்பையும் கொண்டுள்ளது. ஆட்சித் தேவைகளுக்காக பல உபபிரிவுகளாக்கப் பட்டு அவற்றிற்குப் பிரதானிகள் நிர்வாகிகளாக இருந்தனர். இவர்கள் அதிகாரிகள் எனப்பட்டனர். அதிகாரி களுக்குத் துணையாக முதலியார்கள், பண்டாரப்பிள்ளைகள். கண்காணிகள், உடையார்கள், தலையாரிகள். அடம்பனார், பட்டங்கட்டி என்போர் இருந்தனர். இவர்கள் பலவகைக் கடமைகளைச் செய்ததுடன் வரிவசூலிப்பதிலும் அதிகாரிகளுக்கு உதவிசெய்தனர்.

யாழ்ப்பாண இராசதானி வடபற்று, தென் பற்று, கீழ்ப்பற்று, மேல்பற்று எனப்பிரிக்கப்பட்டதோடு பற்றுக்கள் சிறு பிரிவுகளாகவும் பிரிக்கப் பட்டு அவை வேளான் தலைவர்களிடம் நிர்வாகத்திற்காக விடப்பட்டன.. அவர்கள் அதிகாரிகளாக விளங்கினர். பொன்பற்றியூரிலிருந்து வந்த பாண்டி மழவனும் அவனது மைத்துனனுமான செண்பகமழவனும் திருநெல்வேலியில் குடிய மர்ந்து அதிகாரிகளாயினர். நரசிங்கதேவன் மயிலிட்டியின் அதிபனானான். சந்திரசேகரமாப்பாணன் தெல்லிப்பளையின் அதிகாரியாக நியமிக்கப்பட்டான் வேராயியவன் இணுவிலுக்கும் நீலகண்டன் தென்மராட்சி கிழக்கிற்கும் நியமிக்கப்பட்டனர். அவ்வகையில் தான் பருத்தித்துறை அதிகாரி வீரமாணிக்கனின் சிங்கள மனையாட்டிக்குப் பிறந்த ஐந்து புதல்வர்களில் மூத்தவன் காக்கைவன்னியன் ஊர்காவற்றுறையின் அதிகாரி ஆனான். மன்னார்த்தீவின் நிர்வாகப் பொறுப்பினை இளஞ்சிங்கன் என்பான் கவனித்தான்.

யாழ்ப்பாண இராசதானிக்கு பதினெட்டு வேளாண் குடிகளும் அடிமை குடிமைகளும் வந்து குடியேறிய மாதிரி வன்னியர்களும் குடியேறினர். நமது கதை நிகழ்ந்த காலத்தில் வன்னியர்கள் யாழ்ப்பாண அரசனுக்கு கீழ்படிந்து திறை செலுத்தினர்

அவர்கள் அமைதியாக யமுனா ஏரிக்கரையில் அமர்ந்திருந்தனர். இரவு கவிந்து கொண்டிருந்தது. சிங்கபாகுவை இளவயதில் இழந்த துயரம் பட்டத்து ராணியைப் பெரிதும் பாதித்திருப்பதை மன்னர் அறியாதவரல்லர். தூணைப் பற்றியபடி அவர் எழுந்திருந்தார் மற்ற இருவரும் கூடவே எழுந்தனர்.அந்த நேரம் பதற்றத்துடன் ஒரு காவலாளி ஓடிவந்தான் அவன் உடல் பதறியது.

“அரசே....”

“என்ன?,”

“பட்டத்து இளவரசர்.....”

“வீரபண்டாரத்துக்கு என்ன.?” இராஜலக்குமிதேவி பதற்றத்துடன் கேட்டார்.

“எப்படிச் சொல்வேன் தாயே....”

காவலன் தொடாந்து கூறியதைக் கேட்ட அரசியின் உடல் வெடவெட வெனநடுங்கியது

‘ஐயோ பண்டாரம்..மகனே....

மன்னரும் வள்ளியம்மைதேவியும் சுயநினைவுக்கு திரும்பு முன் இராஜலக்குமிதேவி உடல்தளர்ந்து நிலைகுலைந்து யமுனா ஏரிப்படிக்கட்டுகளில் தலை பயங்கரமாக அடிபட உருண்டு நீரினுள் சரிந்தார்.

அரண்மனைக்குத் திரும்பிய சங்கிலி தனது தமையனார் வீரபண்டாரத்தின் கட்டாரி குத்திய உடலோடு பட்டத்துராணியின் உயிரற்ற சடலத்தையும் கண்டான்

## அத்தியாயம் 3



# மருத்துமாமலைவனத்துக் காதல்

நல்லூர் அரண்மனையின் முன் வாயிலோடு வடக்கு நோக்கிச் செல்கின்ற அரசப் பெரும் வீதி கள்வியங்காடு எனும் இடத்தைக் கடந்து வடக்கே செல்கின்றது. கள்வியங்காட்டிற்கும் அரசப் பெருவீதிக்கும் இடையில் அரசப்பெரு வீதியை அடுத்து காணப்படட மாளிகைகளின் செல்வப் பெருக்கில் இருந்து அவை அரச குடும்பத்தினருக்கும் மந்திரிகளுக்கும் சொந்தமானவைஅ என்பதை உணரலாம். வெண்சுதையினால் பால' போல நிழற்றியிருந்தமை பார்ப்போர் கண்களை ஒரு கணம் கவரும் தன்மையினஅதவற்றில் ஒன்று மட்டும் ஒரு நந்தவனத்திலிருந்து விலகியதிருந்தது.. அம்மாளிகையின் உரிமையாளர் அப்பாமுதலி என்பார். யாழ்ப்பாண அரசின் முதன்மை வாய்ந்த மந்திரிகளில் ஒருவர். அவர் தொண்டைமண்டலப் பிரபுகளில் ஒருவர். மந்திரி அடியாருக்குநல்லாருக்கு அடுத்த தானத்தில் இருந்தார்.

அப்பாமுதலியின் மாளிகைக்குப் பின் புறமாக முப்பது பரப்பு விஸ்தீரணத்தில் மருத்துமாமலைவனம் அமைந்திருந்தது. பல் வகை மருந்து மூலிகைகளைப் பயிரிட்டு கிராமங்கள் தோறுமுள்ள வைத்தியசாலைகளுக்குக்கு செகராசசேகரர்

அனுப்பிவந்தார். இந்த மருத்துமாமலைவனத்தில் நாகம் தீண்டி ஒரு நாள் அவர் மரணத்தைத் தழுவினார். அதன் பின்னர் .இந்த மூலிகை தோட்டத்தை பரநிருபசிங்கர் கவனிக்கிறார் செகராசசேகரன்கால செழிப்பு இல்லாவிடிலும் பரநிருபசிங்கன் காலத்தில் முற்றாகச் சோபை இழந்துவிடவில்லை.

மருத்துமாமலைவனத்தில் வீசிய ஆரோக்கியமான காற்றை சுவாசித்தபடி சங்கிலி அப்பாமுதலியின் மகள் உதயவல்லிக்காகக் காத்திருந்தான். அவன் மனதைக் கொள்ளை கொண்ட பெண் உதயவல்லி. அவளை அவன் தனிமையில் அங்குதான் சந்திப்பான். அவளுக்காகக் காத்திருந்தான். அவள் வந்தாள். இடை உடுக்காக மெலிந்திருந்தது. அதன் மேலும் கீழும் அகன்ற உடல்வாகு நெளிய நிலவிலிருந்து இறங்கிவந்த மங்கை பேதல் அவள் வந்தாள்.

“வெகு நேரம் காத்திருக்க வைத்தவிட்டேனா?”

பனிச்சையாக கட்டிய அவள் குழல்கற்றையிலிருந்து வெளிப்பட்டு சிலும்பிநின்ற மயிர் கீற்றை தண் நிலவில் தோய்ந்த குளிர்த்தென்றல் தடவிவிட, அவள் ஒரு புறம் இடைசாய்த்து மழலை மொழிந்தாள். அவளது மயக்கத்தைத் தரும் அழகை அள்ளி பருகிய அவன் அவள் கரங்களைப் பற்றினான்.

பட்டத்து இளவரசர் வீரபண்டாரமும் ராணி இலக்குமிதேவியும் மரணமாகி திங்கள் ஒன்று கழிந்துவிட்டது. அரண்மனையின் சோகம் இன்னமும் தீரவில்லை. நாடே துக்கம் கொண்டாடிக் கொண்டிருந்தது.

“என்ன அமைதியாகிவிட்டீர்கள்?”

“அப்படி ஒன்றுமில்லை உதயா. அரண்மனை நிலமையை எண்ணிக் கொண்டேன்....”

‘இனி நடக்க வேண்டியவற்றைக் கவனிக்காது இறந்தவர்களைப்பற்றி எண்ணுவதில் என்ன பயன் இருக்கிறது?’

“உண்மை தான்..”

இருவரும் கண்ணிமைக்காது ஒருவரையொருவர் பார்த்தனர் அவள் இடையில் படர்ந்த கரம் செய்த குறும்பால் அவள் சிலிர்த்தாள்.

“பொல்லாத பிள்ளை.... இந்தக் கரங்களை கட்டி வைக்க தான். வேண்டும்’

"கட்டித் தான் வையேன், உதயா?"

"காலம் வரட்டும்.."

"காலம் வந்தால் கட்டுபவன் நானல்லவா?"

"கட்டுவது நீங்கள் தான். எங்களுக்குக் கட்டும்போது உங்களையே நீங்கள் கட்டிக் கொள்கிறீர்கள்.."

பசி கிடவா நாயொன்று தூரத்தில் நிலவைப் பார்த்து ஊளையிட்டது. அவள் அவனோடு நெருக்கமாக அமர்ந்தாள்.

"உதயவல்லி?"

"அரச குடும்பத்தினரை எண்ணப் பயமாக இருக்கிறது..... யாழ்ப்பாண அரச குடும்பத்தினருக்கு மாறாத சாபம் போல..மூத்த பட்டத்து இளவரசர் சிங்கபாகு நஞ்சூட்டப்பட்டார் அடுத்த வீரபண்டாரம். பின் பட்டத்து ராணி...... பட்டமேற்கும் உரித்துடைய பரநிருபசிங்கருக்கு என்ன நடக்குமோ?"

"ஒன்றும் நடக்காது பயப்படாதே உதயா.."

"கவனமாக இருங்கள் நீங்களும் இளவரசர் தானே...."

உதயவல்லி எழுந்திருந்தாள்: "நேரமாகிறது.....மீண்டும் பழைய நாய் ஊளையிட்டது. சங்கிலி விடை பெற்றான்.

கார் முகில் எழினியாக நிலவை மறைப்பதை அவன் பார்த்தான். நினைவுகள் தறிகெட்டலைந்தன. உதயவல்லியை நீண்ட இடைவெளியின் பின்னர் சந்தித்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பி வந்தபோது பரராசசேகரரின் சயன அறையில் பிரகாசமாக வெளிச்சம் தெரிந்தது.அங்கு யாழ்ப்பாண இராசதானியின் எதிர்காலம் நிர்ணயிக்கப் பட்டதைக்கேட்க நேர்தது.

பரராசசேகரரின் சயன மண்டபத்திலிருந்த வள்ளியம்மைதேவி "யார் சங்கிலியா? நம்பமுடியவில்லையே.? இது என்ன வீண் பழி?.." என்றதைசெவி மடுத்த சங்கிலி திகைத்துப் போனான்.

அரசர் பரராசசேகரர் மலர் மஞ்சத்தில் சாய்ந்திருந்தார். வள்ளியம்மை தேவியார் அவருடைய காலடியில் இருந்தார் மஞ்சத்தை அடுத்துக் கா ணப்பட்ட இருக்கையில் பரநிருபசிங்கர்' அமர்ந்திருந்தார்.

“சும்மா வீண்பழி சுமத்தாதீர்கள் இந்தத் தகவல்கள் பொய்யானவை. கட்டுக் கதை....’எனப் பரநிருபசிங்கம் கொதித்தார்.

“அவ்வாறே இருக்கட்டும்....இரு பட்டத்து மைந்தர்களையும் இழந்து இரு கண்களையும் அழந்து விட்டவன் போல நான் தவிக்கிறேன். அமைதியாக இராச்சியத்தை பரிபாலிக்க வேண்டுமென்ற ஆசை. சதி கொலை, மண்ணாசை என்பனவற்றால் வீணாகிவிட்டது. அரசைக் கவரும் நோக்கோடு சதி நடக்கிறது. பரநிருபா என் சொல்லைக் கேட்பாயா?’

‘இது என்ன பேச்சு ..கட்டளையிடுங்கள்.. நிறைவேற்றுகிறேன் தந்தையே....?’

“பர நிருபா, உன்னிடம்’ ஒன்றை நான் யாசிக்கிறேன் எனக்கு ஈமக்கடன் செய்ய நீ இருக்க வேண்டும்.... அதனால் இந்த மகுடம் உனக்கு வேண்டாம்.”

அவ்விடத்தில் சில கணங்கள் பேய் அமைதி.

“தந்தையே தங்கள் கட்டளையை நான் ஏற்கிறேன்’ காரணமில்லாமல் பேசமாட்டீர்கள். நீங்கள் எனக்கு நன்மை செய்தாலும் தீமைசெய்தாலும் சரி.. நான் என் சிறிய தந்தையின் வைத்தியத் தொழிலைத் தொடர்ந்து செய்வேன். மன்னனாவது எனது ஆசையல்ல.’

“பரநிருபா. உன் முடியைப். பறிப்பது என் நோக்கமல்ல. அரியணை பஞ்சு மெத்தையல்ல. அரசியல் ஒரு சதுரங்கம். கெட்டிக்காரனே பிழைக்க முடியும் ஒரு புறம் வன்னியர்கள்.....மறுபுறம் தென்னிலங்கை சிங்கள மன்னர்கள்.. சூழவுள்ள சமுத்திரத்தில் போர்த்துக்கேயப் பறங்கிகள்.. ..இந்தச் சூழலில் அரசைக் காக்க ஒரு மாவீரன் தேவை..உன் வீரத்தை நான் குறைவாக மதிப்பிடவில்லை..”

“என்னிலும் வீரனா? அது யார்? நான் நினைப்பது போல தம்பி சங்கிலியா தந்தையே?”

“சரியாகவே சொன்னாய் மைந்தா....”

தூண் மறைவில் நின்ற சங்கிலி திகைத்துப் போனான் விழிகள் நீரைச் சொரிந்தன. நம்பவே முடியவில்லை.

“அண்ணன்மாருக்குக் கொலைகாரரால் ஏற்பட்ட தீமை சங்கிலிக்கு மட்டும் ஏற்படாதா?”

"இல்லை.." பரராசசேகருக்கு முன் வள்ளியம்மைதேவி குறுக்கிட்டாள்.

"சங்கிலி மன்னனாவதை நாட்டு மக்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமே,? பரநிருபசிங்கன் இருக்க சங்கிலியா பெரியபிள்ளை என்னவானான்? பரநிருபன் மறுத்தால் அவன் மூத்த மகன் பரராசசிங்கன் இருக்கிறானே? இவ்வளவு பேரைத் தாண்டி சங்கிலி மன்னனாக முடியுமா?" என்றாள் ராணி.

"அவற்றை நான் பார்க்கிறேன்.. தலையிடாதே...." என்றார் மன்னர் பரராசசேகரர்.

"எப்படியும் சங்கிலி மன்னனாக முடியாது சுவாமி."

"ஏன்,?"

வள்ளியம்மைதேவி சிறிது நேரம் மௌனம் காத்தார்

"ஏனென்று கூறு ராணி?'

"சங்கிலி ஒரு வைப்பாட்டியின் மகன்."

எதை அவன் பிறர் வாயின்று கேட்கப் பிரியப்பட மாட்டானோ அதையே சங்கிலி கேட்டான்.

## அத்தியாயம் 4



# சங்கிலி அளித்த வாக்குறுதியும் மந்திரிமனை குழப்பமும்

இரவின் அந்தகார இருளில் ஆழ்ந்து கிடந்த மருத்துமாமலைவனத்தின் அமைதியை உதயவல்லி குலைத்தாள்.

“மன்னரே வருக “

மாமலைவனத்து மலர்கொடிகள் இவ்வளவு அழகாக இடை நெளித்து நிற்குமா?

“மன்னரா,இதென்ன புதுவிளிப்பு?”

“மன்னரை எப்படி அழைப்பதாம்?”

“யார் சொன்னார்கள்.?”

“பரவை சொன்னாள்.”

“எவ்வளவு வேகமாகக் கதை பரவுகிறது? வேறு என்ன சொன்னாள்’,”

“அவ்வளவு தான்.”

“உன் சிநேகிதி தானே பரவை. அவளுக்கு பதவியா வன்னிமை உலோக நாகதொண்டநாயக்கனை முற்றாக்கியுள்ளோம். நிச்சயம் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண அரசின் பெயரால் தற்கவிகாரை ஒன்றினையும்அங்கு தண்டநாயக்கன் அமைத்துள்ளான்..”

உதயவல்லி கலகலவெனச் சிரித்தாள்.:”ஏமாற்றம்

”யாருக்கு,?’

“உங்களுக்கும் பதவியா வன்னிமைக்கும். பரவை உங்கள் நண்பர் கனகராஜரை விரும்புகிறாள். அது மட்டுமா இருவருக்கும் எங்க மாதிரி தொடர்பாம்….’

சங்கிலி திகைப்புற்றான். அவளை நோக்கினான்

கருநாகமென நெளிந்து கிடந்த பின்னலை கரத்தில் பற்றி முறுக்கியபடி நின்ற உதயவல்லியின் தோற்றம் அவனை ஒரு கணம் கவ்வி இழுத்தது உடலோடு அணைந்துகிடந்த மல்மல் பட்டின் பளபளப்பு அவள் உடல் வளைவின் அற்புதங்களைக் காட்டின.

“உதயா..” பிரேமையின் அழைப்பாக அவன் நெஞ்சிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

‘பிரபு, எனக்கொரு சத்தியம் செய்து தருவீர்களா?”

“என்னையே உனக்குத் தந்த பின் ஒரு சத்தியம் செய்வது பெரிதா? கேள் உதயா…ஒருவரில் நம்பிக்கை குறையும்போது சத்தியம் கேட்பார்களாம். அது போல..’

“அப்படி ஒன்றுமில்லை…. உங்கள் மீது பரிபூரண நம்பிக்கையுள்ளது. என் திருப்திக்காக சத்தியம் வேண்டாம்..ஒரு வாக்குறுதி தாருங்கள்.”

“என்னவென்று உதயா?.”

“நீங்கள் மன்னரானால் நீயே என் பட்டத்து ராணி என்று.”:

“பைத்தியமே இவ்வளவு தானா? நீ பட்டமகஷியானால் தான் நான் அரசனாவேன். போதுமா?”

“அவ்வளவே...”

அடிவளவில் அந்த நாயின் ஊளை அன்றும் எழுந்தது.

அரண்மனைக்கு முன்னால் ராசவீதி வடக்கு நோக்கிச் சென்றது.. அந்த வீதியின் மேற்குப் பக்கத்தில் அமைந்த மாளிகை மந்திரிமனையாகும் பரநிருபசிங்கர் அந்த மாளிகையை தனதாக்கியிருந்தார். இன்று அம்மாளிகைதான் பெயருக்கு ஏற்ப மந்திரி மனையாகப் போகின்றது. சங்கிலி மன்னனாக முடி புனைந்தால் பரநிருபசிங்கர் மந்திரியாக அமர்வார். உதயவல்லியும் சங்கிலியும் குலாவிக் கொண்டிருந்த போது பரநிருபசிங்கர் மாளிகையில் அவரது மனைவி மாதவிதேவியாலும் மகன் பரராசசிங்கனாலும் புதிய பிரச்சினை கிளம்பியது. அவர் மனம் குழம்பித்தவித்தது.

“நீங்கள் செய்தது மகாதுரோகம். பெற்றமகனுக்கே துரோகம். செய்துவிட்டீர்கள்.”என்று மாதேவி குமுறினாள்.

“நானா துரோகம் செய்தேன். சிந்தித்துப் பார்த்தாள் உண்மை தெரியும்”

“சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது நீங்கள் செய்ததற்கு என்ன பெயர்,”

“எனது மகன் உயிரோடு வாழவேண்டும்.”

“மகனின் நன்மை கருதியிருந்தால் உங்களுக்கு உரிமையான அரசை தம்பிக்கு விட்டுக் கொடுப்பீர்களா? உங்களுக்கு ஆளப்பலமில்லை என்றால் மகனுக்குமா இல்லை? யாழ்ப்பாண சிம்மாசனத்தில் அமர வேண்டிய மகன்.”

“வார்த்தைகளைக் கொட்டாதே. அரசாட்சி என்பது விளையாட்டன்று . ஆசைப் பட்டு முடி புனைந்தபின் அவதிப்படுவதிலும் திறமையுடையவர்களுக்கு விட்டுக் கொடுப்பது மேல்..”

“நீங்கள் துரோகம் செய்துவிட்டீர்கள் நான் மன்னனின் மகனாக வாழ வேண்டும் அல்லது மன்னனாக வாழவேண்டும்.” என்றான் பரராசசிங்கன்.

“நீ மன்னனாக ஆசைப்படுகிறாய். நீ உயிரோடு வாழ்ந்து எனக்கு ஈமக்கிரியைகள்.:. செய்ய வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன். நீ சிறுவன். அரசியலின் நெளிவு சுழிவுகளை அறியாதவன்.’

பரராசசிங்கன் புலியாகப் பாய்ந்தான்.

“நானா சிறுவன்? உங்களுக்கு நான் சிறுவனாக இருக்கலாம். என்னிலும் பார்க்க சங்கிலி சித்தப்பா நான்கு வயது தான் அதிகம்.”

“குமாரா, உன் சித்தப்பா மன்னனாவதை நீ விரும்பவில்லையா? “

“எனக்கு உரித்தான அரசுக்கு அவர் உரிமை கொண்டாடக் கூடாது. அதை நான் ஒரு போதும் விரும்பமாட்டேன்.”

“உன்னால் யாழ்ப்பாண அரசின் மகுடத்தை தாங்க முடியுமா?”

‘நிச்சயமாக முடியும்.”

“பரிபாலனம் என்பது பஞ்சு மெத்தையல்ல, குமாரா?”

“அறிவேன் தந்தையே...”

“குதர்க்கம் பேசுகிறாய்..”

“உரிமைக்காகப் பேசுவது குதர்க்கமா?’

“இன்று நாட்டைக் கருமேகங்கள் சூழ்ந்துள்ளன..”

“வீணாகப் பயமுறுத்த வேண்டாம். ‘

“பயமுறுத்தவில்லை. உன்னால் வன்னியரை அடக்க முடியுமா? தென்னிலங்கை சிங்களவரை வெற்றி கொள்ள முடியுமா? புதிதாக வந்திருக்கும் போர்த்துக்கேயரைப் பணிய வைக்க முடியுமா?”

“முடியும்....”

“உன் தாத்தாவிற்கு அளித்த வாக்கை காப்பாற்ற உதவி செய். கொடுத்த வாக்கை மாற்ற மாட்டேன்....”

பரராசசிங்கன் முகத்தில் ஏமாற்றமும் சினமும் குமுறின. அவன் ஆத்திரத்தோடு தகப்பனைப் பார்த்துவிட்டு வெளியேறினான்: பரராசசேகரர் மனைவியைப் பார்த்து விளித்தார்:

“தேவி உனக்குக் கூடவா அரச மோகம்.?”

விருட்டென்று எழுந்த மாதவி கணவனை அனல் தெறிக்கப் பார்த்தாள்.

“நீங்கள் ஒரு துரோகி எங்களுக்குச் சொந்தமான அரசை ஒரு வைப்பாட்டியின் மகனுக்கு அளித்தீர்கள்..”

பரநிருபரின் முகம் திடீரென மாறியது.

“என்ன சொன்னாய்? அடி மாதவி, ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள். அந்த வைப்பாட்டியின் மகனையே மன்னனாக்கிக் காட்டுகிறேன்” என்றார்.

“காட்டுங்கள்.. அதற்கு முதல் உங்கள் அத்தை இறந்துபோன சிங்கபாகுவின் மூத்த சகோதரி பெரியநாச்சியார் கண்மணி நாச்சிக்கும் திருகோணமலை வன்னிமை கோகர்ணவன்னிக்கும் பிறந்த புத்திரனுக்கு யாழ்ப்பாண அரசு சொந்தம் என்று கூறுகினமாம். திருமலை வன்னி என்ன உங்களைப் போல ஏமாந்த சோனகிரியா? அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? அரசுக்கு உரிமை கொண்டாடப் பலர் இருக்கிறார்கள்.”

"அவை அனைத்தையும் சங்கிலி வெற்றி கொள்வான்.”

இவ்வளவையும் வெளியில் பரராசசிங்கன் கேட்டுக் கொண்டு நின்றான். தந்தையின் பிடிவாதமும் தாயின் வேதனையும் தெரிந்தன. அவற்றுடன் யாழ்ப்பாண அரசின் மணிமகுடமும் கண்களின் முன் தோன்றியது. ’இதற்கெல்லாம் வழி சொல்லக் கூடியவர் மந்திரி அப்பாமுதலி ஒருவரே’ என்ற எண்ணமும் தோன்றியது.

# அத்தியாயம் 5



## ஏழூர் அதிபன் பரநிருபசிங்கன்

மந்திரிகளுள் அடியாருக்கு நல்லாருக்கு அடுத்ததாக அதிக செல்வாக்கு உடையவர் அப்பாமுதலியாவார். வயோதிபர் ஆயினும் கூன் விழாத முதுகு. தந்திரமாக அலையும் கண்கள். அடர்ந்து வளர்ந்திருந்த தாடி. தொண்டை மண்டலத்துபிரபுவம்சத்தைசார்ந்தவர். அரசசபையில்மிகுந்தசெல்வாக்குண்டு. .இந்த அப்பாமுதலிதான் தனக்கு அரசுரிமை கிடைக்க வழிவகுக்கக் கூடியவர் என பரராசசிங்கன் நினைத்ததில் தவறில்லை.

தன் தாடியை உருவியபடி குறுக்கும் நெடுக்குமாக நடந்த அப்பாமுதலியின் மன அரங்கில் பல நிகழ்ச்சிகள் நடனமிட்டன.

"இவ்வளவும் நடந்து விட்டனவா? உன் தந்தையா இராச்சியத்தின் முடியை வேண்டாம் என்றார்? நம்ப முடியவில்லை. பதவிக்காக எவ்வளவோ நடக்கின்றன. பதவிக்காக உறவுகளை உதறித் தள்ளியவர்கள். வலிய வந்த பதவியை தூக்கியெறிவார்களா,? அப்பத்தை தூக்கியெறியும் மந்தி போல

அப்படி ஒரு பைத்தியக்காரனை நான் காணவில்லை. பரநிருபசிங்கருக்கு என்ன நடந்தது?"

"முடியை மறுத்ததுடன் தன் தம்பிக்கு பட்டம்கட்டுவதாகவும் கூறியுள்ளார்."

"உனக்குச் சேரவேண்டிய அரசை இழக்க நீ விரும்பவில்லை..? இந்த இராச்சியம் உன்னுடையது தான் சங்கிலி எத்தனை பேரைத் தாண்டவேண்டும். பட்டத்து இளவரசனாக உன் தந்தை வரவேண்டும். அடுத்து நீ அல்லாவிடில் பெரியபிள்ளை...அல்லது அவரது பிள்ளைகள்..அதற்குப் பின்னர் தான் சங்கிலி.. அப்படி முறையிருக்க.. நல்லா இருக்கிறதே? அரச சபையில் கடுமையாகப் பேசி முடிவெடுக்க வேணும்."

"அதற்காகத் தான் உங்களைத் தேடி வந்தேன். :"

அப்பாமுதலி சிந்தனையில் ஆழ்ந்தார்.

"பரராசசிங்கா ,நீ என் மகன் போன்றவன். உனக்கு எப்படியும் யாழ்ப்பாண மகுடத்தைக் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கு வழிசெய்வேன். எப்படியும் சிம்மாசனத்தில் உன்னை அமரச்செய்வேன். இது சத்தியம். ஆனால்.:"

அப்பாமுதலியின் 'ஆனால்' பரராசசிங்கனுக்குப் பேரிடியாக இறங்கியது.

"ஆனால் உன்னை அரசனாக்கினால் எனக்காக எதையும் செய்வாயா?"

"இதென்ன கேள்வி உங்களுக்கு இல்லாததா,? கந்தன் மேலாணை... என்ன செய்ய வேண்டும்?'

அப்பாமுதலி குறுக்குதம் நெடுக்குமாக நடந்தார். எதையோ சிந்திப்பதுபோலக் காணப்பட்டார். அவருடைய மௌனம் பரராசசிங்கனை அமைதி இழக்கச் செய்தது.

"உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?' என்று திரும்பவும் கேட்டான்.

"பரராசா, உன்னால் முடியக் கூடியதையே கேட்கிறேன் நீ மன்னன்னானால் என் மகளை உன் பட்டத்து ராணியாக்குவாயா?"

அவன் கண் முன் அழகே உருவான உதயவல்லி தோன்றினாள். புன்னகையும் புரிந்தாள். அவளது குறு குறுத்த விழிகளும் சிறிது அதிகமாக

மேலுயர்ந்த நெற்றியும்,மாதுளை உதடுகளும், விம்மிப் பூரித்த மார்பகங்களும் தோன்றின. அப்பாமுதலியின் விருப்பத்தை மறுக்காமல் எற்றுக்கொண்டான். நம்பிக்கைக் கனவுகளோடுடவிடை பெற்றான்.

இவ்வளவையும் உதயவல்லி கேட்க நேர்ந்தது. திகைத்துப் போனாள்.' இதென்ன விபரிதம்?'

"உங்களால் அது முடிவே முடியாது." என உதயவல்லி அலறினாள்.

"உதயவல்லி நீ இங்கு எப்போது வந்தாய்? யார் அழைத்தது?"'

"யாரும் அழைக்கவில்லை. நானாக வந்தேன். உங்களுக்கு உண்மை தெரியாது.." அவள் யாவற்றையும் விபரமாகச் சொன்னாள். அப்பாமுதலி இடிவிழுந்தவர் போலானார் 'பரராசசிங்கனுக்கு வாக்களித்து விட்டேனே? சங்கிலி நம்பக் கூடியவனா? சங்கிலி நம்பக் கூடியவனல்லன். தன் சுயநலத்துக்காக அரசியல் சதுரங்க காய்களை தன் பக்க வெற்றிக்காக நகர்த்தியவன் நம்பிக்கைக்கு உரியவனாவானா?'

"உதயவல்லி சுருக்கமாகக் கூறிவிடுகிறேன் சங்கிலியை மறந்து விடு. அவன் நம்பக் கூடியவனல்லன்.

உதயவல்லி துடித்துப் போய் கேட்டாள்:

"அவரிடம் என்ன குறைகள் கண்டீர்கள் தந்தையே?"

"குறைகள் பலவுள்ளன. பரராசசிங்கன் அரசிற்குரியவன். அவனுக்கு கந்தன் மேலாணையாக வாக்கு அளித்து விட்டேன் அதனை நீ காப்பாற்ற வேண்டும்.:

"உங்கள் வாக்கைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்னைப்பலிக் கடாவாக்காதீர்கள். சங்கிலி நிச்சயம் என்னை மனைவியாக எற்றுக் கொள்வார்"

"அவன் மன்னனானதும் ஒரு அரசகுலப் பெண்ணைப் பட்டத் துராணியாக்குவான். உன்னை ஆசைநாயகி ஆக்குவான். இருந்து பார்... அது பரம்பரைக் குணம்."

"இல்லை....நிச்சயம் பட்டத்து ராணியாக்குவார்.."

அப்பாமுதலி சற்று யோசனையில் ஆழ்ந்தார்.

"அவன் உன்னைப் பட்டத்து ராணியாக்காவிடில்.."

"உங்கள் விருப்பம் போல நடப்பேன்" என்றாள் திடமாக.

விதி சிரிப்பாய் சிரித்தது.

காலை வேளையில் அரசசபை கூடியது. அழகான மண்டபமது.எழிலார்ந்த தூண்கள் மேல் விதானத்தை தாங்கி நிற்க ஆலயம் ஒன்றின் புனிதத் தன்மையோடு அம்மண்டபம் விளங்கியது. சிம்மாசனத்தில் மன்னர் பரராசசேகரர் அமர்ந்திருக்க .இரு பக்கங்களிலும் பரநிருபசிங்கரும் சங்கிலியும் இருந்தனர். அரசசபையைச் சேர்ந்த பிரதானிகளும் மந்திரிகளும் இருந்தனர்.

"நான் அரசப்பேரவையை ஏன் கூட்டினேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.' என்றார் பரராசசேகரர்.

"அறிவோம் அரசே. சங்கிலி மன்னராவதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை.. என் அபிப்பிராயத்தில் வேறுபா டுகள் இருக்கலாம். வேறுபாடுகள் இருந்தால் சபை மன்னிக்க வேண்டும். முறை தவறி மன்னராக்கும்போது குழப்பங்கள் ஏற்படும். அரசுக்கு பரநிருபசிங்கருக்குப் பின்னர் சிலருள்ளனர். குழப்பங்களையும் பகைவர்களையும் அடக்க எண்ணி அவற்றைக் கூட்டிக் கொள்வதாக முடியும். சங்கிலி பெரும் வீரர் தான் ஆனால் சிறிய தாய் பிள்ளை."

அப்பாமுதலியின் வாதம் சளசளப்பை ஏற்படுத்தியது. வெற்றி பெற முடியவில்லை. அவருக்குப் பெரும் ஏமாற்றமாக முடிந்தது. மன்னர் திடமாகக் கூறினார்.

"உங்களை அழைத்தது தகவல் தருவதற்காகவே. அபிப்பிராயம் கேட்கவல்ல. மன்னரின் முடிவில் மாற்றமில்லை. "

"பரநிருபரின் நிலை?' எனக் கேட்டார் அடியாருக்கு நல்லார்.

“பரநிருபாசிங்கர் மகாமந்திரியாக இருப்பார்.. அவரின் அதிகாரம் அரசனை ஒத்தது. மகாமந்திரியின் ஆலோசனைப் படியே ஆட்சியை அரசர் நடத்துவார். அவை மட்டுமல்ல அத்துடன் கள்ளியங்காடு, சண்டிலிப்பாய், அராலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய் ,மல்லாகம், ஆகிய ஏழு பிரதான கிராமங்கள் பரநிருபசிங்கனுக்கு மானியமாக வழங்கி ஏழூரதிபனாக்கப்படுவான். அதற்கான பட்டயம் எழுதப்படும். அக்கிராமங்களை அவரின் வாரிசுகள் ஆண்டு அனுபவிக்கலாம். அத்துடன் இன்றிலிருந்து பொக்கிஷ அதிகாரியாகவும் இருப்பார். அவருடைய மேற்பார்வையிலேயே இனி சேது நாணயம் வெளியிடப்படும். அவருடைய நிலவறைக்கு நாணயம் வெளியிடும் யந்திரம் மாற்றப்படும்”

சங்கிலி முடி சூடுவது தீர்மானமாகியது.

“பட்டத்துராணியாக அரசகுலப் பெண்ணொருத்தி அமர வேண்டும்.”

“அதிலென்ன சந்தேகம். அரசகேசரியின் மகள் அரசமாதேவி அதற்காகக் காத்திருக்கிறாள். அரசபெண்ணின்றி முடி சூடமுடியாது..” என்றார் மன்னர். சங்கிலி திக்கு முக்காடிப்போனான். இந்தக்காரணத்திற்காக முடியை இழப்பதா.? அப்பாமுதலி பேயறைந்தவரானார்.

# அத்தியாயம் 6



# அரசமாதேவி

**கா**ற்றினால் அலைப்புண்ட தென்னங் கீற்றுகளின் சரசரத்த ஒலியோடும் மருந்துச் செடிகளின் மேல் 'இஸ்'என்ற இரைச்சலோ:டு ஒளிவீசிப் பறக்கும் மின்மினிகளின் ஒலியோடும் போட்டி போடுவது போல உதாயவல்லியின் குரல் மருத்துமாமலைவனத்தின் அமைதியைக் குலைத்தது. அவளின். அழுகுரலை சகிக்காத சங்கிலி ,"உதயா, ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான்.

"அழுவதற்கென்றே பிறந்து விட்டேன்."

அவன் அவளைச் சமாதானப் படுத்த எண்ணித் தோள்களைப் பற்றினான்.

"என்னைத் தொடாதீர்கள்"

"உதயவல்லி!.."

"அப்படி அழைக்கக்கூட உங்களால் முடிகிறதே, என்னை ஏமாற்றி விடுவதற்கா என்னைக் காதலித்தீர்கள்? என்னை ஏமாற்றிவிட்டீர்கள்.

என்னாசைக் கனவுகளைச் சிதைத்துவிட்டீர்கள். உங்களுடன் எப்படியெல்லாம் வாழலாம் என்று நான் கட்டிய மனக்கோட்டைகளை தூளாக்கி விட்டீர்கள். என்னிதயத்தில் நான் கட்டிய காதல் கோயிலை சிதைத்து விட்டீர்கள். அதில் கல்லும் தூசியும் எஞ்சியுள்ளன. என்னை ஏமாற் றுவீர்களென நான் கனவிலும் எண்ணவில்லை.”

பொங்கும் எரிமலையாக அவள் குமுறினாள். அரசமாதேவியோடு அவளையும் மணக்கும் எண்ணம் சங்கிலிக்கு இருந்தது. அதனைக் கூற உதயவல்லி விடவில்லை. பெருக்குக் கடலெனப் பொங்கினாள்.

“உதயா, நான் சொல்வதைக் கேள்.”

“கேட்பதற்கு என்ன இருக்கிறது? கேடடுத் தோற்றுவிட்டேன். பட்டத்துராணி நீயே எனச் சத்தியம் செய்தீர்கள். இன்று மாறிவிட்டீர்கள் அரசமாதேவியோடு என்னையும் சேர்க்கிறீர்கள். உங்களுக்கு இதயமேயில்லையா?”

“உதயா,நீ என்னையா பட்டத்துராணி பதவியையா காதலித்தாய்,”

“இரண்டையும்.”

“உதயா அரசி என்ற அந்தஸ்தை தராவிடிலும் என்னிதய சிம்மாசனத்தில் உனக்குத்தான் முதலிடம்....”

“கேவலம் ஒரு வப்பாட்டியாக இருப்பேனா?”

“உதயா, நான் சொல்வதைக் கேள்..அரசமாதேவியோடு உன்னையும் மணக்க அவை அனுமதித்ததே பெரிய காரியம்.”

‘போதும்..போதும்...போய்விடுங்கள். உலகமே உங்களைச் சபிக்கும்.. உங்களுக்காக அரசமாதேவி காத்திருப்பாள் போய்விடுங்கள். என் வாழ்வில் குறுக்கிட்ட கருநாகம்.”

‘அவளை திட்டுகிறாயா.?’

“அவளை நானேன் திட்டவேண்டும். உங்களையல்லவா திட்டவேண்டும். உங்களையுமேன்? நீங்கள் உங்கள் பிறவிக் குணத்தைக் காட்டிவிட்டீர்கள்..”

“எது என் பிறவிக்குணம்?

“கேவலம் ஒரு வைப்பாட்டியின் மகன் எப்படி இருப்பான்.”

சங்கிலி துடித்துப் போனான். அவள் வார்த்தைகள் அவன் இதயத்தை இடித்தன.

“எடியே உதயவல்லி அடி பாவி, உன் மிதிருந்த அன்பை ஒரு வார்த்தையினால் குலைத்துவிட்டாய். ஒரு வைப்பாட்டியின் மகன் அரசனாகிக் காட்டுகிறேன். அடிமைச் சேவகம் செய்யும் மந்திரியின் மகள் நீ பட்டத்துராணியாக கனவு காணலாமா? வருகிறேன்....”

“போகிறேன் எனலாம்...”

மருத்துமாமலைவனம் சோகத்தில் மூழ்கியது.

பரவை கனகராஜனை நேசத்தோடு கண்களில் ஆர்வம் பொங்கப் பார்த்தாள். கனகராஜன் ஒற்றர்படையின் தலைவன். சங்கிலியின் இஷ்ட நண்பன். ஆயினும் இராச மடப்பள்ளித் தலைவனின் மூத்த மகள் பரவை பேசினாள்: “பிரபு.என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?” என்ற பரவையின் கைகளைப்’ பற்றிக்கொண்ட கனகராஜன் அவளது முகக்கமலத்தை வைத்த விழிகள் அகற்றாது பார்த்தான்.

“என்ன என்னவோ போல இருக்கிறீர்கள்?”

“பரவை, இன்னும் எவ்வளவு காலம் தான் இப்படியே இருக்கிறது,? உன்னை என் இல்லத்தரசியாக்காமல்..”

“இல்லத்தரசி மட்டுமா?’

“என்னுள்ளத்தரசியும் கூட.”

பரவை வெட்கப்பட்டாள்

“என் பெற்றோரிடம் கேளுங்கள்...”

“நானா? ஒரு நாட்டின் இளவரசியை கேவலம் ஒரு இராசமடப்பள்ளியின் மகனுக்குத் தருவார்களா, பரவை...பதவியா வன்னியன் உலோகநாத தண்டநாயக்கனுக்கு நிச்சயமான பெண் நீ....”

திடீரென ஒரு குரல் ஒலித்தது.

"முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக் கூடாது."

பரநிருபசிங்கர் நின்றிருந்தார். அவர் விழிகள் சிவந்தன. கனகராஜனை ஏறிட்டுப் பார்த்தார். கோபம் கண்களில் தெரிந்தது.

"உனக்கு என்னடா துணிச்சல்? ஓர் இளவரசியின் கரங்களை நீ தொடுவதா? மன்னனின் சிநேகிதன் என்றால் எதுவும் செய்யலாமா,? நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தது போல...."

நல்ல வேளை அந்த நேரத்தில் சங்கிலி வரநேர்ந்தது. தமையன் கனகராஜனை நாயென உதாரணம் சொன்னமை வெறுப்பைத் தந்தது.

"தகுதி உணர்ந்து நேசித்திருக்க வேண்'டும் சங்கிலி."

"தகுதியைப் பார்த்தா உண்மைக் காதல் பிறக்கிறது,அண்ணா?"

"நமது அரசக்குலப் பெருமை என்னாவது? பரவை இளவரசி.. அவன் மடப்பள்ளியின் மகன்.:"

"இதில் ஒன்றும் தவறில்லை. மனமொத்த இருவரைப் பிரிப்பதா?"

"நீ சொல்வதைப் பார்த்தால் இருவருக்கும் நீயே கட்டி வைத்துவிடுவாய்' போல இருக்குது. நான் இதற்கு ஒததுக் கொள்ள மாட்டேன். '

"மன்னியுங்கள் அண்ணா.. இது அரசியல் அல்ல .வாழ்க்கை.":

பரநிருபசிங்கர் கோபத்துடன் நகர்ந்தார். அதன் பின் பரவை கண்ணீர்விட்டு அழுதாள்.

மாளிகைக்குத் திரும்பி வந்த பரநிருபசிங்கரை அறையில் அலங்கோலமாகக் கிடந்த மனைவி மாலதிதேவி எதிர்பட்டாள். அவள் கோலம் அவரைக் கலக்கியது.

"நீங்கள் துரோகி.. தம்பிக்கு முடியைக் கொடுத்து வசிட்டீர்கள்.."

"மாலதி, நடந்து முடிந்தவை."

"காலம் ஒன்றும் கடந்துவிடவில்லை. கொடுத்த மகுடத்தை மீளக் கேளுங்கள்."

பரநிருபசிங்கர் திகைத்துவிட்டார்

“மாதவி அவன் சர்வ அதிகாரங்களும் கொண்ட மன்னன். முடியைக் கேட்பதா?”

“உங்கள் மனைவியை நீங்கள் விரும்புகிறீர்களா?”

“உயிரினும் மேலாக..”

“நான் உயிரோடு இருக்க யேண்டுமாயின் உய்கள் மகன் பரராசசிங்கனை மன்னனாக்குங்கள்.:”

ஏழூர் அதிபரின் விழிகள் கலங்கின.

“எப்போதாவது ஒரு நாள் மகனை மன்னன் ஆக்குவேன்.”

## அத்தியாயம் 7



# சேதுகாவலன்

**யா**ழ்ப்பாண இராச்சியத்துக்கு புதியதொரு மன்னன் கிடைத்து விட்டான் ஆரியச் சக்கிரவர்த்திகள் நாடு பேணி, தமிழ் பேணி, கலை பேணி அமர்ந்திருந்தார் எழில் நந்திச் சிம்மாசனத்தில்' சங்கிலி அமர்ந்து ஒரு திங்கள் கழிந்துவிட்டது. நாட்டின் விழாக்கோலம் படிப்படியாக் குறைந்து அரசு வழமைக்குத் திரும்பியது.

இன்று அவன் யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிபதி. காலை மலர்ந்து வெகு நேரமாகி விட்டது மஞ்சத்தைவிட்டெழுந்துசாளரத்தை நாடிச் சென்றான்'. தூரத்தில் அரண்மனை வாசலில் சேதுச் சின்னம் தாங்கிய கொடி பறந்து கொண்டிருந்தது. எல்லாம் கனவு போல. எத்தனை கோடி நினைவுகள்?

காற் சலங்கை ஒலி 'கல்கல் 'என எழுந்தது. மெதுவாக மணிக் கதவங்களைத் திறந்து கொண்டு: அவனது பட்டமகஷி அரசமாதேவி வந்தாள் மன்னன் அசையாது நின்றான்

"சுவாமி!..."

அழைப்போடு மென் மலர் மொக்கொன்று அவன் தோளில் விழுந்தது. வளையல்கள் சப்தித்தன.

"என்ன அப்படி பலமான யோசனையாம்?"

சங்கிலி திரும்பினான். பனிச்சையாகக் கட்டிய கூந்தலில் தேன் சிந்தும் மலர்கள் குவிந்தும் விரிந்தும் மிருக்க, பிறை நுதலுக்குக் கீழ் அந்த விற்புருவங்களுக்குக் கீழ் இரு ஏக்க விழிகள் இமைக்க மறந்து தேங்கி நின்றன.

"அரசமாதேவி" என அழைத்தான்:'நீ என்ன கேட்டாய்? உன் எழில் தரும் பிரமிப்பில் மறந்து போனேன்.."

"கேலியாக இருக்கிறதா?"

"பட்டத்துமகஷியிடம் கேலியா? உண்மையாகத் தான் கேட்டேன்'

சங்கிலி மௌனமாக மானிகை வாசலில் காற்றில் படபடத்துப் பறக்கும் நந்திக்கொடியைப் பார்த்தான்

"அந்த சேதுக்கொடியில் என்ன இருக்கிறது?"

"எவ்வளவோ இருக்கிறது மாதேவி..எங்கள் சின்னம் நந்தி அதாவது சேது எங்கள் கொடி நந்திக்கொடி. பட்டயமும் சேது சின்னத்தையும் கொண்டது. குலச்சின்னம் சேது. எங்கள் நாணயங்களில் சேது என்றே பொறிப்போம். வார்க்கின்ற பொற்காசுகளிலும் செப்புக்காசுகளிலும் சேது எனப் பொறிப்போம். அரசமாதேவி, சேது என்றால் பலஅ ர்த்தம் இருக்கிறது.அணை, எல்லை, கடல் வழிப்பாதை, பாலம் எனப் பலவாறாகும்"

"அதனால் தான் இராமர் கட்டிய பாலத்தை சேது பாலம் என்றழைக்கின்றனர். இராமேஸ்வரதீவையும் சேது என்பார்கள். யாழ்ப்பாண அரசர்களுக்கு இன்னொரு பெயர் சேது காவலன் அல்லவா?"

"சரியாகவே சொன்னாய். கோட்டகம கல்வெட்டில் சேது என எம் முன்னோர்களள் பொறித்துள்ளனர். செகராசசேகரமாலைய்யில்' சேதுகாவலன்'

எனக் குறித்துள்ளது. 'உம்பர் வந்திறஞ்சும் சேது உயர்கரைக்காவலன்'எனவும் ஒரு நூல் கூறும். செகராசசேகரை தட்சண கைலாச புராணம் ஓரிடத்தில்' இடபவான் கொடி எழுதிய பெருமாள்' என்று கூறும். சேது நாணயத்தின் ஒரு பக்கத்தில் சேது என்ற எழுத்தும் மறுபக்கத்தில் குத்துவிளக்கு. மயிலின் தலை, திரிசூலம், பிறைச்சந்திரன் என்பன காணப்படும். இன்று இந்த நாணயங்களை வார்க்கும் பொறுப்பை அண்ணர் பரநிருபசிங்கர் ஏற்றுள்ளார். அவருடைய மாளிகையின் நில அறைகள் நாணய வார்ப்பு ஆலைகளாக விளங்குகிறது." '

அரண்மனை வாயிலூடாக பயண வண்டில் ஒன்று பிரவேசித்தது. அலங்காரமான அந்த வண்டிலை தம்பலகாமத்து எருதுகள் இரண்டு இழுத்தன. அவற்றின் வாய்களில் நுரை கக்கியதிலிருந்து வெகுதூரத்திலிருந்து புறப்பட்டு வருவது புரிந்தது. அந்த வண்டிலைத் தொடர்ந்து புரவி ஒன்றும் பிரவேசித்தது.

"தேவி, நெடுந்தீவு வெடியரசன் மழவமாப்பாணர் என்னைக் காண விரைந்து வருகிறார் . அவரைத் தொடர்ந்து புரவியில் கனகராஜன் வருகிறான். நான் கீழே செல்கிறேன்."

மழவமாப்பாணர் மிகுந்த ஆவேசத்தோடு காணப்பட்டார்.

"பிரபு. வன்னியரின் தொல்லை திரும்பவும் தொடங்கிவிட்டது. முந்த நாள் இரவு தீவுகளுக்கு வந்து மாடுகளைக் களவாடி நடுக்கடலில் நங்கூரமிட்டிருந்த போர்த்துக்கேயருக்கு இறைச்சியடிப்பதற்கு விற்றுள்ளார்கள்."

"அதுவரை நீங்கள் எங்கே?"

"நயினாதீவு போயிருந்தோம் மன்னா. களவாடப்பட்ட பெரும்பாலான மாடுகள் இராமேஸ்வரம் சிவாலயத்துக்காக வளர்க்கப்பட்டவை: சங்கிலி மன்னன் கொதிப்படைந்தான்.

":வன்னியர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும்.."

"இன்னுமொரு விடயம் மன்னா." என்றார் மழவமாப்பாணர்.

"என்ன?"

"நமது தீவின்' கிழக்குக்கரையில் வெடியரசன் கோட்டைக்கு அருகில் போர்த்துக்கேய பாரிய மரக்கலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. நமது இராச்சிய

வழக்கப்படிஅதிலிருந்தநான்குமாலுமிகளையும்கைப்பற்றிசிறையிட்டுள்ளேன். கப்பலிலிருந்த பொருட்களைக் கைப்பற்ற கணக்கெடுக்கும்படி முதலியாருக்குப் பணித்துள்ளேன்."

"நல்லது மாப்பாணரே..கணக்கெடுத்ததும் அறிவியுங்கள்"

மழவமாப்பாணர் விடை பெற்ற பின்னர் கனகராஜன் வந்தான்.

"வன்னியர் செயற்பாடுகளை அறிந்திருப்பீர்கள். நான் புதிதாகச்சொல்ல ஒன்றுள்ளது போர்த்துக்கேயர் வாங்கிய மாடுகளுக்கு இரண்டிற்கு இரு காசு அதுவும் நம் இராசதானி சேது காசு கொடுத்தார்களாம். அதுவும் பெறுமதிக்கு மிஞ்சி... நமது சேது ஒரு காசு இருபத்தைந்து நெல் பறைக்கு சமன்...போர்த்துக்கேயருக்கு நமது சேது காசு எப்படிக் கிடைத்தன? மற்றது இந்தியாவிலிருந்து தேயிலை, மிளகாய், மிளகு என்பனவற்றை ஏற்றிக் கொண்டு கறுவாப்பட்டை ஏற்ற நீர்கொழும்பு நோக்கிச் சென்ற போர்த்துக்கேயரின் பாரிய மரக்கலம் நெடுந்தீவில் கரை தட்டிவிட்டது. செய்தி அறிந்து பேர்த்துக்கேய கப்பித்தான் தங்களிடம் வரப் புறப்பட்டுவிட்டானாம்." ஒரே மூச்சில் செய்தி அனைத்தையும் கனகராஜன் சொல்லி முடித்தான். கனகராஜன் அறியாமல் எதுவும் இந்த நாட்டில் நடக்கமுடியாது என மன்னன் தனக்குள் அவனை மெச்சிக்கொண்டான்.

போர்துக்கேய சரக்குக் கப்பல் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. அக்கப்பல் யாழ்ப்பாண அரசனுக்கே சொந்தமானது. அது தான் வழக்கம். அவ்வாறிருக்க பேச்சு வார்த்தைக்கு கப்பித்தான் ஏன்? கப்பலை விடும்படி கேட்பானோ ?

போர்த்துக்கேயருக்கு சேது காசுகள் எப்படிக் கிடைத்தன? இவ்வளவு தொகையாகக் கிடைத்த வழியை ஆராயவேண்டும். போர்த்துக்கேயரின் நாணயங்கள் செப்புக் காசுகளல்ல. அவை பர்தாங்கு, செறாபிம், சக்கரம், லாறிம், றீஸ் என வழங்கப்படுகின்றன. 150 சேது காசுகள் ஒரு பர்தாங்கு எனப்பட்டன. பணப் பழக்கத்தை யாழ்ப்பாண மக்கள் நன்கறியாத காலம். சேது காசைப் போர்த்துக்கேயர் மாடு கொள்வனவிற்குப் பயன்படுத்தியுள்ளார்கள். முன்பு பண்டமாற்று செய்தார்கள். 10 பறை நெல்லிற்கு ஒரு மாடு விற்றது போக இனி ஒரு செப்புக்காசுக்கு அதாவது 25 பறை நெல்லுக்கு ஒரு மாடு சமனாகிவிட்டது. போர்த்துக்கேயர் பழக்கி விட்டார்கள் கரையோர மக்கள் தங்கள் கால் நடைகளை போர்த்துக்கேயருக்கு விற்பதை இனி தடுக்க முடியாது என மன்னன் எண்ணமிட்டான்.

கனகராஜன் தொடர்ந்தான்:

"மன்னரின் தங்கை பரவையை மணம் முடித்த மைத்துனன் என்பதிலும் தங்களின் உளவுப்பிரிவின் தலைவன் என்பதை நான் மறக்கவில்லை. அந்த உரிமையில் எனக்குத் தெரிந்தவற்றை மன்னருக்குச் சொல்கிறேன் யாழ்ப்பாண இராச்சியத்தில் பகைவர் கூடிவிட்டனர் மன்னா.. நம்பிக்கையானவர்கள் பகைவர்களாகி விட்டனர்."

"யாரைச் சொல்கிறாய், கனகராஜா?"

"உங்கள் சகோதரர் இப்போது எதிராளியாகி விட்டார். இராச்சியத்தை விரும்பி விட்டுக்கொடுத்தாலும் இப்போது மனம் மாறிட்டார் மகனதும் மனைவியினதும் ஓயாத தொல்லைகளால் உங்களிடமிருந்து அரசைப் பெற அவாவுகிறார் என்றாவது ஒரு நாள் பரராசசிங்கனை அரசனாக்குவதாகச் சத்தியம் செய்துள்ளார்கள்."

"அப்படியா?."என சங்கிலி சிரித்துக் கொண்டான்.

"மற்றவர் யார்?"

"உண்யைாகத் தான் சொல்கிறேன். மற்றவர் மந்திரி அப்பாமுதலி. அரசசபையில் தனது பேச்சு எடுபடாததால் கொதிப்படைந்துள்ளார். பரராசசிங்கரோடு சேர்ந்துள்ளார். மற்றவர் ஊர்காவற்றுறைத் தலைவர் காக்கைவன்னியர். அவர் உண்மையில் வன்னியரல்லர். உண்மைப் பெயர் சாரங்கமாப்பாணர். மக்கள் இவரது கருநிறத்தை கருதி வைத்த பெயர் காக்கையுடன் வன்னியனைச் சேர்த்துக்கொண்டார். அடங்காபற்று வன்னியருடனும் போர்த்துக்கேயப் பறங்கிகளுடனும் தொடர்பு வைத்துள்ளார்

எனச் சந்தேகமுள்ளது. இவர்களிடம் கவனமாக மன்னர் இருக்க வேண்டும்.." என்றான் கனகராஜன்.

மன்னர் யோசனையில் ஆழ்ந்தார். அவரது மைத்துனன் கனகராஜன் பிழையாகத் தகவலை ஒருபொழுதும் தரமாட்டான். பரவையை பலரது ஆட்சேபனைகளுடன் தான் திருமணம் செய்து வைத்தான்.

கனகராஜன் கூறினான்: "மன்னா, இன்னொரு சங்கதி முக்கியமானது.."

“என்ன கனகராஜா?”

“திருகோணமலை வன்னிமை கோகர்ணவன்னியும் பதவியா வன்னிமை உலோகநாத தண்டநாயக்கனும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்களாம். மகாமந்திரி பரநிருபரை இன்று சந்திக்கிறார்கள். அப்பாமுதலியும் காக்கைவன்னியனும் அவர்களுடன் இணையலாம்…”

சங்கிலி நிமிர்ந்தமர்ந்தான்.

“இன்னொரு இனிய செய்தி… தங்கள் தங்கை பரவை உண்டாகியுள்ளாள்.”

# அத்தியாயம் 8



# வன்னியர் வருகை

**ச**ங்கிலி மீண்டும் அரசமாதேவியை மாடத்து அறையில் சந்தித்தான். மகாமந்திரியை வன்னியர் சந்திப்பதைக் கூறினான்.

"யார் இந்த வன்னியர்கள்? யாழ்ப்பாணத்திற்கு எப்படிக் குடியேறினார்கள்? "என்று வினவினாள் மாதேவி.

சங்கிலி விபரித்தான்:

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தெற்கே பிரதான நிலத்தில் அமைந்தது வன்னி. இதனை அடங்காபற்று எனவும் அழைப்பர். இந்த வன்னிப்பிரதேசத்தில் பனாங்காமம், முள்ளியவளை, கருநாவல்பற்று, தென்னமரவாடி, மேல்பற்று, கரிக்கட்டுமூலை, செட்டிகுளம் ஆகிய ஏழும் முக்கிய் குறுநிலங்களாகும். அவற்றைவிட பதவியா, திருகோணமலை, பெரங்காலிப்பற்று. முசலிப்பத்து. உடைப்பாவூர், ஓமந்தை, துணுக்காய், கொட்டியாரம், தட்டுகுளம், மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரதீவு. புத்தளம், மகாவன்னி என்பன இருக்கின்றன. மகாவன்னி அநுராதபுரப் பிரதேசத்தை உள்ளடக்கியிருந்தது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஸ்தாபித்த முதலாவது ஆரியச் சக்கிரவர்த்திக்கு தனது மாமன் மகளாகிய சமதூதி என்பாளை மணம் முடிக்க எண்ணம் வந்தது. அதனால் மாமனாகிய பாண்டிய மன்னனுக்கு முதலில் தூது அனுப்பினான். பாண்டியமன்னன் அறுபது வாட்படை வன்னியரை அழைத்து அவர்களோடு இளவரசியை அனுப்பிவைத்தான். யாழ்ப்பாண அரசன் கூட்டிவந்த வன்னியரை அடங்காப்பற்றினை ஆள நியமித்து ஆண்டுதோறும் தனக்குத் திறைதரும் படி பணித்தான் அவர்கள் தாம் அழைத்து வந்த பதினெண் சாதியினருடன் வன்னிப் பிரதேசத்தில் குடியேறினர். இப்பிரதேசங்களை ஏற்கனவே ஆண்ட தலைவர்களை வெற்றி கொண்டனர். ஆட்சிமுறை யாழ்ப்பாண அரசினை ஒத்திருந்தது. வன்னியர் தலைமையில் முதலியார், பண்டாரப்பிள்ளை, கற்காணி, உடையார், மணியக்காரன், தலையாரி ஆகியோர் இருந்தனர்.

வன்னியர்கள் தத்தமக்குரிய சின்னங்களை வைத்திருக்க அனுமதிக்கப் பட்டார்கள். உதாரணமாகத் திருமலை வன்னியனார் மரகதச்சிம்மாசனத்தைக் கொண்டிருக்கிறார். புத்தள முக்குவ வன்னிமை ராஜவன்னியர் எனப்படுவார். அவர் வெள்ளி வாள். கவசம். கணையாழி என்பனவற்றினைக் கொண்டுள்ளார். புத்தளத்து வன்னிமை முத்திரகூடத்தைக் கொண்டுள்ளார். திருமலை வன்னியர் தனியுண்ணா பூபால வன்னியர் எனப் புகழப் படுவார். அதிக சுதந்தரமும் அதிகாரமும் உடையவர்.

“இன்று இந்த வன்னியர்கள் மந்திரிமனையில் மகாமந்திரியைச் சந்திக்கிறார்களாம் தேவி”

“அரசனைச் சந்திக்கலாமா?’

“மகாமந்திரியை எவரும் சந்திக்கலாம்.”

மந்திரிமனைகளைகட்டியிருந்தது. கனகராஜன்கருதியதுபோலஅனைவரும் வந்திருந்தார்கள். பதவியாவன்னியன் உலோகநாததண்டநாயக்கன் கம்பீரமாக இருக்கையில் இருந்தான். அவன் முன் அப்பாமுதலி, காக்கைவன்னியன், திருமலை வன்னிமை கோகர்ண வன்னியன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

“மகாமந்திரியாரே, உங்கள் மீது எனக்குக் கடும் கோபம்..”என்றான் உலோகநாததண்டநாயக்கன் கரகரத்த குரலில்.

"எனது விருந்தினராக வந்திருக்கிறீர்கள் அப்படிக் கூறக்கூடாது. என்னவாயினும் கூறுங்கள்.. கோபத்துக்கு என்ன காரணம்?’ என்றார் பரநிருபசிங்கர்.

“என்னை நம்ப வைத்து ஏமாற்றி விட்டீர்கள்.”

"எதைக் கூறுகிறீர் வன்னியரே?"

"தெரியாதது போலக் கேட்கவேண்டாம். உங்கள் தங்கை பரவையை."

அவசரமாகப் பரநிருபசிங்கர் குறுக்கிட்டார்: "என் தங்கையல்லள் சங்கிலியின் தங்கை."

பரநிருபசிங்கரின் குறுகீடும் விழுந்த வார்த்தைகளின் கடுமையும் சகோதரர்களின் ஒற்றுமையைப் பறைசாற்றின. அங்கிருந்தவர்ளுக்கு நிலமை மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும்.

"எமாற்றியது நானல்லன். மன்னன். தனது நண்பனுக்குப் பரவையைக் கன்னிகாதானம் செய்துவிட்டான் தன் விருப்பப்படி. நானொன்றும் செய்ய முடியவில்லை, தண்டநகாயக்கரே. என் தங்கையாயின் என் விருப்பப்படி நட்திருக்கும் என் தமைக்கையார்கும் கோகர்ணவன்னிமைக்கும் திருமணம் நடக்கவில்லையா? "

"அந்த விடயத்தில் உனக்கும் ஒரு மனஸ்தாபம் உண்டு. மணிமுடிக்கு பரநிருரே உரித்துடையவர்..அவர் மறுத்தால் அவர் மகனைச் சாரும். இல்லாவிடில் பரசிரபசிங்கரின் தமைக்கையார் மகனைச் சாரும். யாழ்ப்பாண முடிக்கு உன் மகனும் உரித்துடையவன்."என்றான் கோகர்ணவன்னியன். அதுவரை பேசாதிருந்த அப்பாமுதலி பேசினார்.

"முடிக்கு உரிமை கோருவதாக நானுமறிந்தேன் அது தவறு. ஆண் வழிதான் எங்கள் வழக்கம்..."

"வழக்கப்படியா இங்கெல்லாம் நடந்தது? உரிமையுடையவனிருக்க பலரைத் தாண்டி முடியைக கொடுக்கவில்லையா? நீங்கள் என்னசொன்னாலும் சொல்லுங்கள் கவலையில்லை. திருமலை வன்னிமை அடங்காபற்றில் ஆதிக்கம் உடையவர். என் மகனை அடங்காபற்றின் மன்னனான விரைவில் முடிசூட்டுவேன்."

"பிரச்சனைகளை வலிய இழுக்காதீர்கள் வன்னியரே.. போகட்டும். ஏமாற்றம் பற்றி தண்டநாயக்கர் பேசினார். இது என்ன பெரிய ஏமாற்றம்? பரவைக்கு கொடுத்து வைக்கவில்லை. தன் விருப்பப்படி தன் முடியை சங்கிலிக்கு வழங்கினாலும் அதன் பின்னர் அவர் அடைந்த ஏமாற்றம் கொஞ்சமா? ஈமக்கிரியைகள் செய்து கொள்ளியிட வேண்டிய மகன் அன்றிலிருந்து அவருடன் பேசுவதில்லை. இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கெடுப்பதாகச்

சத்தியம் செய்து தாலி ஏற்ற மனைவி இன்று அவருடன் பேசுவதில்லை. இந்த ஏமாற்றத்தை விடவா உங்களுடைய ஏமாற்றம் பெரிது?" என்றார் அப்பாமுதலி.

"போகட்டும் வந்த விடயத்தைப் பேசுவோம். பரநிருபரை சிம்மாசனத்தில் இருத்த வழி போர்த்துக்கேயரின் உதவியைப் பெறுவது தான் யாழ்ப்பாண மன்னன் படைப்பலம் மிக்கவன். அவனது கடற் படையில் நூற்றிற்கு மேற் பட்ட பாரிய மரக்கலங்கள் உள்ளன. தஞ்சாவூர் படையுடன் குருகுலத்தான் தென்னிந்தியாவில் காத்திருக்கிறான். இந்நிலையில் போர்த்துக்கேயரின் உதவி நமக்குத் தேவை. தென்னிலங்கை சிங்கள மன்னன் பராக்கிரமபாகு தனது இராச்சியத்தை கோட்டை சீதவர்கை. றைகமம் என மூன்றாகப் பிரித்து புவனேகபாகு. மாயாதுன்னை. றைகம்பண்டார ஆகிய புதல்வர்கள் மூவருக்கும் வழங்கிவிட்டான் கோட்டையின் மன்னனாகப் பதவியேற்ற புவனேகபாகுவிற்குப் போர்த்துக்கேயரின் உதவி தேவைப்பட்டது. புவனேகபாகுவின் மகள் வழி பிறந்த தர்மபாலனை அடுத்த மன்னனாக்க வேண்டும். அதற்குத் தடையாக வரக்கூடிய தர்மபாலனின் தகப்பன் விதியபண்டாரத்தை அடக்க வேண்டும். மற்றையது றைகமத்தை தனதாக்கிக் கொண்ட மாயாதுன்னை கோட்டைமீது படையெடுக்காமல் பாதுகாக்க வேண்டும்.. இந்த இரண்டிற்குமாகப் போர்த்துக்கேயருடன் நடட்பாக இருக்கிறான் அவர்களும் புவனேகபாகு வழங்கிய கறுவாபட்டை ஏகபோக வர்த்தக உரிமைக்காக ஒப்புக் கொண்டனர். இன்று புவனேகபாகுவுக்குப் போர்த்துக்கேயர் ஆதரவுண்டு. போர்த்துக்கேயரின் ஆதரவின்றி நாம் சங்கிலியை சிம்மாசனத்திலிருந்து அகற்ற முடியாது" என்றான் காக்கைவன்னியன்.

எவரும் சிறிது நேரம் பேசவில்லை. சிந்தனையில் ஆழ்ந்த பரநிருபசிங்கர்," அந்நியர் உதவியை நாடுவது சரியா?" என்று ஐயம் எழுப்பினார்.

"அதிலொரு பிழையுமில்லை. அது இராஜதந்திரம் மகாமந்திரியாரே. போர்த்துக்கேயர் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். தங்களது பாதாங்கு நாணயத்தைத் தந்து எங்களது செப்புக்காசுகள் பெற்றுள்ளனர் அவர்களது பர்தாங்கு நாணயம் தங்கக்காசு. எங்களது செப்புக் காசு . 150 செப்புக்காசுகள் ஒரு பர்தாங்கு.."

"அதைக்கொடுத்து தான் கரையோரத்தில் மாடுகளை வாங்கினார்கள் ஆக்கும்."

“போர்த்துக்கேய கப்பித்தான் சௌசா என்னுடன் தொடர்பு கொண்டான். போர்த்துக்கேய கப்பலொன்று நெடுந்தீவின் கரையில் தரைதட்டியுள்ளது. மாலுமிகளையும் அக்கப்பலிலிருந்த பொருட்களையும் விடுவிக்க வேண்டுமாம். சௌசா தூது அனுப்பியுள்ளான். போர்த்துக்கேயருடன் நட்பை ஏற்படுத்த இது நல்ல சந்தர்ப்பம்.” என்ற காக்கைவன்னியனைப் பரநிருபசிங்கர் நிமிர்ந்து ஏறிட்டார்.

“இது எப்படிச் சாத்தியமாகும்?”

“நீங்கள்மகாமந்திரிசொன்னால்அரசன்கேட்பான். இதுஅரசியல்பிரச்சினை... கேட்க வேண்டும். மன்னர் கேட்பார்... இன்னொன்றையும் கேட்கவேண்டும். வெல்லை நதி (தொண்டை மானாறு) முகத்தில் நாம் ஒரு களஞ்சியம் அதாவது உப்புமால் கட்டியுள்ளோம். அங்கு வெல்லையிலும் கரணவாயிலும் விளைகின்ற தன்படுவான் உப்பை சேகரித்து இந்திய வியாபாரிகளுக்கு விற்று வருகின்றோம். அந்த வியாபாரத்தைப் போர்த்துக்கேயருக்கு வழங்க அனுமதி மன்னரிடம் கேட்க வேண்டும். நாம் போர்த்துக்கேயருடன் தொடர்பு கொள்ள இது உதவும்.”என்றார் அப்பாமுதலி.

“நல்ல திட்டம் தான். செயலாக வேண்டுமே..”

“மகாமந்திரி மனம் வைத்தால் எல்லாம் சரியாகும்”

உணவு அருந்தும்போது பரநிருபர் வினவினார்:

“வன்னியர் என்றால் சங்கிலிக்குப் பிடிப்பதில்லை..”

“ஏன்?”

“பட்டத்து இளவரசர்களைக் கொன்றது வன்னியர் தான் என நம்புவதால்..’

“பட்டத்து இளவரசுகளைக் கொல்வதால் எங்களுக்கு என்ன இலாபம்” பதவியா வன்னியனின் வினா எழுந்தது:” யாருக்கு இலாபமோ அவர்கள் தான் செய்திருப்பார்கள் வீணாக வன்னியர் எனப் பழிபோட வேண்டாம். மகாமந்திரியாரே, நீங்கள் தப்பிவிட்டீர்கள். சங்கிலி அரசனானதால்...”

“நீங்கள் சொல்வதைப்பார்த்தால் கொலையாளி...”

“அப்படியே எண்ணிக் கொள்ளுங்கள்.”

”அடுத்து மன்னரைக் காண வேண்டும் சாட்டுக்காக...”

## அத்தியாயம் 9



# வன்னி திக்விஜயம்

கனகராஜன் அரண்மனைக்கு வந்து சங்கிலியைச் சந்தித்தான். அலுவல்கள் இல்லாமல் கனகராஜன் வரமாட்டான்.

"அரசே, நான் கேள்விப் படுவதெல்லாம் உண்மைதானா?'

"எதைக் கேட்கிறாய்?"

"நெடுந்தீவில் கரை ஒதுங்கிய போர்த்துக்கேயரின் கப்பலை உடனடியாக விடுவித்தமையை.. அது எங்கள் வழக்கப்படி எமக்கல்லவா சொந்தம்."

மைத்துனனை மன்னன் ஏறிட்டான். சிறிது சிந்திப்பதுபோலக் காணப்பட்டான்.

"உன் வினாவில் அர்த்தமுள்ளது கனகராஜா. ஆனால் ஒரு நாட்டின் மகாமந்திரி கேட்கும் போது அந்த ஆலோசனையை எப்படி மறுப்பது?"

"ஆலோசனையா?"

'ஆமாம், போர்த்துக்கேயருடன் பகைமை பாராட்டாமல் இருக்க வேண்டுமாம். அண்ணர் விரும்புகிறார்...இது உன் திருமணம் போல குடும்பம் சார்ந்த விடயமல்ல.. அரசியல் சார்ந்தது என்கிறார். மகாமந்திரி சொல்வதை மறுக்க முடியுமா?"

"இதை ஏற்றுக்கொள்வோம்...உப்புப்புலத்தில் உப்பேற்ற அனுமதி கொடுத்தீர்களாமே?"

"அதிலென்ன தவறு? நாட்டின் வர்த்தகம் பெருகும் தானே,?"என்றான் மன்னன் சிரித்தபடி.: "கனகராஜா, உன்னைக் காண எண்ணினேன் வந்து விட்டாய். அடங்காபற்றின் மீது திக்விஜயம் ஒன்று மேற்கொள்ளலாம் என நினைக்கிறேன். அவசியம் போலப்படுகிறது...."

கனகராஜன் வியப்போடு சங்கிலியைப் பார்த்தான். அப்பார்வையில் ஆயிரம் கேள்விகள் தொக்குநின்றன.

"என்ன கனகராஜா, திகைத்துப் போனாய்? அப்படி நான் என்ன கேட்டுவிட்டேன்'?"

"திக்விஜயம் பற்றி நானும் சொல்ல நினைத்தேன். வன்னியர்களின் மனநிலையை திக்விஜயம் எடுத்தியம்பும். எங்களுக்கும் ஒரு மாற்றமாக இருக்கும். நான் நினைக்கிறேன் பதவியா, திருகோணமலை தவிர்ந்த வன்னிகளில் அவ்வளவு பிரச்சினைகளிருக்காது. ஓமந்தையர்கோன் முதலியார் தனது கிராமமான ஓமந்தை தனியொரு வன்னிமையாக வேண்டும் என்கிறாராம்...அவ்வளவு தான்.....பொதுவாக அனைத்து வன்னிமைகளும் நமது இராசதானியின் மேலாதிக்கத்தை ஏற்றிருக்கிறார்கள்."

"தேர்ந்தெடுத்த வீரர்களுடன் புறப்படுவோம் சேனாதிபதி சண்பகமாப்பாணருக்குச் செய்தி அனுப்பு.....நாங்கள் திக்விஜயம் வருவதாக முன்கூட்டியே வன்னிநாட்டுக்கு அறிவித்துவிடுக. மக்கள் விரும்பில் மன்னரைக் காண நாள் குறித்து அறிவிக்குமாறு வன்னியர்களைப் பணித்து விடு."

சங்கிலி மன்னனதும் வீரர்களினதும் வன்னி திக்விஜயம் ஆரம்பமானது. நல்லூர் அரண்மனையிலிருந்து ஆரம்பமான திக்விஜயம் முத்திரைச் சந்தியைக் கடந்து பச்சிலைப்பள்ளி சுங்கக் கடவையை வந்தடைந்தது. பளையின் பிரதம அதிகாரி நீலகண்டன் அவர்களை வரவேற்றான்.

யாழ்ப்பாண இராசதானியில் மாதோட்டம், அரிப்பு. மன்னார், கச்சாய், கொழும்புத்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை என்பன முக்கிய துறைமுகங்களாக இருந்தன. அதேபோல முத்திரைச்சந்தி, பச்சிலைப்பள்ளி (ஆனையிறவு), பூநகரி, மன்னார் என்பனவற்றில் சுங்கக் கடவைகள் இருந்தன. இவை சுங்கவரிகளை வசூலித்து வந்தன. கடவைகளில் ஊடு போக்குவரி பெறப்பட்டது. பொருட்கள், தானியம் என்பனவற்றை இக்கடவைகளைக் கடந்து எடுத்துச் செல்லும்போது வரிகொடுக்க வேண்டும். இதனை ஊடுபோக்குவரி என்பர். இதனால் கிடைக்கும் வருமானம் லாஞ்சினைப்பேறு எனப்படும். கடவைகளினூடாக எடுத்துச்செல்லும் சேலை ஒவ்வொன்றும் முத்திரை குற்றப்படவேண்டும். எட்டுச் சேலைகள், நான்கு கச்சைகள், இருபத்தைந்து சால்வைகள் என்பனவற்றிற்கு ஒருவர் ஊடுவரியாக ஒரு பணம் செலுத்த வேண்டும். தானியமாயின் மூடைக்கு ஒரு கைப்பிடி வரியாக வழங்கவேண்டும். வணிகர்கள் ஒரு கச்சை உடைக்கு அரைப்பணத்தையும் ஒரு எருது சுமக்கும் பொதிக்குகால் பணமும் செலுத்தநேரிட்டது. வீடுகளில் பொருட்களை எவரும் விற்கமுடியாது.

“ஊடுபோக்குவரி ஒழுங்காக வசூலிக்கப்படடு வருகின்றது. பெறப்படும் லாஞ்சினைப்பேறு அரசிறையில் ஒழுங்காகக் கட்டப்படுகிறது. லாஞ்சினைப்பேறு குறித்து மன்னர் சமூகத்திற்கு ஒரு விண்ணப்பம்...” என்ற நீலகண்டனை சங்கிலி நிமிர்ந்து பார்த்தான்.

“என்ன?”

“லாஞ்சினை வருவாயில் இரண்டு சதவீதம் தருகீறீர்கள். நிர்வாகச் செலவிற்கு அது போதுமானதல்....பணயாளரின் ஊதிபம் அதிகரிக்க வேண்டியுள்ளது”

நீலகண்டனின் கோரிக்கை நியாயமாகப்பட்டது.

“ஒரு வீதம் அதிகரித்து விடுகிறேன்...”

சங்கிலி மன்னனின் வன்னி திக்விஜயம் வெற்றிகரமாக அமைந்தது. அத்திக்விஜயத்தில் வன்னியர்கள் எதுவிதமான எதிர்ப்பும் காட்டவில்லை. மன்னனையும் பரிவாரங்களையும் மனநிறைவோடு வரவேற்று உபசரித்தனர். பனங்காமத்தில் ஒரு பிரச்சினையை எதிர் கொள்ள நேர்ந்தது.

“பனங்காமத்தின் ஆட்சியில் பெரிதான பிரச்சினைகளில்லை. முதலியார்களும் அவர்களின் கீழ் பண்டாரப்பிள்ளை. கங்காணி. உடையார்,

தலையாரி என்போர் நிலவரி, தானியவரி, தலைவரி, இனவரி என்பனவற்றைக் கிரமமாக வசூலிக்கின்றனர். ஒரு முதலியார் மட்டும் பிரச்சினை தருகிறார்."

"இந்தப் பனங்காமத்தை தாபித்தவர் உத்துங்கராஜ வன்னிமை..அவர் வழியில் வந்தவர் நீங்கள். உங்களால் ஒரு முதலியாரைக் கட்டுப்படுத்த முடியவில்லையா ? யார் அந்த முதலியார்? ஓமத்தையர்கோனா?:"

"அறிந்திருக்கிறீர்களே? அவர் வயதில் என் தந்தையைப் போன்றவர். அதனால்..."

அதேவேளை தவில் மேளச் சத்தம் எழுந்தது.

"ஓமத்தையர் கோனுக்கு ஆயுள் நூறு. இப்போது தான் பேசினோம். தங்களைக் காண வருகிறார் வரும் போது தமக்குரிய பதவிச் சின்னங்களான வில்லுக்குஞ்சம், பாவாடை, கொடி, தாரை, தம்பட்டை, முரசு, தவில், நாதஸ்வரம் என்பனவற்றுடன் ஆடம்பரமாக வருகிறார். எங்கு விஜயம் செய்யும் போதும் பதவிச்சின்னங்களை அணியாது விடார்." என்ற பனங்காம வன்னியனை ஆழமாக நோக்கிய மன்னன், "அதில் தவறில்லை பொதுமக்களிடமிருந்து தன்னை அதிகாரிகள்' வேறு படுத்தத்தான் வேண்டும். அவருடைய பிரச்சினை என்ன?"என்று கேட்டான்.

"தன்னுடைய கிராமத்தை தனியாக்கி தன்னை அதற்கு வன்னிமையாக்க வேண்டுமாம்."

"உங்களுடைய ஆள்பரப்புப் பெரிது தானே? இரண்டாகப் பிரித்தால் என்ன?"

"மன்னர் விருப்பம்."

பிரச்சினை இவ்வளவு இலகுவாகத்தீரும் என கனகராஜன் நினைக்க வில்லை. பனங்காம வன்னிமை இவ்வளவு இலகுவில் தனது பிரதேசத்தை விட்டுக் கொடுப்பானென அவன் எண்ணவில்லை.

அந்த மண்டபத்திற்கு ஓமத்தையர்கோன் வந்தார்.

"வருக வன்னியரே .."என்ற சங்கிலியின் அழைப்பைக் கேட்டு ஏமத்தையர்கோன் திகைத்துப் போனார்.

"என்னை நீங்கள் ஒன்றும் கேலி செய்யவில்லையல்லவா?""

“இல்லை. ஆனால் ஒரு திருத்தம். நீங்கள் இன்றிலிருந்து வன்னிமையாக்கப் படுவீர்கள். பழுகாம வன்னிமை மாவன்னி ஆக்கப்படுவார். நீங்கள் அவருக்குட்பட்டே வன்னிமைத் தொழில் ஆற்ற வேண்டும். காலகதியில் உங்கள் பிரிவு தனி வன்னிமையாக்கப்படும்.” கனகராஜனுக்கு மன்னனின் திட்டம் புரிந்தது. ஓமத்தையர்கோன் ஒப்புக்கொள்வதைத் தவிர வேறொன்றும் பேசவில்லை. பேச முடியவில்லை.

பலவற்றையும் பேசிக்கொண்டார்கள். இராச்சியத்தின் பல அம்சங்களும் அலசப்பட்டன.. இரவு படரத்தொடங்கி இருந்தது. விடைபெறும் கட்டத்தில் பழுகாமம் வன்னிமை விண்ணப்பித்தான்:

“மன்னா, உங்களுடன் தனிமையில் சில பேசவேண்டும். அந்தரங்கமானது. அவசியமானது..”

சங்கிலி ஒத்துக்கொண்டான். பழுகாமம் வன்னியன் பேசினான்:

“தாங்கள் வன்னி திக்விஜயம் மேற்கொண்டு ஒரு திங்களாகின்றது. நாட்டின் நிர்வாகத்தை மகாமந்திரி கவனிக்கிறார் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். இதைச் சொல்வதற்கு மன்னியுங்கள். யாரையும் நம்புவதற்கில்லை.. போர்த்துக்கேயருக்கு உப்புமாலில் கொள்வனவு வியாபாரம் செய்ய நீங்கள் அனுமதித்தீர்கள். அவர்கள்’ நாட்டிற்குள் இறங்கி வியாபாரம் செய்ய உங்கள் தமையனார் மகாமந்தரி உங்கள் சமூகமின்மையைச் சாதகமாக்கி அனுமதி வழங்கியுள்ளாராம். ஒரு களஞ்சியசாலை கட்ட அனுமதி கேட்கினமாம். அதுக்கும் நீங்கள் இல்லாத வேளையில் அனுமதி கிடைக்கலாம். ஆதலால் அரசே, வன்னி திக்விஜயம் போதும் நிறுத்திக் கொள்ளுங்கள் இராசதானிக்கு உடன் திரும்புங்கள்...”

நாட்டிற்கு உடன் திரும்பும் செய்தி கேட்டு கனகராஜன் திகைக்கவில்லை.

## அத்தியாயம் 10



# காசி நயினார்

அதிகாலை வெயில் சுள்ளென உடலில் பட்டது. புரவிகள் தட்டுவான் கொட்டியைக் கடந்து கடவை முகாமை நெருங்கின. முன்னால் வந்த புரவிகளில் சங்கிலியும் கனகராஜனும் அமர்ந்து பயணம் செய்தார்கள். அவர்களிடையே உரையாடல் இதுவரை நிகழுவேயில்லை. சங்கிலி சிந்தனை வயப்பட்டிருந்தான். அவன் சிந்தனைக்குரிய காரணத்தை அறியாவிடிலும் குழப்ப கனகராஜன் விரும்பவில்லை. விரைவாக தலைநகரை அடையும் ஆவல் மன்னனிடம் காணப்பட்டதை அவன் புரிந்து கொண்டான் அதனால் ஓரிடமும் தரிக்காது புரவிகளை வேகமாக நடக்கவிட்டனர்.

"என்ன மௌனம் கனகராஜா?"

"நீங்கள் யோசனையோடு வந்தீர்கள். குழப்ப நான் விரும்பவில்லை."

"முதலமைச்சர் தன் எண்ணப்படி நடக்கலாமா?"

"அதிகாரம் அவரிடமிருந்தால் எப்படியும் நடக்கலாம். இப்போது என்ன நடந்தது? அரசே?"

"எதுவுமில்லை.."

பனையைப் புரவிகள் கடந்தன. கனகராஜன் உரிமையுடன் கேட்டான்:

"மன்னா, கோபிக்காமல் என் கேள்விக்குப் பதில் கூறுங்கள். எமது அரசன் வழக்கப்படி மூத்த மைந்தனே அரசனாக வேண்டும். சிங்கபாகு, வீரபண்டாரம் இருவரும் பட்டத்து இளவரசர்கள் இளவயதில் கொலையுண்டார்கள். அடுத்து பரநிருபசிங்கர் முடி தரித்திருக்க வேண்டும். அவர் மறுத்தால் அவரின் மகன் பரராசசிங்கன் மகுடம் தரித்திருக்க வேண்டும்."

"அவரும் மறுத்திருந்தால் என் அண்ணர் பெரியபிள்ளை சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும். அவ்வாறிருக்க மூன்று பேரைத் தாண்டி எனக்கு முடி கிடைத்த மர்மம் என்ன? எல்லாம் தெரிந்த நீயுமா அதனைக் கேக்கிறாய்.?" என்ற சங்கிலியை ஏறிட்ட கனகராஜன் அவசரமாகக் குறுக்கிட்டான்.

"மன்னிக்க வேண்டும். புதியதொரு பிரச்சினை அரச உரிமைகுறித்து உருவாகியுள்ளது..."

"கோகர்ணவன்னியன் தனது எட்டு வயது மைந்தனுக்கு யாழ்ப்பாண அரசு உரிமையானது என்பதையா? வன்னிக்கு உரிமை கொண்டாடலாம். தவறில்லை. யாழ்ப்பாண முடிக்கல்ல விசரன். அக்கையின் புருஷ னாகிவிட்டான்."

"அதில்லை...இது வேறு..."

சங்கிலி மன்னனின்முகத்தில் வியப்புக் குறிதோன்றியது.அவனறியாத புதியதொரு சங்கதியைக் கனகராஜன் கூறுகிறான். ஆவலை அடக்க முடியவில்லை. கனகராஜனை ஏறிட்டான்.

அப்புதிய சங்கதியைக் கனகராஜன் சொன்னான். சங்கிலியால் நம்பவே முடியவில்லை.

விடைபெறும் போது பதவியா வன்னிமை உலோகநாத தண்டநாயக்கன் அகக்குண்டை தூக்கிப் போட்டான். தன்னுடன் மறைந்துவிடும் எனக்கருதிய இரகசியம் பதவியா வன்னிமை வரை பரகசியமாகி விட்டது.

"மகாமந்திரி அவர்களே இதைக் கேட்பதற்கு மன்னியுங்கள். கண்டி மன்னன் விக்கிரமபாகுவின் மனைவியின் பிணி தீர்க்க நீங்கள் சென்றபோது உங்கள்

மகன் பரராசசிங்கனைக் கூட்டிப் போகவில்லை. அது நிச்சயம். அவ்வாறிருக்க அசப்பில் பரராசசிங்கனை ஒத்த ஒருவனைக் கண்டி அரண்மனையில் காண்பது சாத்தியமா? நான் பரராசசிங்கனை ஒத்த ஒருவனைக் கண்டேன்."

சங்கிலிக்கு மணிமகுடத்தை விட்டுக்கொடுத்ததில் இருந்து பரநிருபசிங்கர் அமைதியை இழந்தவரானார். மகனும் மனைவியும் பேசாது விட்டமை மாத்திரமல்ல. கண்டியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து தனது நிம்மதியை இழந்தவரானார்.

கண்டி அரசன் விக்கிரமபாகு அவரை இன்முகம் காட்டி இருகரம் நீட்டி வரவேற்றான். மனைவிக்கு வந்த வியாதியை மாற்றக்கூடிய வைத்தியன் அவன்தான் என நம்பினான். மனைவியின் அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றபோது அவளருகில் ராணியின் சேடிப் பெண்ணாக நந்தாதேவியை அவன் எதிர்பார்க்கவில்லை. இருபத்தைந்து வருடங்கள் கழிந்துவிட்டன. அப்போது கட்டிளங்குமரியாக காந்தப்பார்வையோடு அவள் யாழ்ப்பாண ராணியின் சேடிப்பெண்ணாக இருந்தாள். தாயைக் காண அங்கு வரும் பரநிருபசிங்கர் நந்தாதோவியைக் கண்ட பின்னர் அடிக்கடி வரத்தொடங்கினார்.

அந்த வயதில் அவளை மறக்க பரநிருபசிங்கரால் முடியவில்லை. நந்தாதேவி எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். அவர் கேட்கின்ற நிலையில் இல்லை.

"நீங்கள் அரசகுமாரர் நாளைக்கு அரசனாவீர்கள். நான் கேவலம் ராணியின் சேடிப்பெண்..சரி வராது. மலையும் மடுவும் ஒன்றாக முடியுமா? வேண்டாம் இளவரசே."

தீபஞ்சோடு பற்றிக்கொண்டது. உண்மை தெரிந்து கொண்ட வள்ளியம்மை திகைத்துப் போனாள். அடுத்த கணமே நந்தாதேவியை தந்தையுடன் அனுப்பிவிட்டாள். ஆவலோடு அவளைக் காண வந்த அவர் அவளைக் காணாதது தவித்தார். யாரிடம் கேட்பது? அப்போது நந்தாதேவி பரநிருபரின் மகவைச் சுமக்கத் தொடங்கியிருந்தாள். இருபத்தைந்து வருடங்களின் பின்னர் தான் முதன்முறையாக அவளை இங்கு சந்தித்தார்.

"திடீரென தகப்பனார் ஊருக்கு அழைத்து வந்தார் உங்களிடம் சொல்லிக் கொள்ளவும் முடியவில்லை. இங்கு வந்த பிறகு தான் நான் கர்ப்பமாகிருப்பது தெரிந்தது. காலம் கடந்துவிட்டது. துயரத்தோடு தந்தை காலமானார். நான் தனியனானேன். குழந்தை அனாதையாக வளர்ந்தது. அரச சேவகத்தில்

சேர்ந்தான். தனது தகப்பன் யார் எனக்கேட்பான். நான் இதுவரை யாரெனக் கூறவில்லை. உங்களை உயிருடன் கண்டுவிட்டேன். இனிக் கூறத்தடையில்லை. அவன் உங்கள் மகன் மூத்தமகன். ஒரு நாட்டின இளவரசன் ஒரு வகையில் உங்களின் பின் அரசனாக வேண்டியவன். போகும்போது எங்களையும் கூட்டிப் போங்கள்." நந்தாதேவி அவனிடம் யாசித்தாள்

பரநிருபசிங்கன் கோழையைப்போல அவர்களுக்குத் தெரியாமல் ஓடிவந்தமையை எண்ணிக்கொண்டார். கலியாணமாவதற்கு முன்னரேயே தான் ஒரு மகனுக்கு தந்தையான செய்தியை அறிவிக்க அவர் விரும்பவில்லை. பரராசசிங்கனுக்கு மூத்தவன் ஒருவனை அறிமுகப் படுத்த அவர் விரும்பவில்லை. வைப்பாட்டி ஒருத்தி இருப்பதை அவர் காட்டிக் கொள்வதா? மாதவிதேவி நிச்சயமாகத் தாய் விட்டிற்கு ஓடிவிடுவாள். அவனால் மக்கள் முன் தலைகாட்ட முடியுமா?

புரவிகள் தளர் நடை பயின்றன.

"இவ்வளவு நடந்திருக்கிறதா? நான் அண்ணரை அப்பாவி என நினைத்தேன்."

கனகராஜன் சிரித்தான்.

"இந்த விடயத்தில் அப்படி எண்ணக் கூடாது. இளமை உணர்வுகள் எல்லாவற்றையும் மறக்கடித்துவிடும். காமத்திற்கு முன் எல்லாம் அடிபட்டுப் போகும். அவன் பரநிருபரின் மகன் பெயர் என்ன தெரியுமா?"

கனகராஜன் பேச்சை நிறுத்தினான்.

"சொல் கனகராஜா..."

"காசி நயினார்.. காசி நயினார்..யாழ்ப்பாண முடிக்குப் புதியதொரு வாரிசு தோன்றியுள்ளது...அரசே. தனக்குத் தான் இந்த இராச்சியம் உரித்து என இப்பொழுது சொல்கிறானாம் இந்தக் காசிநயினார். அதில் ஆகச் சோகம்.."

"என்ன?"

'கோட்டைக்குப்போய் போர்த்துக்கேயரிடம் சரணடைந்துள்ளானாம். யாழ்ப்பாண இராசதானியின் முடியை தனக்குப் பெற்றுத்தர வேண்டும் எனக்

கோரிக்கை விடுத்துள்ளானாம். பெற்றுத்தந்தால் அவர்களைக் கோட்டை கட்டவும் மக்களை மதம் மாற்றவும் அனுமதிப்பதோடு தான் மதம் மாறவும் தயாராம்.”

“என் இராச்சியத்தில் எவர் மதம் மாறினாலும் என் வாளுக்கு இரையாக்குவேன்”என்று சூளுரைத்தான் சங்கிலி மன்னன்.::...’தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முதற்படியாக அமைவது மதமாற்றம். மதம் மாற்றம் நிகழ்ந்தால் அந்நியரின் ஆதிக்கம் வலிய நிகழ்ந்துவிடும். மதம் மாறியவர்கள் போர்த்துக்கேயரின் ஊடுருவலிற்குத் துணைநிற்பார்கள். மதமாற்றத்தை அனுமதிக்கக் கூடாது. என் வாளுக்கு காசி நயினார் முதலில் இரையாகப் போகின்றான்.”

அரண்மனை நெருங்கியது.

சேனையுடன் வன்னிக்குத் திக்விஜயம் மேற்கொண்ட சங்கிலி இவ்வளவு விரைவில் திரும்பி வருவானென எவரும் எதிர்பார்க்கவில்லை. முக்கியமாக அப்பாமுதலியும் பரராசசிங்கனும் திகைத்துப் போனார்கள்.

“இப்படி நடந்து விட்டதே?’என்றான் ஏமாற்றத்துடன் பரராசசிங்கன்

“நீ எதைச்சொல்கிறாய்?”

“சங்கிலி வரவைத்தான்.”

“அதனால் என்ன? நாம் திட்டமிட்டபடி வருகின்ற போர்த்துக்கேய கப்பித்தானை பருத்தித்துறை பிலத்துவார மண்டபத்தில் சந்திப்போம். வரச்சொல்லி விட்டோம்...காக்கைவன்னியன் அழைத்து வருவான். நல்ல சந்தர்ப்பம். பின்வாங்கக் கூடாது. பயப்படத்தேவையில்லை...”

## அத்தியாயம் 11



# உப்புமால் மண்டபம்

**மா**லை மறைந்து இரவு படர்ந்தது. நல்ல முழுநிலாக் காலமானபடியால் வீதியில் ஒளி பரவிக்கிடந்தது வீதியின் இருமங்கிலுமிருந்த மரங்களின் நிழல் வீதியை ஓரளவு இருளவைத்தாலும் முற்றாக இருள் கதிர்களைப் பரவவிட முடியவில்லை.

வெகுவேகமாக முன்னே செல்லும் குதிரையைத்தொடர்ந்து செல்வது கனகராஜனுக்கு சிறிது சிரமமாகயிருந்த போதிலும் மனந்தளராது தன் கண்களிலிருந்து முன்னே செல்லும் புரவி மறைந்து விடாது தன் அசுவத்தைச் செலுத்தினான். வீதியின் படிந்திருந்த மரங்களின் நிழலின் கீழ் முன்னே செல்லும் புரலி மறைவதையும். நிழலற்ற பகுதியில் அதன் வெண்ணிறம் பிரகாசிப்பதையும் பார்த்தபடி தனது குதிரையைச் செலுத்திய கனகராஜன் முன்னே சென்ற குதிரை கிழக்கே திரும்பியதை அவதானித்தான்.

கனகராஜனின் குதிரை நாள் முழுதும் ஓடியதால் வேகமாக ஓடச்சிரமப்பட்டது. வாயில் நுரைதள்ளதொடங்கிய போதிலும் எசமானின் மனநிலையைப் புரிந்து வேகமாக ஓட முயன்றது.

கடற்கரையை அடுத்த வீதியாக இருந்தபடியால் தென்னை, பனை மரங்களின் உரஞ்சல் சத்தத்தோடு நிலவைக் கண்டு ஆரவாரிக்கின்ற கடல் அலைச்சத்தமும் எழுந்து முன்பின்னாகச் செல்லு ம் புரவிகளின் குழம்படிச் சத்தத்தை தணித்தன. நிலவின் துணையினாலும் ஓரளவு கண் மதிப்பினாலும் ம்ுன்னால் செல்பவன் பரராசசிங்கன் தான் என்பதைக் கனகராஜன் கணித்தான்.

பரராசசிங்கனின் குதிரை தொண்டமானாற்றுக் (வெல்லை நதி) கழிமுகத்தை அடைந்த உப்புமால் மண்டபத்தின் முன் சென்று நின்றது. கடற்கரையில் உப்பு ஏற்ற வந்த போர்த்துக்கேயரின் பாரிய மரக்கலம் ஒன்று நங்கூரமிட்டு நின்றதை கனகராஜன் அவதானிக்காமல் இல்லை.மன்னன் தவறு செய்துவிட்டான் போர்த்துக்கேயருக்கு உப் புமாலில் உப்பு கொள்வனவு உரிமையை வழங்கியதன் மூலம் அவர்கள் சந்தேகமின்றி நடமாட உதவியுள்ளான். மண்டபத்தில் ஏற்கனவே அப்பாமுதலி. காக்கைவன்னியன், இரண்டு போர்த்துக்கேயர் ஆகியோர் வந்து இருந்தனர்

தனது புரவியை மறைவாகக் கட்டிவிட்டு அவர்களை அவதானிக்கும் இடத்தில் கனகராஜன் மறைவாக ஒளிந்து கொண்டான். இச்சதிக் கும்பல் முதலில் பிலத்துவார மண்டபத்தில் கூடுவதாக இருந்தது. பின்னர் உப்புமால் மண்டபத்தில் கூட இருப்பதை கனராஜனுக்கு அவன் அணியைச் சேர்ந்த ஒருவன் வெல்லை வெளியில் மறித்துச் சொல்லிவிட்டான்.

"காக்கைவன்னியர் சொன்னபடி உங்களை இங்கு சந்திக்க வந்துள்ளேன். எனக்குரிய முடியை உங்களால் எனக்குப் பெற்றுத்தரமுடியும் என நம்புகிறேன். அதற்குப் பிரதியாக யாழ்ப்பாணத்தில் மதம் பரப்பவும் வியாபாரம் செய்யவும் உரிமையளிப்பேன்." என்றான் பரராசசிங்கன்..

அந்தச் சதிகாரரின் பேச்சு மகுடத்தை எவ்வாறு கவர்வதென்பதாக இருந்தது. மூவரும் போர்த்துக்கேயருடன் சேர்ந்து திட்டமிட்டனர். போர்த்துக்கேயரில் ஒருவன் கடைசியாகச் சொன்ன செய்தி அவர்களைக் கலக்கத்தில் ஆழ்த்தியது.

"காசி நயினார் என்பவன் பரநிருபசிங்கனின் மூத்த மகன் தான் என உரிமை பாராட்டுகிறான். எங்களிடம் ஏற்கனவே அடைக்கலம் புகுந்துள்ளான்."

"அது பொய்.. நம்ப முடியாது."

கனகராஜன் திடமாகச் சொன்னான்.

"இனியும் பொறுக்கமுடியாது. அரசே. அப்பாமுதலி, காக்கைவன்னியன். பரராசசிங்கன் மூவரையும் உடன் பிடித்துச்சிறையிலிடவேண்டும். இராஜத்துரோகக் குற்றம் சாட்டப்படவேண்டும். அந்நியருடன் சேர்ந்து விட்டார்கள். துரோகிகள்."

சங்கிலி சிந்தனையில் ஆழ்ந்தான். கனகராஜன் பிழை சொல்லமாட்டான்.. அரசைக் கைப்பற்ற சதி செய்கிறார்கள். தெரிந்து கொண்டு வாழாவிருக்க முடியாது. பரராசசிங்கனை சிறை பிடிப்பதா? அண்ணர் யாது சொல்வார்? அப்பாமுதலியைச் சிறை பிடிப்பதா? உதய வல்லி என்ன சொல்வாள்? அரசின் நலனே முக்கியம். மகுடத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழியில்லை. ஆரியச் சக்கிரவர்த்திகள் ஆண்ட இந்த நாட்டை அந்நியர் வசமாக்குவதா?

சண்பகமாதாக்கர் அழைக்கப்பட்டார். கட்டளை பிறப்பிக்கப் பட்டது. தெரிந்தெடுத்த வீரர்களுடன் சேனாதிபதி புறப்படத் தயாரானார். தயக்கம் அவரிடம் காணப்பட்டது. மகாமந்திரியின் மகனைச் சிறைபிடிப்பதா? ஒரு நாட்டின் மந்திரியைச் சிறைபிடிப்பதா?. சேனாபதியின் தயக்கத்தை சங்கிலி புரிந்து கொண்டான்.

"நானும் வருகிறேன்."

மந்திரிமனையில் பரராசசிங்கன் இருக்கவில்லை. காக்கைவன்னியனோடு ஊர்காவற்றுறைக்கு ஓடிவிட்டான். சிறைபிடிக்கப்பட இருப்பதை அறிந்ததும் இருவரும் நிச்சயமாக போர்த்துக்கேய கப்பலொன்றில் ஏறியிருப்பார்கள்

பரராசசிங்கனை சிறைபிடிக்கச் சென்ற போது அந்த மாளிகையே அல்லோலகல்லோலப்பட்டது. பரநிருபசிங்கர் வெறிகொண்வரானார்.

"டேய் சங்கிலி என்ன துணிவடா உனக்கு? என் மகனை இராஜத் துரோகி என்கிறாயே? உன் முடிக்குப் போட்டியாக வந்து விடுவான் என்றதுக்காக அவனை ஒழிக்கத் திட்டம் போட்டுள்ளாயா?"

"அரசிற்கு எவனும் துரோகம் இழைக்க முடியாது. அது யார் என்பது பிரச்சினையேயல்ல. நீங்களாக இருந்தாலும் சரிதான்.." என்றான் மன்னன்.

கீழே ஏதோ கலவரம் நடப்பது போன்ற சத்தம் எழவே மாடியைவிட்டு: கீழே இறங்கி வந்தவள் விக்கித்துப் போய் நின்றுவிட்டாள். கூடம் நிறைய சேனா வீரர்களுடன் சங்கிலி நின்றிருந்தான்.

“துரோகி! மந்திரிபோல வேஷமிட்டு சொந்த நாட்டையே காட்டிக் கொடுத்துவிட்டாயே? உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்த துரோகி நீ.”

“அவரை ஒன்றும் செய்யாதீர்கள்.”

நிமிர்ந்து குரல் வந்த திசையைப் பார்த்தான் பழைய உதயவல்லியா இவள்?சோகத்தின் உருசவாக நிற்கும் இவளா பழைய உதயவல்லி?

‘உதயவல்லி.உனக்காகத்தான் உன்தந்தையை இவ்வளவு காலமும் விட்டிருந்தேன்.”

“அவரை மன்னியுங்கள் இந்த நாட்டிலிருந்து கண்காணாத தேசத்திற்கு ஓடிவிடுகிறோம்.” என விம்மினாள்.

“காலம் கடந்து விட்டது. கடிக்க வந்த நாகத்தை அடிக்காது விடச்சொல்கிறாயா?””

உதயவல்லியின் கண்ணீர் பயனற்றதாகியது.

“இழுத்துச் செல்லுங்கள்”

“அரசே நில்லுங்கள் எனக்கு துணையென மூவரைக் கருதினேன். தாயைச் சிறுவயதில் இழந்தேன். நடு வயதில் நம்பிய உங்களை இழந்தேன். இப்போது தந்தையையும் இழந்தேன். இந்நிலையில் நானேன் வாழ வேண்டும்.” என்ற உதயவல்லி தன் இடையில் செருகியிருந்த குறும் கத்தியை எடுத்து தன் வயிற்றில் செருகிக் கொண்டாள். சங்கிலியோ அப்பாமுதலியோ தடுக்க அலறியும் முடியவில்லை.

காலம் நில்லாது ஓடிக்கொண்டு இருந்தது. பருவங்கள் மாறிமாறி வந்து போயின. கோடையின் வெப்பத்தையும் மாரியின் தண்மையையும் யாழ்ப்பாண இராச்சியம் பல முறைகள் கண்டது. கோயில்கள் பல புதிதாக எழுந்தன. தூ ர்ந்தவை திருத்தப்பட்டன. செல்வத்தின் செழிப்பை இராச்சியத்தின் பகுதிகள் எடுத்துக் காட்டின.

## அத்தியாயம் 12



# போர்த்துக்கேயரின் முதல் படையெடுப்பு

மார்ட்டின் அன்பொன்சோ தே சௌசா தன் படைக் கப்பலில் நின்றிருந்தான். யாழ்ப்பாணத்திற்கு எதிராகப் படைநடாத்தி வந்தாகிவிட்டது. அராபிக்கடலில் இலங்கையின் மேற்குக் கரையை அண்டி நின்ற சங்கிலியின் போர்க் கலங்கள் சில நூறு அவனுக்குக் கலக்கத்தை தந்தன. பண்ணைக் கரையிலிருந்து பாஷையூர் கரைவரை தமிழ் வீரர்கள் பல நாட்களாக அவர்களது வரவை முன்கூட்டியே அறிந்து எதிர் பார்த்திருக்கிறார்களாம். அதைவிட கிளாலியில் வடக்கர் சேனை தயாராக இருகிறது. அத்துடன் தஞ்சாவூரில் குருகுலத்தான் தலைமையில் ஒரு படை புறப்படத் தயாராக இருக்கிறது. இந்நிலையில் தனது படைகளைக் கரையிறக்குவது அறிவுடைமையாகாது.

'எவ்வளவு சுலபமாக தென்னிலங்கையில் கோட்டையில் கால்களைப் பதித்தோம் நமது வியாபாபரத்துக்கான கோட்டையையும் ஜயவர்த்தனபுரத்தில் கட்டிக் கொண்டோம். தனது பகைமைகளை வென்று கோட்டையைக் காப்பாற்றுவதற்காக கோட்டை மன்னன் புவனேகபாகு தம்மிடம்

சரணடைந்து திறை செலுத்துகிறான். அவன் எவ்வளவு தூரம் நம்புகிறான்? தன் மகளின் மகன் தர்மபாலனுக்குக் கோட்டை அரசின் முடி கிடைக்க வேண்டும் என்பதற்காக தர்மபாலன் போல தங்கத்தால் ஒரு பதுமைசெய்து போர்த்துகல்லிற்கு மன்னரிடம் அனுப்பி வைத்துள்ளான். அங்கு முடி சூட்டி மன்னன் திருப்பி அனுப்பி வைப்பான். தர்மபாலனின் தந்தையும் புவனேகபாகுவின் மருமகனுமான விதியபண்டாரன் புவனேகபாகுவிற்குப் பிறகு கோட்டை அரசு தனக்குரியதென்கிறான். அசகாயசூரன் அவன். புவனேகபாகுவின் தம்பி மாயாதுன்னை தமையனின் அரசைக் கைப்பற்றத் திட்டமிடுகிறான். அதற்காக யாழ்ப்பாண அரசனிடமும் படை உதவி பெறவுள்ளான். விதியபண்டாரத்திடமிருந்தும் மாயாதுன்னையிடமிருந்தும் தன் ஆட்சியைக் காப்பாற்ற நமது உதவி தேவை. யாழ்ப்பாண அரசு சுதந்திரமானது. எவர் உதவியும் தேவையில்லை.'

போர்த்துக்கேய கப்பித்தான் சௌசா படைகளை இறக்கி மோதுவதா விடுவதா எனத்தவித்தான். நன்கு திட்டமிடவேண்டும். உதவக்கூடிய பரராசசிங்கன். காக்கைவன்னியன் இருவரும் இராச்சியத்திலில்லை. எம்மிடம் அடைக்கலம் புகுந்து விட்டார்கள். சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிராகவே இருந்தான். போர்த்துக்கேயரின் மரக்கலம் ஒன்று நெடுந்தீவில் பொருட்களுடன் கரையொதுங்கியபோது மகாமந்திரிதான் அதனை மீளப்பெற உதவினார் அதுவும் காக்கைவன்னியன் வகுத்த திட்டத்தால் நிறைவேறியது. தென்னிலங்கை போன்று வியாபாரத்திற்கு யாழ்ப்பாணத்தில் வாசனைப் பொருட்கள் இல்லை எனினும் முத்துக்கள், யானைகள், பனம்பொருட்கள் முக்கியமாக மரங்கள் உள்ளன. மதம் மாற்றுவதற்குப் படித்த மக்கள் உள்ளனர். அவர்களிடம் சாதிப்பிரிவுகளும் வறுமையும் உள்ளன. மன்னனோ கடுரமாகவுள்ளான்.

கைப்பற்றுதலை தெற்கே மன்னாரிலிருந்து தொடங்கியிருக்க வேண்டும். மன்னார் இராச அதிகாரி இளஞ்சிங்கன் போர்த்துக்கேய பொற்காசுகளுக்கும் மதுவுக்கும் பொருட்களுக்கும் மயங்கக்கூடியவன்.

போர்த்துக்கேய படைக்கலங்கள் யாழ்ப்பாணக் கடலேரிக்குள் பரவலாக நுழைந்துள்ளன. பாஷையூர் வரை அவை மிதந்தன. சுண்டிக்குளி வாயில் திறந்திருந்தமையால் அவை வங்காள விரிகுடாவுக்குள் இந்து சமுத்திரத்துள் பிரவேசிக்க முடியும். படைக்கலங்களிலிருந்த போர்வீரர்கள் தரை இறங்காது கலங்களில் சௌசாவின் கட்டளைக்காகக் காத்திருந்தனர். வருணகுலத்தானின்

கலங்கள் வீரர்களுடன் எந்தக்கணத்திலும் சுண்டிக்குளம் வாயிலூடாக கடனீரேரியுள் பிரவேசிக்கலாம். தருணம் ஏற்றதாக சௌசாவுக்குப் படவில்லை. காலதாமதம் செய்தான்.

காலதாமத்திற்குப் பலன் கிடைத்தது. நள்ளிரவு கடந்த வேளையில் சாதாரண வள்ளம் ஒன்று அவனது மரக்கலத்தை நாடி வந்தது.

"வள்ளத்தை வரவிடுக..."

"செய்தி உண்டு..."என்றான் வள்ளத்தில் வந்தவன்.

"விரைவாகச் சொல் என்ன வென்று...."

"முதன்மந்திரி பரநிருபர் தங்களைச் சந்திக்க பண்ணைமடத்தில் தங்கியுள்ளார்."

"முதன்மந்திரியா? உடன் சந்திக்கிறேன்.."

பரநிருபசிங்கன் சௌசாவைக் கேள்விக் குறியோடு ஏறிட்டான்.

"தங்களிடம் அடைக்கலம் புகுந்தமகன் எப்படியுள்ளான்?'

"எந்த மகனை?"

சௌசாவின் வினாவை பரநிருபர் புரிந்து கொண்டார்.

"யாழ்ப்பாண அரசிற்கு உரித்தானவன் பரராசசிங்கன் தான்... என்று நீங்கள் சொல்கிறீர்கள்.... அங்கே குஞ்சு நயினார் என்பவன்தான் உரித்தானவன் என்கிறான்.. போகட்டும் முதன்மந்திரியாரே. இன்றைய மன்னன் சங்கிலியை அரச கட்டிலில் இருந்து நீக்கிய பின் அடுத்த அரசனை உங்கள் எண்ணப்படி நியமிப்போம்..பரராசசிங்கன் கோவைக்கு அனுப்பப்பட்டுள்ளான். மதம் மாற்றப்பட்டு புதிய பெயரோடு வருவான்...கவலைப் படாதீர்கள்."

"அடுத்த முடி யாருக்குரியது என்பது பிரச்சினையல்ல. இன்று முடிக்குரியவன் நான். என்னை மன்னனாக்குங்கள். மற்றையது....இப்போது படை எடுப்பது அறிவீனம் சங்கிலி முன் கூட்டியே சகல ஆயத்தங்களும் செய்துள்ளான். நீங்கள் அவனுக்கு வசதியாகக் காலதாமதம் செய்து விட்டீர்கள். கச்சாயிலிருந்து வடக்கர் படையுடன் கச்சாய் வன்னியன் புறப்பட்டு விட்டான் தஞ்சாவூர் படையுடன்

வருணகுலத்தான் புறப்பட்டு விட்டானாம்.. நாளை சுண்டிக்குளமூடாகப் பிரவேசிப்பான்....பின் வாங்குவதே இப்போது நல்லது. தக்க தருணத்தை நான் அறிவிக்கிறேன்..."

சௌசாவின் படைக்கலங்கள் அமைதியாகப் பின்வாங்கின. தமிழர் படை ஆரவாரித்தது.

வானத்தில் நிலவு பவனி வந்துகொண்டிருந்த இரவுப்பொழுதில் தூரத்தில் நிழலாகத் தெரிந்த நல்லூர் ஆலயத்தின் இராஜகோபுரக் கலசங்களைத் தன் மாளிகை உத்தரத்திலிருந்து கண்கொட்டாது சங்கிலி செகராசசேகரன் பார்த்தான். நிலவு வெளிச்சத்தில் கோபுரக்கலசங்கள் ஏழும் ஒளிர்ந்தன. இன்று மன்னனின் மன நிலை அமைதியாகவில்லை. இரவு உறக்கத்திற்கு மஞ்சத்தை நாட மனதில்லை. பலதும் மனதில் மோதி உறக்கத்தைக் குலைத்தன. யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிதரித்து முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன.

போர்த்துக்கேயரின் முதல் படையெடுப்பு வெற்றிகொள்ளப்பட்டது.

அவன் முடி தரித்து முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன. எவ்வளவோ நடந்துவிட்டன. யாழ்ப்பாண இராசதானியின் மகுடத்திற்குப் போட்டியிடும் பலரை அவனறிவான். இந்நிலையில் தென்னிலங்கை சீதாவாக்கை இராச்சியத்தின் மகுடாதிபதி மாயாதுன்னை தன் தமையன் புவனேகபாகுவினின் ஜயவர்த்தனா கோட்டையை எதிர்க்க தன் படை உதவியைக் கேட்டுள்ளான். கோட்டை மன்னனுக்கு விதியபண்டாரவின் உதவியும் போர்த்துக்கேயரின் உதவியும் உள்ளன.

போர்த்துக்கேயருக்கு யாழ்ப்பாண இராச்சியத்தின் படை வலிமையைக் காட்ட எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எதற்கும் சேனாதிபதி சண்பகமாதாக்கரையும் கனகராஜனையும் கலந்து பேசவேண்டும்.

இருவரும் அழைக்கப்பட்டனர்.

"போர்த்துக்கேயரின் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. மாயாதுன்னைக்கு உதவத்தான் வேண்டும். எதற்கும் தஞ்சாவூர் மன்னனின் உதவியையும் பெறுவோம்..."

"விதியபண்டாரனைக் குறைவாக எண்ணி விட முடியாது..."

"மாயாதுன்னைக்கு படை உதவுவதென முடிவு செய்த பின்னர் யோசனை என்ன? கோட்டை என்ற பெரியதொரு இராச்சியத்தை விஜயபாகு ஆண்டான். அவனுடைய புதல்வர்கள் தாம் புவனேகபாகு, மாயாதுன்னை, மதுமபண்டார எனும் மூவர். தகப்பனைக் கொன்றுவிட்டு. கோட்டை. சீதவாக்கை, றைகமம் என மூன்று இராச்சியமாகப் பங்கிட்டுக் கொண்டனர். தந்தையைக் கொன்று இராச்சியத்தைப் பங்கிடுவதில் மாயாதுன்னை முதன்மையானவன். இவன் சகோதாரர்களின் அரசுகளைக் கைப்பற்றும் அவாக் கொண்டவன். மதுமபண்டார இறக்க றைகமத்தை தனதாக்கிக் கொண்டான். இப்போது புவனேகபாகு மீது படையெடுக்கவுள்ளான். போர்த்துக்கேயரை அவர்களது மதக்கோட்பாட்டால் வெறுத்த பௌத்த பிக்குகளின் ஆதரவோடு இப்படையெடுப்பு நடக்கிறது. மாயாதுன்னைக்கு நாம் உதவத் தான் வேண்டும். போர்த்துக்கேயர் நமக்கும் பகைவர். சேனாதிபதீ, நீர் நமது கடற் படையுடன் பூநகரி கரையோரமாகச் செல்லுங்கள். கனகராஜன் உமக்கு உதவியாக வருவான். ஊர்காவற்றுறையிலும் மன்னாரிலும் இருக்கின்ற போர்க்கலங்களை இணைத்துக் கொள்ளுங்கள். நமது போர்க்கப்பல்கள் கோட்டையை அடையட்டும். தஞ்சாவூருக்கு நான் செய்தி அனுப்புகிறேன்"

திட்டப்படி யாழ்ப்பாண இராச்சியத்தின் போர் கப்பல்கள் சென்றன.

செண்பகமாதாக்கன் பெரும் படையை நடாத்திச் சென்றார். இரண்டாயிரம் கடற்படை வீரர்களுடன் ஐம்பது கலங்கள் விரைந்தன. கனகராஜன் துணையாக ஒரு கலத்தில் போனான். சிங்களக் கலாசாரத்தின் காவலனாகத் தம்மை கருதிய அவர்கள் புவனேகபாகுவின் அனுமதியுடன் கடற்கரையில் பலமான கோட்டை ஒன்றினை அமைத்திருந்தனர். முக்கோண வடிவான அக்கோட்டையின் முன்பக்கில் நிரலாக போர்க்கலங்களை நிறுத்தியிருந்தார்கள். கடற்கரை எங்கும் இடைவிடாது வீரர்களுடன் மரக்கலங்கள் காத்திருந்தன. அம்மரக்கல வரிசையில் ஐந்து கலங்களுக்கு ஒன்றாக பீரங்கி தாங்கிய கலங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றைவிட கோட்டையின் கொத்தளங்களில் பீரங்கிகள் குறிபார்த்துக் காத்திருந்தன. யாழ்ப்பாண போர்க்கலங்களை எதிர்பார்த்து முன்கூட்டியே ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. கரை இறங்க அவர்களுக்கு மார்க்கம் இருக்கவில்லை. இவ்வளவு தூரம் பலப்படுத்தியிருப்பார்களென சண்பகமாதாக்கன் எதிர்பார்க்கவில்லை.

"என்ன செய்வது கனகராஜா"

“ஊடுருவி தரை இறங்க முயற்சிப்போம்.”

யுத்தம் ஆரம்பமானது. கனகராஜன் தனது மரக்கலத்தைக் கொண்டு முதலில் ஊடுருவினான். முயற்சி பயனற்றதானது. போர்த்துக்கேயக் கோட்டையின் மேற்குப் பக்கக் கொத்தளத்திலிருந்து புறப்பட்ட பீரங்கிக் குண்டொன்று கனகராஜனின் போர் மரக்கலத்தின் ஒரு பக்கத்தைத் துளையிட்டது. போர்த்துக்கேய வீரன் ஒருவனின் இடித்துவக்கில் இருந்து விடுபட்ட சன்னம் ஒன்று சரியாக கனகராஜனைத் தேடி வந்து அவனது நெற்றியில திலகமிட்டது.

தோல்வியைப் புரிந்து கொண்ட சண்பகமாதாக்கன் போர்க்கலங்களைத் திரும்பக்கட்டளை இட்டான்.

## அத்தியாயம் 13



# முத்துச் சலாபம்

**த**ன் இஷ்ட நண்பன்  கனகராஜனின் இழப்பை சங்கிலியாலும். தன் கணவன் மரணத்தை பரவையாலும் ஜீரணிக்க முடியவில்லை.

"இதோ பார் பரவை, கனகராஜனின் இழப்பு உனக்கும் நாட்டிற்கும் பெரும் இழப்பு. ஆயுதத்தை எடுத்தவன் அதனோடு மரணதேவனையும் கையிலெடுக்கிறான். மறந்து விட்டாயா? மரணம் எல்வாருக்குமானது.. "

அந்நேரம் அவ்விடம் வந்த வீரன் அரசனைக் காண தென்னிந்தியாவிலிருந்து ஒரு குழு வந்திருப்பதை அறிவித்தான்

"வரச் சொல்.."

வந்தவர்கள் தென்னிந்திய வணிகர்கள்.

"மன்னரே, தங்கள் காலடிக்கனே வணக்கம். நாங்கள் இந்திய வணிகக்குழு. எங்களை வளைஞ்சியர் குழு என்பர்."

யாழ்ப்பாண அரசு நிலை கொண்டிருந்த காலத்தில் தென்னிந்தியாவுடன் வர்த்தக உறவு வைத்திருந்தது. சோழமண்டலக்கரை, மலையாளம் ஆகியன முக்கியமான பகுதிகள். அரிசி முதலான தானியங்களும் புடவைகளும் தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகின. யாழ்ப்பாணத்திலிருந்துெ யானைகள், முத்துக்கள், சங்குகள். பனம் பொருட்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டன. மன்னார் கடலில் பெறப்பட்ட முத்துக்கள் காயல் துறைமுகத்தில் விற்கப்பட்டன.

“தென்னிந்தியாவுடன் யாழ்ப்பாண அரசர்களுக்கு மிக ஆதியிலிருந்து வர்த்தக உறவுள்ளது. உங்கள் வணிகக்குழுவான வளைஞ்சியர் பற்றிக் கேள்வீப்பட்டிருக்கிறேன். காயல் பட்டினத்தில் வளஞ்சியருடம் மணிக்கிராமமும் முக்கிய வணிகக்குழுக்களாமே? இப்போது நீங்கள் என்னை நாடி வந்த காரணம் யாது?” என்று மன்னன் கேட்டான்.

“நீங்கள் வணிகக் குழுக்கள் பற்றி நிறையத் தெரிந்துள்ளீர்கள். இப்பருவத்தில் முத்துக்குளிக்க உள்ளீர்கள். நீங்கள் பெறுகின்ற முத்துக்களை இம்முறை வளைஞ்சியருக்கே விற்க வேண்டும். நீங்கள் குறிக்கும் விலையைத் தருவோம்.”

மன்னன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

“இது வியாபாரம். எங்களது முத்துக்குளிக்கும் முறை தெரியுமா? பிடிக்கின்ற சிப்பிகளில் அரைப்பங்கு மன்னனைச் சாரும். மிகுதி பிடிப்பில் ஈடு பட்டவர்களச் சாரும். அவர்கள் சிப்பிகளாகவே கூறு விலையில் யார் அதிகம் கேட்கிறார்களோ அவர்களுக்கு விற்று விடுவார்கள்…அதை நான் விற்க முடியாது.”

“கூறுவிலையில் விற்பதை கேட்கவில்லை. நீங்கள் சிப்பிகளை உடைத்து முத்தாக்கி தரம்பிரித்து விலை மதித்து விற்கிறீர்கள். அதைக் கேட்கிறோம்’

“அப்படியா…? வழக்கமாக என்னிடமிருந்து முத்துக்களை நல்ல விலைக்கு வாங்குவது நெல்லூர் பட்டடினத்திலிருந்த அவசி திப்பையச் செட்டி ஆவார் அவர் நம்பி வருவார்…அவர் தரும் விலையிலும் கூடுதலாகக நீங்கள் விலை கணித்தால் என் பங்கு முத்துக்கள் உங்களுக்குத் தான்… உங்களுடன் போட்டி அவசி திப்பையச் செட்டி தான்…:

அவர்கள் விடைபெற்றனர்.

அன்று இரவு மன்னார் அதிகாரி இளங்சிங்கன் வந்தான். அவன் வரவை மன்னன் எதிர்பார்த்தான். அதனைக் காட்டிக் கொள்ளவில்லை.

“வாரும் இளஞ்சிங்கம்....”

“இப்போது வைகாசி மாதம் நடக்கிறது. முத்துக்குளிப்பு மாதம். சகல முன் ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன. அதிகாரிகள் தங்குவதற்கான தற்காலிக வீடுகள் இடப்பட்டுள்ளன. கிராமாதிகாரிகள் அவற்றை நிறைவேற்றியுள்ளனர். தேவையான அரிசி வெண்ணெய்... எண்ணேய் முதலிய உணவுப் பொருட்கள் போதியளவு களஞ்சியப் படுத்தப் பட்டுள்ளன. முத்துப்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆயிரத்திற்கு மேல்நாவாய்கள் பதிந்துள்ளன. முத்துக்குளிப்பதற்கு பட்டங்கட்டிகள் தயார். மண்டைக் கயிற்றினைப் பிடிப்பதற்கான இரண்டு பெயரும் தயார். வியாபாரிகள் வரத்தொடங்கி விட்டார்கள். நீங்கள் நாள் தந்து தொடக்கி வைப்பதுதான் தாமதம்.”.

“அப்படியா? பதினாறாம் திகதி நாள் குறியும். வருகிறேன்...வேளக்காரர் படையைச் சேர்ந்த இருபது பேரும் முதலாம் படையணியைச் சேர்ந்த ஐநூறு பேரும் வருவோம் சணபகமாதாக்கரும் வருவார்...”

“:நல்லது அரசே.” என்ற இளஞ்சிங்கன் தயங்குவதாகப்பட்டது.

“உன் தயக்கத்திற்கு யாது காரணம்?”

“பெரியதாக ஒன்று மில்லை, மன்னா. எப்படிச் சொல்வதென்று புரியவில்லை..”

“தயக்கம் வேண்டாம். எதுவாயினும் சொல்....”

“போர்த்துக்கேயர் தங்களிடம் முத்துக்களை வாங்க ஆசைப்படுகின்றனர். அனுமதிக்கலாமா?”

“இம்முறை முடியாது..அடுத்த முறை அரச சபையில் யோசிப்போம்.”

இளம்சிங்கன் ஏமாற்றத்துடன் விடைபெற்றான்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் முத்துக்களுக்கு நிலவுகின்ற உலக புகழை மன்னன் அறிவான். இலங்கைக்கு வந்து பின்னர் தன்னை அனுமதியுடன்

தேடிவந்த ஜோர்டன்ஸ் என்ற பாதிரியார் எண்ணாயிரம் படகுகள் முத்துக் குளியலில் ஈடுபட்டிருப்பதாக்க குறித்துள்ளார். நமது முன்னோன் ஆரியச்சக்கிரவர்த்தி ஒருவரைச் சந்தித்த இபன்பததூத்தா என்ற யாத்திரிகன் ஆரியச் சக்கிரவர்த்தியிடம் பெரிய முத்துக்கள் நிறைய இருந்தன என எழுதியுள்ளாராம். எகிப்து நாட்டு மகாராணி ஒருத்தி யாழ்ப்பாணத்து முத்தை அராபிய வியாபரியிடம் வாங்கி பாலில் கலந்து குடிப்பாளாம்.

முத்து வியாபாரத்துக்கு போர்த்துக்கேயரை அனுமதிக்க முடியாது. அவர்கள் வியாபாரம் புரியமட்டுமா வந்தார்கள்? மக்களை மதம் மாற்றவும் வந்தவர்கள். மதத்தைத் தழுவ வைப்பதன் மூலம் தமது ஆதிக்கத்தையும் ஏற்கவைத்து விடுவார்கள். அதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

முன்னோன் செயவீரசிங்கை ஆரியன் காலத்தில் கம்பளையைத் தலைநகராகக் கொண்டு தென்னிலங்கையை ஆண்ட புவனேகபாகு முத்துச்சலாபத்தைத் தனதாக்க படையெடுத்தான். தோல்வியே கிடைத்தது. யாழ்ப்பாண அரசர்கள் தமது ஏகபோக உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை.

மன்னார்குடாக் கடலில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை முத்துக்குளியலில் ஈடுபடும் நாவாய்கள் மிதந்தன. ஒவ்வொரு நாவாயிலும் ஐந்துபேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் பட்டங்கட்டி எனும் முத்துக்குளிப்பவன். அவன் தன் அரையில் கயிற்றின் ஒரு முனையையும் பாரமான ஒரு கல்லையும் கட்டிக்கொண்டு கையில் ஒரு பறியையும் காவிக் கொண்டு கடலில் குதித்தான். கயிற்றின் மறு முனையை படகிலிருந்த மற்ற இருவரும் பற்றியிருந்தார்கள். பட்டங்கட்டி முத்துச் சிப்பிகளைப் பொறுக்கி முடித்ததும் கயிற்றை அசைப்பான். கயிறு இழுக்கப்படும்.

“கயிற்றைப் பிடித்திருப்பவர்கள் பட்டங்கட்டியின் மைத்துனர்கள். நம்பிக்கை யானவர்கள்..”

பார்த்துக் கொண்டிருந்தான் சங்கிலி. தண்ணீருக்கு மேல் வந்த பட்டங்கட்டி பறியில் சேகரித்த சிப்பிகளைப் படகில் கொட்டிவிட்டு மீண்டும் சிப்பி பொறுக்க கடலில் ஆழ்ந்தான். இடையில் கட்டியிருந்த கல் நீருள் வேகமாக ஆழ்த்தியது.

மாலை வரை சிப்பி பொறுக்கப்பட்டது. அரச கண்காணிகளின் மேற்பார்வையில் முத்துக் குளித்தல் நடைபெற்றது. நாவாய்கள் சிப்பிகளுடன்

கரைசேர்ந்தன. அரசனின் போர் வீரர்களின் உதவியுடன் அச்சிப்பிகள் பிரிக்கப்பட்டன. அரைப்பங்கை அரசனுக்கு ஒதுக்கினர். மிகுதியை நாவாயிலுள்ளவர்கள் பங்கிட்டனர்.

அரசனின் முத்துச் சிப்பிகள் உடன் பிளக்கப்பட்டன. சமையற்காரர் பிளந்த சிப்பிகளின் சதைகளைப் பெற்றுப் போகவந்தார்கள். அன்று சிப்பி கறியுடன் எல்லாருக்கும் சோறு பரிமாறப்பட்டது.

முத்துச் சிப்பி ஒன்றைப் பிரித்த காவலாளி ஒருத்தன் 'ஆ' வென வாயைப்பிளந்தான்.

"கரு முத்து..."

சங்கிலி ஆவலோடும் அதிசயத்தோடும் அந்த கரும் தரளத்தைப் பார்த்தான். முத்துக்களிடையே ஓர் அதிசய பிறப்பு.

"உரிமையாளன் கரு முத்தை வைத்திருக்கக் கூடாது என்கிறது சாஸ்திரம். துயரம் வருவதற்கான முன்னறிவிப்பு...விற்றுவிடுங்கள்.."என்றான் சாத்திரி.

தவசி திப்பையச் செட்டி முந்நூறு பர்தாங் போர்த்துக்கேயப் பொற்காசுகள் கொடுத்து உடன். வாங்கிக் கொண்டார். அவர் போன கையோடு ஒரு காவலாளி வந்து வணங்கினான்.

"என்ன?"

"மாதோட்ட முதலியார் தங்கள் சமூகத்தை வேண்டுகிறார்."

"வரச்சொல்.."

தாரை தப்பட்டை பொற்கொடியோடு மாதோட்ட முதலியார் வந்தார்.

"வருக முதலியாரே."

"தங்கள் சமூகத்திற்கு வணக்கம் மன்னா"

"என் பெயர் மகித்தன்....மகித்தன் முதலியார் மாதோட்ட முதலி..."

"சந்தோசம்....வந்த காரணம்?"

"உங்கள் ஆட்சியில் குறைகாண இயலாது.. ஆனால் அதிகாரிகள் தம் எண்ணப்படி நிர்வகிக்கின்றனர். நான் வந்த விசயத்தை மட்டும் கூறுகிறேன். முடிவு உங்களைப் பொறுத்தது.. மன்னார் அதிகாரி இளம்சிங்கன் தன் எண்ணப்படி நடக்கிறார். மன்னார்த்தீவில் தோட்டவெளிக் கிராமத்தில் உள்ள 99 குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் மதம் மாறிவிட்டார்கள். அதிகாரி இளஞ்சிங்கனும் மதம் மாறிவிட்டான். தலைவன் எவ்வழி மக்கள் அவ்வழி...நகரத்தில் போர்த்துக்கேயர் வியாபாரம் செய்கிறார்கள். வந்து போகிறார்கள். மன்னாரில் திருக்கேதீஸ்வரத்தில் சிதிலமாகக் கிடக்கும் சிவன் கோயில் கல்லைக் கொண்டு கோட்டைகட்டவும் அனுமதிக்கவுள்ளார். முதலிமார்களை மதிப்பதில்லை...."

## அத்தியாயம் 14



# மன்னார் சங்காரம்

மாதோட்ட முதலியார் மகித்தன் சொன்னவற்றை நம்புவதா விடுவதா என மன்னன் யோசித்தான்.

“மதம் மாறுவதை அனுமதிக்க முடியாது. இது அரசியல் காரணி. மதம் மாறியவர்கள். அவர்களுக்கு நாடு பிடிக்க உதவுவர். எதை அனுமதித்தாலும் மதம் மாறுவதை அனுமதிக்க முடியாது. நான் இன்றே படையுடன் புறப்படுகிறேன். உண்மையாயின் மதம் மாறியவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.”

இளஞ்சிங்கன் மிகப்பலவீனமானவன். போர்த்துக்கேயரின் காசுக்கும் பேச்சுக்கும் மயங்கிவிட்டான். மதம் மாற்றுவதற்குக் கோவையிலிருந்து பிரான்சிஸ் சவேரியர் என்ற மதகுருவை அதே பெயருடைய பிரதான மதகுரு அனுப்பிவைத்தார். சங்கிலி மன்னன் ஆத்திரத்துடன் மன்னார் தோட்டவெளி வந்தான். மாதோட்ட முதலியார் சொன்னவை யாவும் உண்மையாக இருந்ததைக் கேட்டான். முதற் கட்டமாக அதிகாரி இளஞ்சிங்கனையும் மதகுரு பிரான்சிஸ் சேவியரையும் தன் வாளுக்கு இரையாக்கினான்.

"மதம் மாறியவர்களுக்குச் சொல்லுங்கள் கைவிட்டு பழைய மதத்திற்கு வரும்படி. ஒரு நாள் தவணை கொடுங்கள். இல்லாவிடில் அனைவரும் கொல்லப்படுவார்கள்."

தோட்டவெளி மக்கள் புதிய மதத்தில் பிடிவாதமாக இருந்தார்கள். சங்கிலி மன்னனும் தன் முடிவில் அழுங்கானான். அந்தக் கிராமத்தின் மண் சிவப்பானது. ஆண், பெண், சிறுவர், சிறுமிகள், குழந்தைகள் அனைவரும் சங்கிலியின் படைக்கு இரையாகினர் அக்கிராமமே பிணக்காடானது.

மகித்தனை மன்னாரின் புதிய அதிகாரியாக நியமித்துவிட்டு சங்கிலி தலைநகர் திரும்பினான். மன்னனால் உறங்கவே முடியவில்லை. அவன் வாளுக்கு இரையானவர்கள் தோன்றிக்கொண்டிருந்தார்கள். அறுநூறு உயிர்கள் பலியாகின. மன்னார் சங்காரத்தை மன்னனால் மறக்க இயலவில்லை. அதே போலப் போர்த்துக்கேயராலும் மறக்க முடியவில்லை. தாங்கொணாத துயரமடைந்து சங்கிலிமீது திடீரெனப்படையெடுக்க ஆயத்தப்படுத்தினர். கோவையிலிருந்த படை புறப்பட ஆயத்தமாகியது. அந்தவேளையில் புதியசெய்தியோடு தூதுவன் ஒருவன் வந்தான்

"போர்த்துக்கல்லிலிருந்து நிறைந்த பொன்னோடும் பட்டோடும் அவர்களின் சம்பள பொற்காசுகளோடும் நாகபட்டினம் நோக்கி வந்த பாரிய மரக்கலம் ஒன்று புயலில் அகப்பட்டு ஊர்காவற்றுறையை அடைந்து தரை தட்டிவிட்டது. இந்த நேரத்தில். படையெடுத்தால் அவை அனைத்தையும் இழக்க வேண்டும். சங்கிலி மன்னனிடம் பணிவாகவும் தந்திரமாகவும் பேசி தரைதட்டிய மரக்கலத்தையும் பொருட்களையும் முதலில் மீட்கவேண்டும். தருணம் பார்த்து படையெடுக்கலாம்"

யாருடைய அதிர்ஷ்டமோ யுத்தம் சந்தர்ப்பத்தால் நின்றது.

சங்கிலியைச் சந்திக்க போர்த்துக்கேயத் தூதுவர்கள் ஐவர் வந்தனர். அவர்களுடைய சம்பாசனையிலிருந்து அவர்கள் மன்னனின் சக்தியைப் புரிந்தவர்களாகக் காணப்பட்டார்கள். மன்னனின் விருப்பின்றியாழ்ப்பாணத்தில் எதுவும் ஆற்றமுடியாது என்பதை நன்கு புரிந்தவர்களாக இருந்தனர். மன்னார் சங்காரத்தின் பின்னர் மன்னனின் ஆற்றலையும் பிடிவாத குணத்தையும் நன்கு புரிந்து கொண்டார்கள்.

"தங்கள் சமூகத்திற்கு பணிவான வணக்கம் உரித்தாகுக."

"வருக.. எதிர்பார்த்தேன். நெடுந்தீவில் தரை தட்டிய தங்கள் மரக்கலத்தை எதுவிதமான எதிர்பார்ப்புமின்றி மகாமந்திரி விடுவித்தார். அதைப் போல இம்முறை ஊர்காவற்றுறையில் தரைதட்டிய கலத்தையும் எதிர்பார்க்கிறீர்களோ?"

போர்த்துக்கேய தூதுவர்கள் சற்று நேரம் அமைதியானார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மன்னன் குறுக்கிட்டான்:

"நமது இராச்சியத்திற்கு வருமானம் தருவதில் ஒன்று தரை தட்டிய மரக்கலங்கள். இது கொள்ளையல்ல. வழமை...பரம்பரை பரம்பரையாக நிலவி வரும் வழக்கம்."

"அப்படி நாங்கள் கருதவில்லை..நீங்கள் இம்முறை கருணை கூர்ந்து அக்கலத்தை விடுவிக்க வேண்டும். அதில் எங்களுடைய ஊதிபமும் உள்ளது..."

'ஊதிபத்தை மட்டும் விடுவிக்கச்சொல்லவா?"

அவசரமாகத் தூதுவர்கள் இடைமறித்தனர்.

"அக்கலத்திற்கு விடுகை நட்டஈடாக ஆயிரம் போர்த்துக்கல் பொற்காசுகள் தருகிறோம்... விட்டு விடுங்கள்."

மன்னன் இறங்கி வந்தான்.

" நீங்கள் இவ்வளவு சொல்வதால் கேட்கிறேன். பிடிபட்ட மரக்கலத்திலுள்ள

பொருட்களை எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறேன் மரக்கலத்தை அரச சொத்தாக்குகிறேன்..."

சங்கிலியுடன் வாதித்து விலைமதிப்பற்ற பொற்கட்டிகளையும் பட்டுத்துணிகளையும் இழக்க தூதுவர்கள் விரும்பவில்லை. தலைக்கு வந்தது. தலைப்பாகையோடு போயிற்று.

"விடைபெறு முன் இன்னொரு கோரிக்கை"

"கேளுங்கள்...."

"தங்கள் அரசில் நாங்கள் வியாபாரம் செய்ய அனுமதி தரவேண்டும்..'

"இதென்ன கேள்வி? அப்படி அனுமதிக்க முடியாது."

"தாங்கள் முஸ்லீம்களை வியாபாரம் செய்ய அனுமதிக்கிறீர்களே?'

"இரண்டும் ஒன்றா? அவர்கள் எங்களுடன் இரண்டறக் கலந்தவர்கள். உசன், நல்லூர், நாவாந்துறை ஆகியவிடங்களில் குடியேறியவர்கள். கூட வாழ்பவர்கள்"

"பலர் தமிழ் பெண்களை மணந்திருக்கிறார்களே?:"

"அதிலென்ன.? நீங்கள் வியாபார ஆதிக்கத்தோடு மதம் பரப்புதலையும் இலக்காகக் கொண்டவர்கள். குடியேற்றவாசிகளல்லர்...போர்த்துக்கேய காசுகளையும் விலையுயர்ந்த பட்டாடைகளையும் மக்களுக்குக் கொடுத்து மயக்கி மதம் மாற்ற உங்களால் முடியும்...மன்னாரில் அதைத்தான் செய்து என்னைக் கொலைகாரனாக்கினீர்கள்."

போர்த்துக்கேயத் தூதுவர்கள் விடை பெற்றனர்.

மஞ்சத்தில் உறக்கம் வராது மன்னன் தவித்தான். அவன் அருகில் படுத்திருந்த ராணி அரசமாதேவி அவன் உறக்கமற்ற தவிப்பை அவதானித்தாள்.

"உறக்கமே வரவில்லை ராணி. கண்களை மூடினால் மன்னார்த் தோட்டவெளிக் கிராமமும் எமது வாள்களுக்குப் பலியான மக்களும் தோன்றுகின்றனர். தூத்துக்குடி வாசிகளான பரதவிற் பெரும்பாலோர் சத்திய வேதத்தில் இணைந்துகொண்டனர். மிகுதியானவர்களைப் பிரதம பாதர் பிரான்சிஸ் சவேரியர் பாதிரியார் மதம் மாற்றினாராம். அதனைக் கேள்வியுற்ற மன்னார்த் தோட்டவெளி மக்களும் சவேரியாருக்குத் தூது அனுப்பினராம். அந்நேரத்தில் வேறு அவசிய பணிகள் காரணமைாகச் சவேரிய குருவானளவர் தன்பெயர் கொண்ட சீடனை மன்னாருக்கு இப்பணிக்காக அனுப்பி வைத்தாராம். பலியானவர் எண்ணிக்கை அறுநூறாகும். பிரதம குரு தப்பி விட்டார். அவர் அனுப்பிய சீடன் வாளுக்கு இரையாகினான் உயிர் பிச்சை கேட்டு இறந்தவர்களையும் சிரம் கொய்தோம். என்னிடமோ படை வீரர்களிடமோ இரக்கம் கொஞ்சமும் இருக்கவில்லை. இது மதம் சார்ந்த தன்று. அரசியல் சார்ந்தது...வருங்கால சமூகம் எப்படி எடுக்கப்போகிறதோ?" என்று சங்கிலி புலம்பினான்.

“கவலையை விடுங்கள் அரசே. பாராளும் மன்னவன் எத்தனையோ சிக்கல்களைச் சமாளிக்க வேண்டும். அதிலும் மதம் சம்பந்தப்படும்போது நாட்டு நலன் முதன்மைப் படுகின்றது. நீங்கள் செய்தவை தவறுகளாகா. நாட்டிற்காகச் செய்தவை. தங்கள் முன்னோன் முதலாவது ஆரியச்சக்கிரவர்த்தி கலிங்கத்து மாகனாகப் பொலநறுவையை ஆண்டார். பின்னர் பொலநறுவை சிங்கள மன்னன் ஒருவனால் துரத்தப்பட்டு வடபுலத்திற்கு ஓடி வந்தார். அங்கிருந்த பௌத்தர்கள் அனைவரையும் தென்புலம் துரத்தவில்லையா? அவருக்குப் பயந்து தலைநகர்கள் மாறவில்லையா? வடக்கே கரந்துறைந்த கலிங்கத்து மாகனை சிங்கைநகரின் இராசப்பிரதிநிதி புவனேகவாகு என்பான் விசயகாலிங்க ஆரியச்சக்கிரவர்த்தியென முடிபுனைந்தார். அந்த ஆரியச் சக்கிரவர்த்தி யாழ்ப்பாண நகரியையும் கந்தவேளுக்கு ஓர் ஆலயத்தையும் அமைத்து தலைநகரை யாழ்ப்பாணத்துக்கு மாற்ற குடாநாட்டில் எஞ்சி இருந்த பௌத்தர்களும் தென்புலம் ஓடவில்லையா? அதற்கெல்லாம் அவர்கள் உங்களைப்போல கவலைப் பட்டிருப்பார்களா? இதெல்லாம் ஆட்சியில் சகயம்..” என்றாள் அரசமாதேவி.

அவள் சொன்ன காரணங்களை சங்கிலி ஏற்கத் தயாராகவில்லை. அவன் உள்ளம் மன்னார் சங்காரக் கொடுமைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராவில்லை.

மனநிம்மதியை இழந்த வேளைகளில் சங்கிலி மாடத்தில் வந்து நிற்பான். வானத்தில் நிலவு பவனி வந்துகொண்டிருந்த இரவுப்பொழுதில் தூரத்தில் நிழலாகத் தெரிந்த நல்லூர் ஆலயத்தின் இராஜகோபுரக் கலசங்களைத் தன் மாளிகை மஞ்சத்திலிருந்து கண்கொட்டாது சங்கிலி செகராசசேகரன் பார்த்தான். நிலவு வெளிச்சத்தில் கோபுரக்கலசங்கள் ஏழும் ஒளிர்ந்தன. இன்று மன்னனின் மன நிலை அமைதியாகவில்லை. இரவு உறக்கம் அவனைத் தழுவவில்லை.. பலதும் மனதில் மோதி உறக்கத்தைக் குலைத்தன

## அத்தியாயம் 15



# விதிய பண்டாரன்

போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி வைத்தபோது இலங்கையில் கோட்டை அரசு. கண்டி அரசு, யாழ்ப்பாண அரசு என மூன்று இராசதானிகள் இருந்தன. கோட்டை இராச்சியத்தை விஜயபாகு என்பான் ஆண்டான். அவனுக்கு புவனேகபாகு, மாயாதுன்னை:, மதுமபண்டார எனும் மூன்று பிள்ளைகள். அவர்கள் தந்தையைக் கொன்றுவிட்டு இராச்சியத்தை கோட்டை. சீதவாக்கை, றைகமம் என மூன்றாக பிரித்து ஆண்டனர். கோட்டையின் அரசனாக இருந்தவன் மூத்த சகோதரனான புவனேகபாகு. அவனுக்குப் பிள்ளைகள் இல்லையாதலால் தனது மகள் வழிப்பேரனான தர்மபாலன் என்பவனைத் தன்பின் மன்னனாக்க விரும்பினான். புவனேகபாகுவின் மருமகனான விதியபண்டாரன் என்பான் மாமனுக்குப் பின்னர் கோட்டை முடி தனக்குரியதெனக் கலகம் செய்தான். அதனால் போர்த்துக்கேயர் அவனைப் பிடித்துச் சிறையிலடைத்தனர். சிறையிலிருந்து தப்பிய விதியபண்டாரனும் அவனது ஆட்களும் யாழ்ப்பாண அரசனிடம் அடைக்கலம் புக ஓடி வந்தனர்.

இயக்கச்சி தடைமுகாமில் தடுத்து நிறுத்தப்பட்டனர் செய்தி அறிந்த பளைப்பிரதேச அதிகாரி நீலகண்டன் விரைந்து வந்தான். பஞ்ச கச்சமாகக் கட்டிய வேஷ்டி, தலைப்பாகையுடன் பொருந்திய சிலிப்பா தலை, அழுத்தி மழுத்த முகம், அரையில் வரிந்து கட்டிய கச்சை சால்வை, ஊடுதாமமாக இடப்பட்ட இன்னொரு சால்வை, அரையில் அணிந்த நீண்ட வாள், கரத்தில் ஏந்திய வேலுடன் விதியபண்டாரன் ஏறென நின்றிருந்தான்.

“யாழ்ப்பாண மன்னனிடம் படையுதவி வேண்டி வந்துள்ளேன். கோட்டை அரசன் தர்மபாலன் மீதும் அவனுக்கு உதவியாக இருக்கும் போர்த்துக்கேயர் மீதும் படை யெடுக்க வேண்டும். நான் முன்னால் இருபது வீரர்களுடன் வந்துள்ளேன். பின்னால் ஐம்பத்தாறு குதிரை வீரர்களும் நான்கு யானைப்படை வீரர்களும் வருகின்றனர். ஆறு வண்டில்களில் வெடிப் பொருட்களும் வருகின்றன. புனித புத்த தந்த தாதுவையும் வரும்போது கொண்டு வந்துள்ளேன்” என்றான் விதியபண்டாரன்.

“எதுவாக இருந்தாலும் சரி...மன்னனின் அனுமதியின்றி படையோடு வரும் நீங்கள் இந்தக் கடவையைக் கடக்க முடியாது... நீங்கள் இங்கு முகாமிட்டு தங்கலாம். அதற்குள் அரசனிடம் தெரிவித்து அனுமதி பெற்றுத்தருகிறேன்.” என்ற நீலகண்டன் மன்னனுக்குத் தகவல் தெரிவிக்க விரைந்தான்.

நீலகண்டன் தெரிவித்தவற்றைக் கேட்ட சங்கிலி சேனாதிபதி சண்பகமாதாக்கரை உடன் அழைத்தான்.

“விதிய பண்டாரன் உதவி கேட்டு வந்துள்ளான். அவன் சிறந்த வாள் வீரன். தகுந்த மரியாதையுடன் வரவேற்று வீரமகாகாளியம்மன் கோயில் மடத்திலும் கோயில் வெளியிலும் அனைவரையும் தங்க விடுங்கள். பிறகு பேசலாம்.”

வீதியபண்டாரனும் ஆட்களும் தடுப்பு முகாமில் தடுக்கப்பட்டு தங்கயிருந்தபோது இரவு மெல்லெனப்படரத் தொடங்கியிருந்தது. அந்த நேரத்தில் காக்கைவன்னியனின் நம்பிக்கையான ஆள் ஒருவன் பரநிருபசிங்கனைச் சந்தித்தான். அவன் வரவை மகாமந்திரி எதிர்பார்க்கவில்லை.

காக்கைவன்னியன் சுருக்கமாக ஓலை ஒன்று அனுப்பியிருந்தான். ‘ஓலை கொண்டு வருபவன் நம்பிக்கையானவன். அவனை அரச சேவையில் இணைத்துக்கொள்ளவும். சகல விபரங்களையும் அவன் கூறுவான்.’

அவன் கூறினான்:

"பரராசசிங்கன். கண்டியிலிருந்து வந்து அடைக்கலம் கோரிய காசிநயினார். காக்கைவன்னியர். அப்பாமுதலி ஆகியோர் கோவையில் மதம் மாறிப் போர்த்துக்கேயருடன் உள்ளனர்.. யாழ்ப்பாணத்தின் மேல் கொன்சான்தனோ த பிரகன்சா என்ற கப்பித்தான் எந்த நேரமும் படையெடுக்கலாம். அடைக்கலம் புகுந்த நம் ஆட்களுடன் ஆலோசனை நடக்கிறது. படையெடுப்பிற்கு உங்கள் உதவி தேவை. ஏற்ற சந்தர்ப்பத்தை நீங்கள் தான் தெரிவிக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் புவனேகபாகுவுடன் அதாவது போர்த்துக்கேயருடன் பகைத்துக் கொண்டு விதியபண்டாரன் பெருந்திரவியங்களுடனும் புத்தரின் புனித தந்த தாதுவையும் அபகரித்துக் கொண்டு யாழ்ப்பாண மன்னனிடம் உதவி கேட்டு சரணடையவுள்ளான். அவர்கள் இருவரும் அசகாய சூரர்கள். அவர்கள் ஒன்று படக்கூடாது நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்."

விதியபண்டாரனின் பாசறை வீரமகாகாளியம்மன் மடத்திலும் வீதியிலும் அமைக்கப்பட்டன. விதியபண்டாரவும் முக்கியமானவர்களும் மடத்தில் தங்க வீரர்கள் கூடாரங்களில் தங்கினர். காவிவந்த திரவியங்கள் மடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. மடத்திற்கும் கூடாரங்களுக்கும் இடையில் வெடி மருந்தேற்றிவந்த வண்டில்கள் நின்றிருந்தன.

"யாழ்ப்பாண மன்னனிடம் படையுதவி கேட்டு வந்துள்ளோம். மாயாதுன்னை கோட்டை புவனேகபாகுவை எதிர்த்தபோது யாழ்ப்பாண மன்னன் மயாதுன்னைக்கு உதவினார். தோல்வி கண்டு திரும்பினார். பின்னர் புவனேகபாகுவுடன் சேர்ந்தார். புவனேகபாகுவை எதிர்ப்பது இல்லை யெனச் சத்தியம் செய்துள்ளார். இந்த நிலையில் புவனேகபாகுவுக்கு எதிராக எங்களுக்கு உதவுவாரா,? நம்பமாட்டேன்." என்ற தனது மெய்க்காவலனை ஆழமாக விதியபண்டாரன் ஏறிட்டான்.

"அது வேறு. இப்போது கோட்டையை ஆழ்பவன் தர்மபாலன். அவன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மை. நமக்கும் போர்த்துக்கேயருக்குமே பகைமை...போர்த்துக்கேயர் சங்கிலி மன்னனின் எதிரிகள். அவர்களுக்கு எதிராக படை தரமறுக்க மாட்டான். சந்தேகம் வேண்டாம்.'

'மாயாதுன்னை புவனேகபாகு யுத்தத்தில் நீங்கள் புவனேகபாகுவின் தளபதியாக நின்று யாழ்ப்பாணப் படையை எதிர்த்தீர்கள். அந்த யுத்தத்தில் தனது நண்பனான கனகராஜனை சங்கிலி மன்னர் இழந்தாா. அவர் படையைத் தோல்வி அடையச் செய்தீர்கள். மறந்துவிட்டீர்களா?"

"புரிகிறது....அரசியலில் என்றும் நண்பர்கள் இருப்பது இல்லை. அதே போலப் பகைவருமில்லை...மறந்து விட்டாயா?"

காலை கல கலப்பாக மலா்ந்தது. மடத்தைவிட்டு வாசலிற்கு வந்தான் விதியபண்டாரன். வீரமகாகாளியம்மன் வெளிக்கதவைக் குருக்கள் திறந்துகொண்டிருந்தார். அந்நேரம் ஆடம்பரமான பல்லக்கு ஒன்றில் வந்து முதன் மந்திரி பரநிருபசிங்கா் இறங்குவதையும் அவரைச் சூழ்ந்து அவரது முக்கிய பரிவாரம் வருவதையும் கண்டான். அவா்களில் காக்கைவன்னியன் அனுப்பி வைத்த தூதுவனும் இருந்தான்

வருவது முதன்மந்திரி என்பதை கட்டியத்தில் இருந்து விதியபண்டாரனால் இனங்காண முடிந்தது.

விரைந்து வந்தான்.

"தாங்கள் வரவேண்டுமா? சொல்லியனுப்பில் நானே வந்திருப்பேனே"

"நீங்கள் எமது விருந்தாளி..."

அவா்களை அழைத்துச் சென்று இருக்கைகளில் அமரச் செய்தான். விதியபண்டாரனின் உடல்வாகிலிருந்தும் அவனது முறுக்கேறிய கரத்தின் நீளத்திலிருந்தும் அவன் சிறந்த வீரன் என்பது முதன் மந்திரிக்குப் புரிந்தது.

"நான் நேரடியாக வந்த விடயத்துக்கு வருகின்றேன். ஒருவா் அரச உரிமை கோருவதும் இன்னொருவா் முடிதரிப்பதும் வழக்கம். சங்கிலி பல நிலைகளைத் தாண்டி மன்னாகியுள்ளான். சந்தா்ப்ப சூழ்நிலைகள் அவ்வாறு அமைந்துவிட்டன. அவனிடம் தாங்கள் படையுதவி கேட்டு வந்துள்ளீா்கள். இது சாத்தியமா? என் தம்பிதான் ஆனால் பேராசை பிடித்தவன். ஏராளமான திரவியங்களுடன் வேறு வந்துள்ளீா்கள். திரவியங்கள் அபகரிக்கப்படலாம். எச்சரிக்கிறேன்."

"நீங்கள் என்ன சொல்கிறிா்கள்?"

"உங்களிடம் இருக்கும் செல்வத்துக்கு கூலிக்கே ஆட்களைத்திரட்டலாமே என்கிறேன்."

"மன்னா் மறுத்தால் அம்முயற்சியில் ஈடுபடுவேன்."

“எதற்கும் கவனமாக இருங்கள். அவன் தமையன் நான் கூறுகிறேன். சங்கிலி நம்பக் கூடியவனல்லன்...”

சங்கிலி தன் பரிவாரத்துடன் விதியபண்டாரனைச் சந்திக்க வீரமகாகாளி அம்மன் கோவில் சென்றான். மன்னனைச் சந்திக்கும் ஆவலில் இருந்த விதியபண்டாரன் ஆர்வத்தோடு வரவேற்றான்.

“சகல விபரங்களையும் நான் கேள்விப்பட்டேன்.”

“மன்னா, புத்த தந்ததாது புனிதமானது. அதனை எவன் வைத்திருக்கிறானோ அவனே நாட்டின் அரசனாவான் என்பது எம்நாட்டவர் நம்பிக்கை... இப்போது அந்தப் புனித புத்த தந்த தாது என்னிடம் உள்ளது. அதனால் கோட்டை இராச்சியம் என்னுடையது.” என்ற விதியபண்டாரனை மன்னன் நோக்கினான்.

“கோட்டை இராச்சியம் இப்போது போர்த்துக்கேயர் வசம்.. அவர்களோடு பொருதுவதா?”

“அவர்கள் இங்கிருந்து துரத்தப்பட வேண்டியவர்கள் அந்நியர். அடுத்த இலக்கு யாழ்ப்பாணம்.”

“உறங்கும் புலியை எழுப்புவதா? மன்னார் சங்காரத்திற்கே அவர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கிறார்கள்.”

“அவர்கள் துரத்தப்பட வேண்டியவர்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அதற்காகக் காரணமின்றி அவர்கள் மீது படையெடுப்பதா.?”

விதியபண்டாரன் தயக்கமின்றிக் கூறினான்:

“நீங்கள் படையுதவ மறுக்கில் இங்கு தங்கி படைதிரட்ட அனுமதியுங்கள். எனது ஏராளமான திரவியங்களைப் பயன் படுத்தி தென்னிந்தியர்களை கூலிக்கு அமர்த்திக் கொள்கிறேன்..”

## அத்தியாயம் 16



# பூதவராயர் கோவில்

சங்கிலி மன்னன் சிந்தனை வயப்பட்டு உழன்றான். மன்னார்ப் படுகொலைகளுக்குப் பின்னர் நல்ல உறக்கத்தை அவன் இழந்தான். இப்போது வீரமகாகாளி அம்மன் கோயில் முன்றலில் நிறைவேறி முடிந்த துயர சம்பவங்கள் அவனின் எஞ்சிய உறக்கத்தையும் பறித்துவிட்டன. அந்தச் சம்பவம் கண்முன் நிழலாடியது.

விதியபண்டாரன் தன் முடிவில் திடமாக இருந்தான்.

அந்த நேரம் பார்த்து பரநிருபசிங்கனிடம் தூதுவனாக வந்த காக்கை வன்னியனின் ஆள் வெடிப் பொருட்களை ஏற்றி வந்த வண்டில் ஒன்றிற்கு தீ வைத்தான். சொல்லி வைத்தாற்போல படபடவென வெடிச்சத்தம் எழுந்தது. பேசிக்கொண்டிருந்த இருதலைவர்களும் தப்பாகப் புரிந்து கொண்டார்கள். சங்கிலி மேல் ஏற்கனவே சந்தேகம் கொண்டிருந்த விதியபண்டாரன் முதலில் தன் உறைவாளை உருவிக் கொண்டான். அதனைக் கண்ணுற்ற சங்கிலியும்

உருவிக் கொண்டான். மோதிக் கொண்டார்கள். இரண்டு தலைவர்களும் மோதிக் கொண்டதைக் கண்ட இரு தரப்பாரும் தத்தமது ஆயுதங்களை எடுத்துக் கொண்டனர். அப்பிரதேசம் சில கணங்கள் யுத்தகளமாயிற்று. வீரமகாகாளி யம்மன் ஆலயத்தின் முன் வீதி மண் இரத்தத்தால் குளித்தது.

“அவசரப்பட்டுவிட்டாயே விதியபண்டாரா...”

செய்தியறிந்து சேனாதிபதி சண்பகப்பெருமாள் வீரர்களுடன் ஓடிவந்தான்.

“விதியபண்டாரனை அரசமரியாதைகளுடன் தகனம் செய்து அவனது அஸ்தியை செப்புக்குடத்தில் இட்டு எடுத்து வருக. எனைய வீரர்களை அவர்கள் தகுதிக்கேற்ப தகனம் அல்லது அடக்கம் செய்து விடுக. திரவியங்களை அரண்மனைக் களஞ்சியத்திலும் குதிரைகளையும் யானைகளையும் உமது படையணியிலும் சேர்த்து விடுக. விதியபண்டாரத்தின் புகழ் பெற்ற உறை வாளை வீரமகாகாளிஅம்மன்கோவிலிற்குக் கொடுத்து விடுக” என்று கட்டளையிட்டான் மன்னன்.

அரசமாதேவி அந்தப்புரத்திற்கு வந்தாள். மன்னனின் ஏக்கநிலையை அவதானித்தாள்.

“என்ன சிந்தனை வசப்பட்டுள்ளீர்கள்? எந்தக்கோட்டையைப் பிடிக்க இவ்வளவு யோசனை சுவாமி?”

“தேவி, சிலகாலமாக என் அமைதி குலைந்து விட்டது. மன்னார் சங்காரம் ஏற்படுத்திய தாக்கத்தோடு இப்போது விதியபண்டாரனின் அவச்சாவும் சேர்ந்து கொண்டது.”

“விதியபண்டாரத்தின் மரணத்திற்கு நீங்கள் காரணமல்லா். அவன் தானாகத் தேடிக்கொண்டது. அவன் அவச்சாவு உங்களைப் பாதிக்கக் கூடாது எனச் சோதிடர் கூறியதுக்கு இணங்கப் பரிகாரமாக அவனது அஸ்தியை வைத்து பூதவராயர் கோயிலைக்கட்டி வருகிறீர்கள். பிறகென்ன?”

ஆமாம். விதியபண்டாரனின் நினைவாக பூதவராயர் ஆலயத்தை சங்கிலி கட்டுவித்தான். நினைவாக என்பதிலும் அவன் அகால மரணத்தினால் ஏற்பட்ட பயத்தினால் அமைப்பித்தான் என்பதே பொருத்தம்.

“பூதவராயர் கோவிலை எவ்வாறு அமைக்கிறீர்கள்?”

“கிழக்கு நோக்கிய கோயில். அதன் கர்ப்பக்கிரகம் இரண்டேமுக்கால் நீளமும். இரண்டு: முழ அகலமும் கொண்டது. அது மூன்று முழ உயரம் கொண்டது. அதன் மேல் இரு முழ உயரத்தில் விமானம் அமையும். இந்த விமானம் மூன்று தளங்களைக் கொண்டது. முதல் இரண்டு தளங்களும் வட்டவடிவமானது. மற்றையது சதுரவடிவினது. இதை தாமரை இதழ்களும் விமானம தாங்கிப் பொம்மைகளும் கர்ணக்கூடுகளும் அலங்கரிக்கும். கர்ப்பகிரகத்தில் தோண்டப்படும் குழியில் விதியபண்டாரத்தின் அஸ்தி வைக்கப்படும். அதன்மேல் பீடத்தில் லிங்கம் தாபிக்கப்படும். பலிபீடமாக எருது அமையும்,தேவி!.....”

அந்நேரம் காவலன் ஒருவன் வந்தான்.

“:மன்னனுக்கு வெற்றியுண்டாகுக. சேனாதிபதி சண்பகமாதாக்கர் அவசரமாக தங்களைக் காணவந்துள்ளார்.”

வயோதிபத்தின் சின்னங்கள் சேனாதிபதி சண்பகமாதாக்கிரின் இரும்புடலில் காணப்பட்ட போதிலும், முறுக்கேறிய கரங்களும் பரந்த மார்பும் சக்தி வாய்ந்த கண்களும் அவரது வீரத்தில் வயோதிபம் இல்லை என்பதை நிருபித்தன. வேகமாகக் குதிரையில் வந்த களைப்புமின்றி அவர் அறிவித்த செய்தி மன்னனின் விழிகளைக் கொவ்வைப்பழங்களாக்கின.

“போர்த்துக்கேய கப்பித்தான் கொன்சான்தினோ த பிரகன்சா என்பான் எம்மீது படை எடுத்துள்ளான். படை புறப்பட்டு விட்டதாம்.”

“புறப்பட்டு விட்டார்களா? வெகு காலமாக எதிர்பார்த்தேன். நல்லதொரு பாடம் புகட்டி அனுப்ப வேண்டும். வரட்டும்..”

“அவர்களின் படையில் ஆயிரத்தி இருநூறு போர்வீரர்கள் இருக்கலாமென நமது ஒற்றர்கள் மதிப்பிட்டுள்ளனர் தொன்னூற்றியிரண்டு மரக்கலங்களுடன் கோவையிலிருந்து படை புறப்பட்டு விட்டதாம். மேலும்..”

“மேலும்?...”

“மேலும் கொச்சி துறைமுகத்தில்தொன்னுற்றிரண்டு போர் மரக்கலங்கள் சேர்ந்துள்ளனவாம்.”

“வேறு?..”

“அவர்களிடம் பீரங்கிகள் பொருத்திய போர்க்கப்பல்களுள்ளன. துவக்குகள் நூற்றுக்கணக்கிலுள்ளன.”

சங்கிலி அரசன் சற்று அமைதியானான். ஏதோ யோசிப்பவன் போல குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

“சேனாதிபதி எதிரிகளின் படைகள் எங்கு தரை இறங்கும்?”

“தலைநகருக்குக் கிட்டத்தான் இறங்குவார்கள். நாற்றிசைப் படைத்தலைவர்களுக்கும் செய்தி அனுப்பியுள்ளேன். பிரதேச அதிகாரிகள் படையுடன் புறப்பட்டிருப்பார்கள். பட்டத்து இளவரசர் புவிராசர் தனது படையுடன் தங்கள் அனுமதிக்காகத் தயார் நிலையிலுள்ளார்.”

“அவர்கள் பெண்ணைத்துறையில் இறங்கட்டும், கரையோரம் எங்கும் எமது வீரர்கள் நிற்கட்டும்…பெண்ணைத்துறை முதலையின் வாயில் போன்றது. நாலாதிசைகளிலிருந்தும் தாக்கலாம். “

போர்த்துக்கேய தளபதி பிரகன்சா யாழ்ப்பாணத்தின் மேல் படையெடுக்கப் பலகாரணங்கள் இருந்தன. முக்கியமானது ஆதிக்கவெறி ஆயினும் மன்னாரில் சங்கிலி நடாத்திய சம்காரத்தை மறக்க கோவையிலிருந்த பாதிரியார் பிரான்சிஸ் சவேரியர் எனும் பிரதம குரு விடவில்லை. போர்த்துக்கேயரிடம் அடைக்கலம் புகுந்த அப்பாமுதலி, காக்கைவன்னியன், பரராசசிங்கன், காசிநயினார் ஆகியோர் தந்த இடையறாத இம்சை எல்லாம் சேர்ந்து படையெடுக்க வைத்தன. படைகலங்கள் புறப்படத்தயாரான நிலையில் பிரகன்சா அவர்களை அழைத்தான். அழைத்தமை சோடைபோகவில்லை. நன்மையாகவே முடிந்தது.

“உங்கள் போர்க்கலங்கள் எவ்வாறு செல்லப் போகின்றன தளபதியாரே?” என்ற அப்பாமுதலியை வியப்போடு பார்த்தான் பிரகன்சா.

“இதனென்ன கேள்வி அப்பாமுதலியாரே? வழமைபோல பெண்ணைக்கரையில் தான். அனலைதீவுக்கும் காரைதீவுக்கும் இடையில் ஊர்காவற்றுறைக்கடலில் பிரவேசித்து வேலணைத்தீவு கரையோரமாக மண்டைதீவை அடைந்து யாழ்ப்பாணகடனீரேரிக்குள் பிரவேசிப்போம்…”

“சங்கிலியும் அதனை எதிர்பார்த்து படைகளை நிறுத்தியிருப்பான். யாழ்ப்பாண கடனீரேரிக்குள் பிரவேசிக்க இரண்டு படைகளுள்ளன.”

“இரண்டு வழிகளா?”

:”ஆமாம்…இம்முறை நீங்கள் ஒரு படைத்தொகுதியை வழமையான பாதையில் அனுப்புங்கள். ஒன்றைவங்காளவிரிகுடாவூடாகசுண்டிக்குளத்திற்கு அனுப்புங்கள். சுண்டிக்குளம் ஊடாக யாழ்ப்பாணக் கடல் ஏரிக்குள் பிரவேசிக்க முடியும் என்பது பலருக்கும் தெரியாது. சுண்டிக்குளக் கலங்களை பதவியா உலோகநாத தண்டநாயக்க வன்னியன் தாக்க இடமில்லை. பளை வன்னியன் நீலகண்டன் தனது சிறுபடையை பாஷையூர் அனுப்பியிருப்பான். கச்சாயில் தங்கியுள்ள வடக்கர் படை மன்னனோடு பிணக்கப்பட்டுள்ளது. தாக்க மாட்டார்கள். தடையின்றி பாஷையூர்வரை முன்னேறலாம். பாஷையூரில் தான் தமிழ் படை எதிர்க்கும்..” என்று வழிசொன்னார் அப்பாமுதலி.

“எனது தந்தை பரநிருபசிங்கன் தங்களை ஊர்காவற்றுறையில் தனது சிறு படையுடன் சந்திப்பார். அது மட்டுமன்று. திருகோணமலை வன்னியர் கோகர்ண வன்னிமை திடீரென இறந்துவிட்டார். எனது அத்தை இராச்சியத்தைப் பொறுப்பேற்று வன்னிச்சி ஆகிவிட்டார். திருமலையின் எட்டு வயதுப் பாலகனைப் பொறுப்பேற்று ஒரு வன்னியன் தங்கள் சமூகத்தை நாடி கொழும்புக்குப் புறப்பட்டு விட்டான். ஆசை யாரை விட்டது. யாழ்ப்பாணமுடி அந்த எட்டு வயது பாலகனுக்கு உரிமையாம். யாழ்ப்பாணத்தை நீங்கள் கைப்பற்றி எனது தந்தை பரநிருபசிங்கரை மன்னனாக்கில் பிரச்சினைகள் தீரும்.” என்றான் பரராசசிங்கன்.

## அத்தியாயம் 19



# கோப்பாய் கோட்டை

சங்கிலி மன்னன் எதிர்பார்த்தது போலப் போர்த்துகேயப்படை முழுமையாகப் பெண்ணைத்துறையில் இறங்கவில்லை. அடிவானத்தில் ஆதவன் மறையும் வேளையில் சில போர்க்கலங்கள் பெண்ணைத் துறையை அடைந்தன. சங்கிலி எதிர்பார்த்தமாதிரி படைகள் உரியவேளையில் வரவில்லை. போர்த்துக்கேயர் திடீரெனப் படையெடுத்ததால் தஞ்சாவூர் வருணகுலத்தான் உடனடியாகப் படைதிரட்ட முடியவில்லை. சுண்டிக்குளம் வாயிலாகப் போர்த்துக்கேயபடையை முற்றிலும் எவரும் எதிர்பார்க்கவில்லை. போர்த்துக்கேயரின் பீரங்கிகள் முழங்கின. துவக்குகள் சன்னங்களை உமிழ்ந்தன. தமிழர் படை வீரர்களால் எதிர்நிற்க முடியவில்லை. பின் வாங்கின.

சண்பகப்பெருமாள் விரைந்து வந்தார்

“போரின் நிலைமைகள் நமக்குச் சாதகமாகவில்லை அரசே! சுண்டிக்குளப் பாதையாலும் போர்த்துக்கேயர் ஊடுருவிவிட்டார்கள். பட்டத்து இளவரசர்

புவிராசர் தீரமாகப் போராடினார். பயனில்லை. காட்டிக்கொடுக்கும் கயவர்கள் அதிகரித்துள்ளனர். துரோகிகள் வரிசையில் மகாமந்திரியும் சேர்ந்து விட்டார். அவர் தனது படையுடன் புறப்பட்டபோது போருக்கு என நினைத்தது பொய்யாகி விட்டது."

"அப்படியாயின் அவர் போருக்கு செல்லவில்லையா?"

"இல்லை. ஊர்காவற்றுறையில் போர்த்துக்கேயருடன் சேர்ந்து நமது படைகளுக்கு எதிராகப் போரிட்டாராம்.."

".இராசத் துரோகி. அவர்களை உடன் சிறை பிடியுங்கள்."

"யாரை?"

"மந்திரிமனையில் எஞ்சியுள்ள யாவரையும் பிடித்து சிறையிடுங்கள். களஞ்சிய அறையை மூடி முத்திரையிடுங்கள். சேது நாணயம். இனி வார்க்க வேண்டாம்."

மந்திரிமனைக்கு காவலர்கள் சென்றபோது பரநிருபசிங்கத்தின் மனைவி மாதவிதேவி உட்பட பன்னிருவர் சிறைப்பட்டனர்.

"அவர்கள் அனைவரையும் கோப்பாய் கோட்டையில் அடையுங்கள்." என்றான் மன்னன்.

யாழ்ப்பாண அரசர்களுக்கு கோப்பாயில் ஒரு பாதுகாப்பான கோட்டை இருந்தது. மன்னர்களின் ஓய்வுகால அரண்மனையாகவும் பாதுகாப்பு அரணாகவும் இக்கோட்டைவிளங்கியது. சுடு செங்கற்களினாலும் மண்ணாலும் நாலா பக்கங்களும் உயரமான கோட்டைச் சுவர்கள் கட்டப் பட்டிருந்தன. கோட்டையின் உள்ளே சுண்ணாம்பு கற்களினாலும் சுதையினாலும் அரண்மனை அமைக்கப் பட்டிருந்தது. மன்னனின் இராணுவப்படையொன்று கோப்பாயில் நிறுத்தப் பட்டிருந்தது.

நேருக்கு நேர் எதிர்த்து போர்த்துக்கேயரை வெற்றி கொள்ள முடியாத நிலை தோன்றியதை சங்கிலி உணர்ந்தான். மன்னனிடம் 40 பீரங்கிகளும் 500 நிரப்புத் துவக்குகளும் இருந்தன. சங்கிலியின் மகன் புவிராசன் 1500 தமிழ் வீரர்களுடன் போர்த்துக்கேயருடன் போராடியும் வெற்றி பெற முடியவில்லை. பறங்கிகளின் குண்டு மாரிக்கு தமிழர் படை எதிர் நிற்கமுடியவில்லை.

வெற்றி கண்ட பறங்கிப் படை வீரர்கள் 1200 பேருடன நல்லூரை நோக்கி பிரகன்சா அணிவகுத்தான். தற்போது போர்த்துக்கேயரின் கரம் ஓங்கியதைக் கண்ட சங்கிலி நல்லூர் அரண்மனையின் ஒரு பகுதிக்கு தீ மூட்டிவிட்டு அரண்மனையிலிருந்த திரவியங்களை எடுத்துக் கொண்டு. அரச குடும்பத்தினருடன் கோப்பாய் கோட்டைக்கு இடம் மாறினான்.

"அரசே. இந்த இடமாற்றம் அவசியந் தானா?" என்று அரசமாதேவி வினவினாள்.

"அவசியம் தான் தேவி. மன்னனைப் பிடித்தால் தான் யுத்தத்தில் வெற்றி கிட்டியதாகும். நான் ஒரு புது யுத்தம் நடாத்த இருக்கிறேன். நாளை காலை வெல்லை நதியின் முகத்துவாரத்தில் உப்புமாலில் வருணகுலத்தானின் தஞ்சாவூர் படை இறங்கவுள்ளது. நம்மைத்தேடி கோப்பாய் கோட்டைக்கு போர்த்துக்கேய கப்பித்தான் மார்டின் படையனுப்பியுள்ளானாம். அப்படை வருணகுலத்தானால் துவம்சம் செய்யப்படும்."

"யாழ்ப்பாணதினைக் கைப்பற்றியதும் தன்னிடம் முடியை ஒப்படைக்குமாறு கேட்டு பரநிருபசிங்கர் சென்றுள்ளாராம்."

"அது சாத்தியப்படாது தேவி. கோவை சென்று அங்கு வாழும் பிரகன்சாவின் அனுமதி பெறவேண்டும். அதற்கு முதல் மதம் மாற வேண்டும் முதன் மந்திரியால் உடன் இவ்வளவும் செய்வது சாத்தியமல்ல."

"இங்கு பிடித்து வைத்திருக்கும் அரசியல் கைதிகளை என்ன செய்வதாக உத்தேசம்'?"

"வேறென்ன செய்வது? இராசத்துரோகிகளுக்கு வழங்கும் தண்டனை தான்.."

"அப்படியென்றால்...?"

"நாங்கள் இக்கோட்டையை விட்டு வேறிடம் செல்ல நேர்ந்தால் கோட்டை வாசலில் அவர்கள் சிரச்சேதம் செய்யப்படுவார்கள்...இங்கு வரும் போர்த்துகேயர் கோட்டை வாசலில் பன்னிரு முண்டங்களையும் தலைகளையும் காண்பர்."

துடித்துப் போனாள் அரசி.

"அவர்களில் ஒருவர் தங்கள் அண்ணியார்? மகாமந்திரியாரின் மனைவியார்.."

"அதனால் துரோகம் மறைந்து விடுமா?"

இரவு கோப்பாய் கோட்டையைத் தழுவியது. பணிப் பெண்கள் விளக்குகளை ஏத்தினர்

"அரசே, பட்டத்து இளவரசன் புவிராசனையும் சேனாதிபதி சண்பகமாதாக்கரையும் அவர்கள் சிறை பிடித்துவிட்டார்கள். அவர்களை விடுவிக்க என்ன செய்யப்போகிறீர்கள்?"

"யோசிக்கிறேன் தேவி....காலம் வழிவிடும்.."

கொண்சாந்தினோ த பிரகன்சா யாழ்ப்பாணத்தின் மேல் படையெடுக்க இன்னொரு காரணம் இருந்தது. விஜயநகர அரசன் சென் தோமஸ் கிறிஸ்தவரை வருத்திக் குடிவிலக்கினான். அக்கிறிஸ்தவர்களைக் குடியேற்ற யாழ்ப்பாணம் உகந்ததென பிரகன்சா கருதியிருந்தான். இப்போது சென் தோமஸ் கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண அரசன் இன்னமும் உயிருடன் அல்லது பிணமாகப் பிடிபடாமையால் யாழ்ப்பாணம் வர மறுத்தார்கள். மன்னாரில் மதம் மாறியவர்களுக்கு சங்கிலியால் நிகழ்ந்த படுகொலைகள் அவர்களைப் பயமுறுத்தின. நல்லூர் அரண்மனையையும் கோட்டையையும் கைப்பற்றிய பிரகன்சா நகரைவிட்டு வெளியேறிய மக்களைப் பயமின்றி மீளவந்து குடியேறுமாறு பறையறைவித்தான். தப்பியோடிய மன்னனைப் பிடிப்பதற்காக 400 வீரர்களை கோப்பாய்க்கு அனுப்பினான்.

அவர்கள் அங்கு சென்றபோது சங்கிலி தன் பரிவாரத்தோடு வன்னிக்குப் பயணமாகியிருந்தான். கோப்பாய் கோட்டை வாயிலில் பன்னிரு முண்டங்களும் அவற்றின் தலைகளும் கிடந்தன. சங்கிலி எண்ணியவாறு போர்த்துக்கேய வீரர்கள் கோட்டைக்குள் நுழைய முன்னரே வெல்லை உப்புமடத்தில் (தொண்டைமானாறு) இருந்து விரைந்து வந்த வருணகுலத்தானின் தஞ்சை வீரர்கள் போர்த்துக்கேய படையை துவம்சம் செய்தன. பிரகன்சா எஞ்சிய ஐம்பது வீரர்களுடன் நல்லூருக்கு பின்வாங்கி ஓடினான்.

"சங்கிலி மன்னனை எப்படியும் பிடித்தே தீரவேண்டும்"

நல்லூரில் விட்டு வந்த வீரர்களில் இரு நூறு பேரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு வன்னி நோக்கிப் புறப்பட்டான். பளை வரை ஒரு விதமான மாற்றமுமில்லை. பளையில் அப்பிரதேச அதிகாரி நீலகண்டன் தனது சிறிய படையுடன் பிரகன்சாவின் பரிவாரத்தை எதிர்கொண்டான். முதலில்

எதிர்ப்பானென பிரகன்சா எண்ணினான். பிறகு தான் தெரிந்தது நீலகண்டன் அவனிடம் தன் படையுடன் அடைக்கலம் புகவந்துள்ளமை.

“படைக் கப்பித்தான் அவர்களே. வெற்றிகள் உமதாகட்டும். உங்கள் ஆட்சியை வரவேற்கிறோம். என் பெயர் நீலகண்டன். பளைப்பிரதேச அதிகாரி.. தங்கள் சேவைக்குரியவன்.”

“ஏனைய பிரதேச அதிகாரிகள் உம்போல இருப்பார்களா?”என்று பிரகன்சா கேட்டான்

“பெரும்பாலும் இருப்பார்கள் துரை. யார் என்பது பிரச்சினையல்ல. சிம்மாசனத்தை நிரப்புபவர் யார் என்பது தான் எங்களது பிரச்சினை..சங்கிலி மன்னனுக்கு முதலே சிம்மாசனத்திற்குரித்துடையோர் மூவருள்ளனர். அப்படியிருக்க சங்கிலியை ஏற்கவில்லையா?”என்றான் பணிவாக நீலகண்டன்.

“இப்போது முன்னைய மன்னன் எங்குள்ளான்? இப்பாதையாலே தான் ஓடியிருக்க வேண்டும். அறந்திருப்பீர்கள்.”

‘ஆமாம் அவர்கள் இப்பாதையால் தான் போனார்கள் முள்ளியவளை வன்னியர் விஜயாலய முதலி இடம் அளித்துள்ளார். பதவியா வன்னிமை உலோகநாத தண்டநாயக்கன் தங்களை ஆனையிறவில் படையோடு எதிர்கொள்ளவுள்ளான். அவரோடு மன்னரின் படையும் முள்ளியவளை வன்னியன் படையும் சேரலாம்.”

பிரகன்சா யோசனையில் ஆழ்ந்தான்.

உலோகநாத தண்டநாயக்க வன்னிமை திடமாகக் கூறினான்:

”போர்த்துக்கேய கப்பித்தான் பிரகன்சா 1200 வீரர்களுடன் மரக்கலம் ஏறினான். யுத்தத்தில் 300 வீரர்களை இழந்தான். கோப்பாய் சண்டையில் வருணகுலத்தானிடம் 300 பேரை இழந்தான். நல்லூரைப் பாதுகாக்க சிலரை நிறுத்திவிட்டு எஞ்சிய சொற்ப வீரர்களுடன் உங்களைத் தொடர்ந்து வந்துள்ளான். ஆத்திரம் அவன் கண்களை மறைத்து விட்டது. உங்களை மன்னனாக்கியே தீருவோம். ஆனையிறவில் பிரகன்சா துண்டடைக் காணோம் துணியைக்காணோம் என ஓடப்போகின்றான்.. பாருங்கள் மன்னா!.”

உலோகநாத தண்டநாயக்கன் கூறியபடியே யாவும் நடந்தன.

## அத்தியாயம் 20



# நான் துரோகி

அன்றைய மாலைப்பொழுதைக் கலக்கமின்றிக் கழிக்க கொன்சான்தினோ த பிரகன்சா விரும்பினான். சில நாட்களாக பல குழப்பங்கள் தோன்றி அவனை வாட்டின. அவன் தன்னோடு அழைத்துவந்த போர் வீரர்களில் முக்கால் பங்கினர் இன்றில்லை. பலியாகிவிட்டனர் தலைநகரைப் பாதுகாப்பதற்கும் நிர்வாக ஒழுங்குகளைக் கவனிப்பதற்கும் ஆளணி தேவை. அந்த எண்ணிக்கையில் ஆட்கள் இல்லை. இந்நிலையில் கோவைக்கு திரும்பிவிடுவது தான் புத்திசாலித் தனம். புலியின் வாலைப்பற்றியதாக நிலமையுள்ளது. இராசதானியை கைப்பற்றியாகி விட்டது. கௌரவமாகப் பின்வாங்க வேண்டும்.

“கப்ரினுக்கு வெற்றியுண்டாகுக. தங்கள் தரிசனத்தை வேண்டி முள்ளியவளை வன்னியனார் விஜயபால முதலி வந்துள்ளார்..” காவலன் கூறிய செய்தி பிரகன்சாவுக்கு உகந்ததாக இருந்தது. பளை அதிகாரி நீலகண்டன் போல அடைக்கலம் வேண்டி வந்துள்ளானோ?

“உடன் அழைத்து வா…”

விஜயபாலா முதலி வந்தார் பஞ்சகச்சம் வயிற்றை வரிந்த சால்வை. ஊறு தாமமாக இன்னொரு சால்வை. கொண்டையாகக் கட்டிய தலைமயிர் முறுக்கேறிய உடல்.

“தாரை, தம்பட்டம், மத்தளம், தவில், நாதசுரம், பட்டுக்குடை முதலான தங்களின் சின்னங்கள் எங்கே.?”

“அவற்றைத் தாங்கள் விரும்புவீர்களோ தெரியாது..எனவே தவிர்த்துவிட்டேன். நான் தங்கள் முன் இப்போது அரசனின் ஒரு தூதுவனாக வந்திருக்கிறேன். மன்னர் தங்களுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்ய விரும்புகிறார். தாங்கள் விரும்பில் நாளை காலை மன்னர் தங்களை இயக்கச்சி ஊடுதடை முகாமில் சந்திப்பார்.”

பிரகன்சா மகிழ்வோடு ஒப்புக்கொண்டான்.

காலை பிறந்து. இரு சாராரும் தம் பரிவாரங்களுடன் இயக்கச்சி ஊடுபாவு தடை முகாமில் கூடினர். பிரகன்சாவும் சங்கிலி மன்னனும் இரண்டு ஏறுகள் போல அமர்ந்திருந்தனர். நீண்ட அமைதி நிலவியது. பிரகன்சா கலைத்தான்.

“நாங்கள் கைப்பற்றிய இராசதானியை மீண்டும் சங்கிலி மன்னனே முடி புனைந்து ஆளலாம். அரியணையை பழைய மன்னனிடம் விட்டுக்கொடுக்கிறோம். ஆனால் அதற்குப் பதிலாக மன்னன் ஆண்டு: தோறும் போர்த்துக்கேயருக்குத் திறைசெலுத்த வேண்டும். பன்னிரண்டு கொம்பன் யானைகளும், 1200 பர்தாங்கு போர்த்துக்கேயப் பணமும் யாழ்ப்பாண அரசன் திறையாகச் செலுத்த வேண்டும்.” திறை நிபந்தனையை சங்கிலி எதிர்பார்த்தான். அதனால் அதிர்ச்சியடையவில்லை. முடி மீண்டும் கிடைத்தால் போதும்.

“தங்கள் முதல் நிபந்தனைக்கு ஒத்துக் கொள்கிறேன்”

“யாழ்ப்பாண மன்னன் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேரும் எவரையும் தண்டிக்கக்கூடாது. பிரச்சாரம் செய்யும் குருமாரை அனுமதிக்க வேண்டும். முக்கியமானது விதியபண்டாரத்திடமிருந்து பெற்ற அல்லது அபகரித்த அனைத்து திரவியங்களையும் எங்களிடம் தர வேண்டும். அவன் கவர்ந்து வந்த புத்த தந்த தாதுவை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். விதியபண்டாரத்தின் ராணிகளை கோட்டைக்கு அனுப்ப எம்மிடம் தரப்பட வேண்டும். மன்னார் தீவு எமக்குத் தரப்பட வேண்டும்.”

ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை. முடியை முதலில் பெறுவோம். பிறகு மற்றவற்றைப் பார்க்கலாம் என்றெண்ணிய சங்கிலிக்கு அடுத்து நிகழ்ந்தவை பேரிடியாக அமைந்தன.

"கப்பித்தான் பிரகன்சா அவர்களே, தங்கள் நிபந்தனை யாவற்றிற்கும் ஒப்புக்கொண்டோம். எங்கள் வேண்டுகோள் ஒன்றிற்கு நீங்கள் ஒப்ப வேண்டும்."

"என்னவென்று சொல்லுங்கள்.."

"தங்களிடம் சிறைப்பட்டிருக்கும் பட்டத்து இளவரசரையும் சேனாதிபதியையும் விடுவிக்க வேண்டும்."

"அவற்றைக் கேளாதீர்கள். அது முடியாது மன்னா! தாங்கள் எங்களுடைய உடன்படிக்கைகளை மதித்து நடக்கிறீர்களா என்பதைப் பார்க்க அவர்களைப் பிணையாக வைத்திருக்கப் போகிறோம். பின்னரே விடுவோம்..."

சங்கிலியால் எதுவும் பேச முடியவில்லை.

நிலவு காலமில்லையாதலால் வானத்தில் 'கும்' இருட்டு கவிந்திருந்தது. ஆங்காங்கு தாரகைகள் நம்பிக்கையோடு கண்சிமிட்டின. துயரத்தோடு அவற்றைக் கண்ணிமைக்காது சங்கிலி பார்த்தான். அவனை அறியாமல் கடந்து போன வாழ்க்கை புரளத்தொடங்கியது. இன்னும் வாழ்க்கை எத்தனை நாளுக்கு? எத்தனை நாளுக்குத்தான் மறைப்பது?

சங்கிலி நீ கண்டதென்ன? துரோகம்...? என்று கனகராஜன் இறந்தானோ அன்று தொட்ட துயரம்? கழிவிரக்கம். கழுவாய் இல்லையா?

அரசமாதேவி வந்தாள்.

"சுவாமி, ஏன் துயரம் இராச்சியம் தான் மீளக்கிடைத்து விட்டதே?'

"நடந்தவற்றை எண்ணிக்கொண்டேன். தேவி, நீ நினைப்பதுபோல உன் கணவன் உத்தமனல்லன். அப்படி ஒரு எண்ணம் இருந்தால் அதை மாற்றிக் கொள்.."

"பிரபு. நீங்களேன் இன்று என்ன வெல்லாமோ பேசுகிறீர்கள்?"

"உனக்கு இன்று எல்லாவற்றையும் கூறிவிடுகிறேன். கேள்."

மன்னன் கூறத்தொடங்கினான்:

"மன்னன் ஒருவனின் மகனாய் பிறந்தேன். ஆனால் வைப்பாட்டி மகன் என்ற இழி பெயர் என்னோடு ஒட்டிக்கொண்டது. கேலிக்கு ஆளானேன் எனக்கு யாழ்ப்பாணத்தின் முடி கிடைக்க வாயப்பே கிட்டாது. அதை எவ்வாறாயினும் அடைந்தே தீரவேண்டும். நானும் கனகராஜனும் திட்டம் போட்டோம். அத்திட்டத்தின் விளைவாக இரண்டு மூத்த பட்டத்து இளவரசர்களையும் சதியாகக் கொல்லுவித்தோம். பழியை வன்னியர் மீதுபோட்டோம். அடுத்த பட்டத்து இளவரசர் பரநிருபசிங்கரை கொலை செய்விக்க நேரவில்லை. அதற்குள் முடி எனதாகிவிட்டது. என் தந்தைக்கு எம் சதி கசிந்திருந்தது. முடியை இழக்கக்கூடாது என்பதற்காக உதயவல்லியை ஏமாற்றினேன்."

சங்கிலி மன்னன் நிறுத்தினான்.

"எல்லாம் விதி என்று மறந்து விடுவோம். முடியை உரியவர்களிடம் கொடுத்து விடுங்களேன்

"அவர்கள் ஒருவரும் இங்கில்லை. எல்லாரும் அந்நியருடன் சேர்ந்து விட்டனர். நான் மன்னனாகிய வழி பிழையானதாகினும் நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யவில்லை. நாட்டை அந்நியர் வசம் போகவிடவில்லை. ஒப்பந்தப்படி போர்த்துக்கேயருக்குத் திறை செலுத்தப்போவதில்லை. அதற்கு என் பட்டத்து மகன் பலியாயினும் நாடே முக்கியம்.."

போர்த்துக்கேய மரக்கலங்கள் அடிவானத்தில் மறைந்தன.

**– முற்றும் –**

# பின்னுரை

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதிமன்னன் சங்கிலி செகராசசேகரன் என்று கொள்ளப்படுவதற்குக் காரணம் இந்த இராசதானியை ஆண்ட இன்னொரு சங்கிலிகுமாரனின் கதையையும் இணைத்தமையாகும். யாழ்ப்பாணத்தை ஆண்ட முதலாவது சங்கிலி இந்த நாட்டின் இறுதி மன்னனல்லன். அவன் அரசனான வழி தவறாயினும், நாட்டை நன்கு பரிபாலனம் செய்தவன். மாவீரன். கடைசி வரை நாடு அந்நியர் வசமாகாது பாதுகாத்தவன். பிரகன்சாவுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக் கைப்படி நடந்து கொள்ளவில்லை. திறைசெலுதித்தவில்லை. ஆனால் இந்த அரசின் இறுதிக் கொழுந்தல்லன். பட்டத்து இளவரசனும் அவன் மனைவியும் போர்த்துகேயரால் கோவைக்குக் கொண்டு செல்லப்பட்டு மதம் மாற்றப்பட்டு இறந்தனர். போர்த்துக்கேயரால் கொண்டு செல்லப்பட்ட புத்ததந்த தாது பலர் வேண்டியும் கவனத்தில் கொள்ளப்படாது மூட நம்பிக்கையை வளர்க்கும் என்பதால் பொடி செய்யப் பட்டு கடலில் கரைக்கப்பட்டது. 1515 முதல் 1565 வரை இந்த நாட்டை சங்கிலி ஆண்டான். அவன் முடிவு எவ்வாறாயிற்று என்று தெரியாதாயினும் அவன் பின்னர் ஐந்து மன்னர்கள் இந்தநாட்டை ஆண்டுள்ளனர். அவர்கள் காசிநயினார், பெரியபிள்ளை, புவிராஜசிங்கன், எதிர்மன்னசிங்கன், சங்கிலிகுமாரன் என்போராவர். பெரியபிள்ளை யாழ்ப்பாணத்தின் அரசனாக இருந்தபோது திறை செலுத்தப்பட்டது. பரநிருபசிங்கர், பரராசசிங்கன்., வன்னி இளவரசன் ஆகிய மூவரும் கோவையில் மதம் மாறி இடையில் மரித்தார்கள். அதனால் அரசாளும் சந்தர்ப்பத்தை இழந்தார்கள். 1584 இல் மன்னனாகிய புவிராஜபண்டாரன் போர்த்துக்கேயருக்கு எதிராக மன்னாருக்குப் படையெடுத்தான். 1591 இல் அந்திரே பூர்த்தாடு தே மொண்டென்சா எனுகுல் கப்பித்தான் பெரும் படையுடன் சென்று புவியரசன் தலையைக் கொய்தான். அதன் பின்னர் எதிர்மன்னசிங்கன் அரசனான். அதன் பின்னர் சங்கிலிகுமாரன் என்பான் மன்னனானான். இவன் கொடுங்கோலன் என மக்கள் முறையிட்டதால் போர்த்துக்கேயர் இவனைப் பிடித்து கோவைக்கு அனுப்பிச் சிரச்சேதம் செய்தனர். 1620 இல் பிலிப் தே ஒலிவேறா என்ற போர்த்துக்கேயன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தானே நிர்வாகியானான். போர்த்துக்கேயர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை முதன்முதல் இழந்தது.

- ஆசிரியர்

## ஆசிரியரின் நாவல்கள்

1. வாடைக்காற்று
2. நந்திக்கடல்
3. சித்திரா பௌர்ணமி
4. ஆச்சி பயணம் போகிறாள்
5. இரவின் முடிவு
6. அலை கடல்தான் ஓயாதோ
7. முற்றத்து ஒற்றைப்பனை
8. கொத்தியின் காதல்
9. பிரளயம்
10. கங்கைக் கரையோரம்
11. காட்டாறு
12. நடந்தாய் வாழி வழுக்கியாறு
13. ஒருமைய வட்டங்கள்
14. யானை
15. காவோலை
16. கனவுகள், கற்பனைகள், ஆசைகள்
17. இந்த நாடு உருப்படாது ?
18. கிடுகுவேலி
19. அக்கினிக் குஞ்சு
20. காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
21. கடல்கோட்டை
22. மழைக்காலம்
23. ஓ அந்த அழகிய பழைய உலகம்
24. தீம்தரிகிட தித்தோம்
25. குவேனி
26. மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
27. கந்தவேள் கோட்டம்
28. யாககுண்டம்
29. அக்கினி
30. சாம்பவி
31. கொழும்பு லொட்ஜ்
32. போரே நீ போ
33. மரணங்கள் மலிந்த பூமி
34. ஈழ ராஜா எல்லாளன்
35. ஆறுகால் மடம்
36. பூதத்தீவு புதிர்கள்
37. வானும் கனல்சொரியும்
38. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
39. ஜன்மபூமி
40. மீண்டும் வருவேன்
41. அலையின் கீதம்
42. யுத்தபூமி
43. மெல்ல இருள் இனி விலகும்
44. ருத்திர தாண்டவம்
45. விடியலைத் தேடி
46. மாமன்னன் சங்கிலியன்

## ஆசிரியரின் சிறுகதைத் தொகுதிகள்

1. இதயமே அமைதி கொள்
2. யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
3. இரவு நேரப் பயணிகள்
4. ஓடில்லா நத்தைகளும் கூடில்லா ஆமைகளும்
5. குந்தி இருக்க ஒரு குடிநிலம்
6. வற்றாநதி

## ஆசிரியரின் பல்சுவைக் கட்டுரை நூல்கள்

1. கூடாரவாழ்க்கை.
2. சுனாமி
3. ஈழத்து சிறுகதை வரலாறு
4. ஈழத்தவர் வரலாறு
5. யாழ் கோட்டை வரலாறு
6. 24 மணிநேரம்
7. 12 மணிநேரம்
8. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது.

**கமலம் பதிப்பகம்**
75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாண இராச்சியத்தின் புகழ் வாய்ந்த மன்னனான சங்கிலி செகராசசிங்கனின் சிறப்பான வரலாற்றை விபரிக்க பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. சங்கிலி மன்னன் அரச கட்டிலேறிய வழி தவறாயினும் யாழ்ப்பாண இராச்சியத்தை இக்கட்டான ஒரு கட்டத்தில் காப்பாற்றியவன் என்பதாலும், நமது நாடு இறுதி வரை அந்நியர் வசப்படாது பாதுகாத்தவன் என்பதாலும் கவனிப்புக் குரியவனாகிறான். அவ்வகையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை சங்கிலி என்றொரு நாடகத்தை வழங்கு தமிழில் எழுதினார் அதனைத் தொடர்ந்து நம் மூத்த படைப்பாளி அமரர் வரதர் 'வாழ்க நீ சங்கிலி மன்ன' என்றொரு குறுநாவலைப் படைத்தார். நம் மூத்த எழுத்தாளர் அமரர் சொக்கன் அவர்கள் 'துரோகம் தந்த பரிசு' என்ற நாடகத்தை சங்கிலி மன்னன் குறித்துத் துணிவாகவும் சரியாகவும் படைத்தார். அவரைத் தொடர்ந்து செங்கை ஆழியான் 'நந்திக்கடல்' என்றொரு நாவலை தன் முதல் நாவலாகச் சிருஷ்டித்தார். ஈழநாடு பத்திரிகை தனது பத்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக நடாத்திய போட்டியில் கவிஞர் காரை சுந்தரம் பிள்ளையின் 'சங்கிலியம்' காவியப்போட்டியில் முதற் பரிசைப் பெற்றது. பல யாழ்ப்பாண நாட்டுக் கூத்துக்கலைஞர்கள் சங்கிலியனை நாட்டுக் கூத்தாக்கினர். மெட்றாஸ் மயில் சங்கிலியனை மேடை நாடகமாக்கினார். குறிப்பாக கலாபூஷணம் மு.அருள்பிரகாசம் 'மாவீரன் சங்கிலியன்' என நாட்டுக் கூத்தாக்கியுள்ளார் தென்னிந்திய எழுத்தாளரான கௌதம நீலாம்பரன் 'ஈழவேந்தன் சங்கிலியன்' என்றொரு நாவலை எழுதிப் பார்த்தார். இவை அனைத்தையும் படித்துச் சுவைத்த பின்னர் சொல்லத் தவறியவற்றை ஒன்றாக்கிப் புனைந்த காவியம் தான் இந்தநாவல்.

- ஆசிரியர்

ISBN 978-955-1624-18-7

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL:011 2330195